# மொழியின் வழியே

நா. பார்த்தசாரதி

தமிழ்ப்புத்தகாலயம்

# மொழியின் வழியே!

## நா.பார்த்தசாரதி


## தமிழ்ப் புத்தகாலயம்

# G3/8, (ப.எண்:15) மாசிலாமணி தெரு
பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600 017
✆ 434 5904

மின்னஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வலைத் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

மொழியின் வழியே!

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1961

இரண்டாம் பதிப்பு : மே, 2002

**விலை : ரூ. 40-00**

**MOZHIYIN VAZHIYE!**

by **NAA.PARTHASARATHY**

© Sundaravalli Parthasarathy

Second Edition : May, 2002

Pages : 144

Cover design : **K. UMA**

*

**THAMIL PUTHAKALAYAM**

G 3/8, (Old No. 15) Masilamani Street

Pondy Bazaar, T.Nagar

Chennai - 600 017

✆ 434 5904

E-mail : tamilputhakalayam@yahoo.com

tamilputhakalayam@vsnl.com

Website : http://expage.com/tamilputhakalayam

http://akilan.50mpegs.com

Price : **Rs. 40-00**

Laser Typeset : CHITHRA PRINTERS, Chennai - 15 ✆ 433 2272

Printed at : JAIGANESH OFFSET PRINTERS, Chennai - 4

# இந்தப் புத்தகம்

**நா.**பார்த்தசாரதி பல திறன்கொண்ட படைப்பாளி. அவரது பங்களிப்பு நவீன தமிழ் இலக்கிய உலகில் பல தளங்களில் தம் பங்களிப்பைத் தந்துள்ளன.

மொழியின் மீதும், தாய்மொழி வழியே கலை இலக்கிய, அறிவின் வளர்ச்சியிலும், நாட்டுமக்களின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர் நா.பா.

சுமார் 41 ஆண்டுகட்கு முன் அவர் தொலைநோக்குப் பார்வையுடன் சமகாலப் போக்கை விமர்சனம் செய்து அதைச் சீர்செய்ய வழியும் காண்பித்துள்ளார்.

கல்வியாளர்களும், அரசியல் சார்ந்தோரும் மிகவும் ஊன்றிப் படிக்க வேண்டிய நூலிது. ஆனால், இவர்களை மீறி தனிமனிதர்கள் வாசகர்களாகச் செயல்படவும் வேண்டும் எனத் தெளிவுடன் கூறியுள்ளார் இத் தொகுப்பில்.

ஒரு சில கட்டுரைகள் தவிர மற்ற எல்லாக் கட்டுரைகளுமே எளிய நடையில் தெளிவாக, சுருக்கமாகச் சேதி சொல்கின்றன. அந்த ஒரு சில கட்டுரைகள் தன் பாடுபொருளால், நடையால் அவர் பண்டிதருக்குப் படித்தவர் என்பதை மெய்ப்பிக்கின்றன.

தேவை கருதி இந்த அரிய தொகுப்பை மீண்டும் பதிப்பிப்பதில் பெருமை கொள்கிறோம்.

**- தமிழ்ப் புத்தகாலயம்**

# முன்னுரை

கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடந்து வந்த பின்பு இன்னும் முடிவற்றுத் தெரிகின்ற என்னுடைய நீண்ட இலக்கிய யாத்திரையில் தமிழ் மொழியின் வழியே நான் சிந்தனை செய்த இருபத்தொரு கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலில் அளிக்கிறேன். கால்கள் நடக்கின்ற வழியில்தான் மனமும் நடக்க வேண்டும் என்று நினைப்பதைவிட மனம் நடக்கிற வழியில் கால்கள் நடக்க வேண்டும் என்று நினைப்பது சிறந்தது. என்னுடைய மனம் நடக்கின்ற வழி எப்போதுமே தமிழ்வழி. உலகத்துச் சிந்தனைகளை எல்லாம் சிந்தித்தாலும் அவற்றைத் தமிழ்நாட்டு மனத்தோடு தமிழனாக இருந்து தமிழின் வழியே சிந்திக்க வேண்டும் என்பது என் குறிக்கோள். தமிழ் வழியில் நடக்காதவர்களுக்கு அருகே என்னுடைய கால்கள் நடக்க நேரும்போதும்கூட மனம் தமிழ் வழியிலேயே நடந்து கொண்டிருக்கும். கால்கள் எந்தெந்த வழிகளில் நடக்க நேர்ந்தாலும் மனம் ஒரே வழியில் நடக்கும்படி பழக்கிக் கொள்வதைத்தான் தவம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அந்தத் தவத்தைத் தமிழ்த்தவமாகச் செய்துகொண்டு வருகிறேன் நான். தொல்காப்பியர் முதல் சுப்பிரமணிய பாரதியார், பாரதி தாசன் வரை நீண்டு கிடக்கும் தமிழ்த் தலைமுறைகளின் பெரிய வழிகளைக் கடந்து வந்து, நிகழுகின்ற காலமும், வரவிருக்கும் காலமும் தமிழுக்குத் தருகின்ற - தரவிருக்கும் புதுமைகளை எதிர்நோக்கி இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறேன்.

இந்தத் தமிழ்வழி நடையில் வாசகர்களை எல்லாம் என்னோடு அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறேன். அந்த ஆசை காரணமாகத்தான் இந்த நூலுக்கு 'மொழியின் வழியே' - என்ற பெயரையும் சூட்டினேன். இதிலுள்ள கட்டுரைகளில் நடை,

அமைப்பு, கூறும் முறை ஆகியவற்றால் வேறுபடும் கட்டுரைகளும் உண்டு. மொழியின் வழியே மனம் சென்றபோது சிந்தனைக்குப் பொருளானது எதுவோ அதற்கேற்ப அவை அமைந்திருக்கும்.

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே வங்காளிகளுக்கு ஏற்பட்டிருக்கிற தாய்மொழியுணர்ச்சி நூறு ஆண்டுகளுக்குப் பின்பும் தமிழர்களுக்கு ஏற்படவில்லையே என்பதை நினைக்கும் போது - சிற்சில சந்தர்ப்பங்களில் நான் மனம் புழுங்கியது உண்டு. தமிழ் நன்றாகத் தெரிந்த தமிழர்களே தங்கள் தாய் மொழியில் உரையாடுவதற்கு வெட்கப்படுகிறார்களே!

இந்த நிலைகள் யாவும் மாறி நாட்டுணர்ச்சி, மொழியுணர்ச்சி பெருக வேண்டும். அப்படிப் பெருகுவதற்கு எதைச் சிந்தித்தாலும் நம்முடைய 'மொழியின் வழியே' சிந்திக்கப் பழக வேண்டும். மாஸ்கோவிலோ, அமெரிக்காவிலோ, லண்டனிலோ, உங்கள் கால்கள் எந்த நாட்டின் வழியில் நடந்தாலும் மனம் தமிழ் வழியில் நடக்கட்டுமே!

இதுவே என் வேண்டுகோள். இந்த வேண்டுகோளுடன் நானும் தமிழ் புத்தகாலயத்தாரும் சேர்ந்து இந்நூலைத் தமிழ்ப் பெருமக்களுக்கு அளிக்கின்றோம்.

அன்பன்,

**சென்னை** **நா.பார்த்தசாரதி**

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | மொழியும் பண்பாடும் | 7 |
| 2. | மொழியின் முன்னேற்றம் | 13 |
| 3. | மொழியும் வரலாறும் | 19 |
| 4. | மொழியும் போதனையும் | 24 |
| 5. | மொழியும் இசையும் | 28 |
| 6. | மொழியும் கவியும் | 33 |
| 7. | மொழியும் செவிப்பயனும் | 38 |
| 8. | மொழியும் மரபும் | 45 |
| 9. | மொழியும் மனத் தத்துவமும் | 52 |
| 10. | இரண்டு மணிமொழிகள் | 58 |
| 11. | மொழியில் ஒப்புநயம் | 65 |
| 12. | தென்னிந்திய மொழிகள் | 69 |
| 13. | மொழியும் நாடகமும் | 76 |
| 14. | மொழியும் சிறுகதைகளும் | 82 |
| 15. | மொழியும் புதின வளர்ச்சியும் | 88 |
| 16. | பத்திரிகைகளும் மொழி நடையும் | 99 |
| 17. | மொழியும் உரைநடையும் | 105 |
| 18. | மொழியும் சுவையும் | 113 |
| 19. | மொழியும் புதிய விளைவுகளும் | 122 |
| 20. | மொழியும் பொறுப்புணர்ச்சியும் | 129 |
| 21. | மொழியும் அறநூல்களும் | 137 |

# 1. மொழியும் பண்பாடும்

**வி**ளை பொருள்களின் வளமும் செழிப்பும் அவை பயிராகி முதிரும் புலங்களின் வளத்தையும் உரத்தையும் பொறுத்தனவாதல்போல மொழியின் தூய்மையும் பண்பாடும் அது வழங்கும் நிலத்தையும் பேசும் மக்களையும் பொறுத்தே முடிவு செய்வதற்குரியனவாக இருக்கின்றன. திராவிட மொழி இனங்களுள், பண்பாட்டிலும் தூய்மையிலும் நிகரற்ற முதன்மை தமிழ் மொழி ஒன்றற்கே உண்டு என்று முடிவு செய்த 'கிரியர்ஸனும்' 'கால்டு வெல்லும்' இதே அடிப்படையில்தான் தத்தம் மொழி ஆராய்ச்சியில் மெய்யுணர்ந்து வெளியிட்டிருக்கிறார்கள்.

மொழி ஆராய்ச்சி என்பது ஆழ்கடலின் அடிப்பகுதியில் முத்துக் குளிப்பதைப் போன்ற செயல். சிப்பியைக் கரைக்குக் கொணர்ந்தபின், விளைந்த நல்முத்தும் கிடைக்கலாம். வெறும் சிப்பியாகவும் போகலாம். எவ்வாறு இருப்பினும் செயல் அருமைப்பாடு உடையதே. ஒரு மொழிக்குப் பண்பாடு எவற்றால் ஏற்படும்? தூய்மை எவற்றால் ஏற்படும்? வழங்குகின்ற நாட்டையும், அதில் வாழும் மக்களையும், பொறுத்தது என்பது தொகுதியான விடை. அந்த விடையை விவரித்தாலொழிய இந்தப் புதிர் விடுபடாது. வேறொரு விதமாக நோக்கினால் தூய்மையும் பண்பாட்டினுள் அடங்கி விடக் காணலாம். ஆனால், ஒருமை முடிப்பினுள்ளும் பின்ன வகையாலே பன்மை கோடல் பொருந்துமாறுபோல இவற்றையும் இரண்டாகக் கொண்டு ஆராய்தல் பிழையன்று.

மரபும், இலக்கணமும், தூய்மைக்கும்; வழக்கும் இலக்கியமும் பண்பாட்டிற்கும் காரணமாக நின்று, பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் தகுதியைப் பெறுகின்றன. வழக்கு

இலக்கியம் என்று வரும்போதும் கற்றோர் வழக்கு, கற்றோர் இலக்கியம் இவைகளையே தகுதியுடையனவாகக் குறிப்பிட வேண்டும். கல்லாதார் உரையும், பனுவலும், முறை பிறழ்ந்த இழி வழக்குகளும் (Illiterate Usage) மேற்கோள் ஆகமாட்டா. மொழியின் பண்பாட்டை இவை காரணமாகக்கொண்டு ஆராய்தலோ, குறைந்த தரத்தினதாக முடிவு செய்தலோ பொருந்துவது அன்று. மல்லிகைப் பூங்காவின் பாங்கர் ஆங்காங்கே படர்ந்த சிற்சில நெருஞ்சிச் செடிகள் இருந்தாலும் பூங்காவின் கவின் அதனாற் குன்றுவதில்லை. கல்லாதார் வழக்கும், நூலும் பண்பட்ட மொழியின் கவினைச் சிதைத்து விட இயலாது. இதே நேரத்தில் மொழியின் பண்பட்ட வளர்ச்சி நிலையை ஆராயும்போது இவை சான்றாகவும் இருக்க இயலாதனவாகின்றன.

**"வாளை மேய்ந்த**
**வளை கோட்டுக் குதிரை**
**கோழிலை வாழைக்**
**கொழுமடல் உறங்கும்**
**ஊரன் செய்த கேண்மை**
**தேரை வாலினும் பெரிதாகின்றே"**

(யா - விருத்தி)

என்பன போன்ற பனுவல்கள் பொருள் பயவாத வெற்றுச் சொற்கள் கூடி விளைந்த விளைவே. இவை மரபு, இலக்கணம், வழக்கு, இலக்கியம் ஆகிய எதனோடும் பொருந்தாதவை. எனவேதான் கல்லாதார் விரித்த பனுவலும் தெரித்த உரையும் மொழியின் பண்பாட்டை நிறைக்கப் பயன்படல் உறுதியாக இயலாதென்றும் குறைக்குந் திறமும் இல்லாதன என்றும் விலக்கப்பட்டன.

மரபைப் போற்றுதல் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து வகையானும் இன்றியமையாதது. இவற்றுள்ளும் வழக்கு, இலக்கியம் ஆகிய இரண்டுக்கும்

நெருக்கமான பொது இயல்புடையது சொல் மரபு. **'கிளவி யாக்கம்'** என்றும் **'மொழி மரபு'** என்றும் தொல்காப்பியரும், நேமிநாதமுடையாரும், பெயரிட்டுக்கொண்டு இலக்கணம் வகுத்த அடிப்படை நோக்கம் இதுவே ஆகும். காற்றையும் நீரையும் பெற்று வளர்ந்து கிளைத்து வளமடைந்த பழுமரம் ஒன்றிற் கனியும் கனியைப்போல, மரபையும் இலக்கணத்தையும் போற்றி ஒழுகும் மொழியில் பண்பாடு கனியும். கனிக்கு முன் பூ, காய் ஆகிய இரு தொடக்க வடிவங்கள் நிகழுவதுபோல வழக்கும் இலக்கியமும் ஆகிய சான்றோர் மொழி ஆட்சிகளை மூலமாகக்கொண்டே மொழியின் பண்பாடும் உருப்பெறுகின்றது.

மலை முகட்டில் அருவியாக வீழ்ந்து சமவெளியில் ஆறாகப் பாய்ந்து கடலோடு கலக்கும் நதி ஒன்றில் மலையிலிருந்தே உருண்டுவந்த கரடுமுரடான சிறு பாறைக் கல் ஒன்று நாளடைவில் உருண்டு திரண்டு உருவத் திரட்சி யடைந்து வட்டச் சிறு கல்லாக மாறிவிடுகிறதல்லவா? இதேபோலக் காலத் தொன்மையாலும் பழவழக்கினாலும் ஆன்றோர் பழக்க மிகுதியாலும் கூட மொழி பண்படுவதுண்டு. ஆயினும் ஒன்றுமட்டிலும் உறுதி. சான்றோர் இலக்கிய ஆட்சி இல்லாமல் பன்னெடுங்காலமாக மக்கள் வழக்கு ஒன்றினளவிலேயே நிலவிவரும் மொழிக்குப் பண்பாடு உயர்ந்த தரத்தினதாக இருக்கமுடியாது. மொழியின் நிலைத்த வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் மக்கள் வழக்கு இன்றியமையாதது ஆவதுபோலவே அதன் தூய்மைக்கும் பண்பாட்டிற்கும் மரபு இலக்கணம், பழவழக்கு, இலக்கியம் ஆகியவை இன்றியமையாதன ஆகின்றன.

**"கண்ணுதற் பெருங்கடவுளும்**
**கழமோ டமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்தாய்ந்த**
**வெம் பசுந்தமிழ்"**

(திருவிளையாடல்)

**சிறைவான் புனல் தில்லைச்**
**சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும்**
**உறைவான் உயர்மதிற்**
**கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்**

(திருக்கோவையார்)

என அடைமொழி தொடுத்துப் பாடிய புலவர்கள் வாளா நிற்கத் தொடுத்துச் சென்றார்களில்லை. 1) 'பண்ணுற' என்றும், 2) தெரிந்து ஆய்ந்த; என்றும் 3) பசுந்தமிழ் என்றும் நிரல் படச் சொற்களைத் தொடுத்திருக்கும் முறையில் 1) தமிழ் மொழியின் உயர் தனிச் செம்மொழியாகிய பண்பாட்டையும், 2) பழவழக்குகளையும் இலக்கியங்களையும் தெரிந்து ஆராய்ந்து போற்றவேண்டிய கடமையையும், 3) கவர்ச்சி நிறைந்த தூய்மையையும் பரஞ்சோதி முனிவர் சிறப்பாகக் கூறிச் செல்கின்றார். ஒளியாகப் பண்பட்ட நிலையையும், குண இயல்பாக இனிமையையும் அடைமொழிகளாக்கி **'ஒண் தீந்தமிழ்'** என்று மாணிக்கவாசகர் கூறுகிறார்.

**மரபும்** இலக்கணமும் ஏதுக்களாக வருகின்ற தூய்மை தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் முற்றிலும் அமைந்திருக்கும் ஒன்றே. புதிய புதிய இலக்கண ஆசிரியர்கள்கூடத் 'தானெடுத்து மொழிதல்', 'ஆசிரிய வசனம்', 'பிறன் கோட் கூறல்' என உத்திவகையால் மரபை மீறாதிருக்கும் கட்டுப்பாட்டைத் தமிழ் மொழியிற் காண்கிறோம். ஒரு மொழியின் பண்பட்ட நிலைக்கு இதனினும் மிக்க சான்று வேறொன்றும் வேண்டுமோ?

**"முன்னோர் மொழி பொருளே**
**யன்றி யவர் மொழியும்**
**பொன்னே போற் போற்றுவ**
**மென்பதற்கும் - முன்னோரின்**

**வேறு நூல் செய்து மெனும்**
**மேற் கோளி லென்பதற்கும்**
**கூறு பழஞ் சூத்திரத்தின் கோள்''**

(நன்னூல்)

என்று, மரபையும் ஆன்றோர் இலக்கண இலக்கிய வழக்கையும் போற்ற வேண்டுமென்று தன் நூலைக் கற்போருக்குக் கட்டளை யிட்டுரைக்கின்ற முறைமையுடையவனாக ஒவ்வொரு தமிழ் இலக்கண ஆசிரியனும் இருப்பானாகில், அந்த மொழியினது பண்பாடும் தூய்மையும் விள்ளாமலே விளங்குவனவாம்.

இனி உறுதிப் பொருளைத் தொகுத்துக் கதை வடிவில் விவரிக்கும், காப்பியங்கள், அற நூல்கள், தனி இலக்கியங்கள் முதலிய இவைகள் மலிந்து விளங்குவதும் பண்பட்ட மொழி என்பதற்குச் சான்றாகும். கணக்கு, தொகை, பாட்டு, காவியம் என முறையுணர்ந்து நூல்களைத் தொகுத்துப் பிரித்த திறனும் ஒருவாறு பண்பாட்டையே சுட்டி நிற்கின்றது. பழையன கழிதல், புதியன புகுதல், என்ற காலகதிக்கு ஏற்ப மொழியின் வளர்ச்சி தடைப்படாமலிருக்குமாறு காப்பாற்றிக் கொண்டு, வருமுன்னர்க் காக்கும் இலக்கண வழக்குரிமையும் இதையே வற்புறுத்துகின்றது. சொற்களின் பரப்பைக் (Strength of Words) கொண்டு மொழியின் வளர்ச்சியையும் பண்பாட்டையும் ஆராயலாம் என்று மேலைநாட்டு மொழியியல் நூலார் (Phylologists) கருதுவர். அவ்வாறு ஆராய்ந்தாலும் தமிழ் மொழியின் பண்பாடு தலை சிறந்த ஒன்றாகவே விளங்குகின்றது.

**''வானம் அளந்த**
**தனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழியவே**

**வானம் அறிந்த**
**தனைத்தும் அறிந்து**
**வளர் மொழி வாழியவே''**

என்று பாரதி தமிழ் மொழியின் அளப்பரிய சொற்பரப்பிற்குச் சான்றுகூறும் விளக்கமாகப் பாடி வைத்திருக்கின்றான். மண்ணுலகை நிழற்றி நிற்கும் வானத்தின் ஆட்சிக்குட்பட்ட உலகியற் பொருள்கள் யாவற்றையும் தன் சொற்பரப்பால் அளக்கும் வண்மை பெற்ற மொழி தமிழ் என்பது கவிஞன் கருத்து. இன்றோ சிலர் 'தமிழில் ஏதோ சில கலைகளுக்குச் சொற்களில்லை' என்று மயங்கியுரைத்துத் தம்மறியாமையைப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அது பிழையன்றோ?

ஆகவே மொழியின் பண்பாடு மரபு, இலக்கணம், வழக்கு, இலக்கியம் ஆகிய இவற்றாலும், இவை காரணமாக எய்தும் தூய்மையாலும் நிர்ணயிப்பதற்குரிய ஒன்றென்று அறிய முடிகின்றது. தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் அந்த 'ஒன்று' நிறைந்தே இருக்கிறது.

❑

# 2. மொழியின் முன்னேற்றம்

பழமையும் பண்பாடும் பொருந்திய எந்த மொழியும் தனது மரபிலிருந்து விலகியபின் முன்னேறுவது என்பது இயலாத காரியம். மரபுடன் கைகோத்து நடவாத மொழி தனது கட்டுக் குலைந்து சீரழிவது ஒருதலை. பண்பட்ட இலக்கிய மொழிகளுங்கூட (Classical Languages) மரபைப் போற்றியே வாழ வேண்டும். காலத்திற்கு ஒவ்வாத சில வரையறைகளைக் காலத்திற்கேற்பச் சீர்திருத்திக் கொள்வது தவறன்று. அதுவும் மொழி வல்லுநர் துணையின்றிச் செய்யப்படுமானால் தவறு தான். புலனெறி வழக்கும், உலக வழக்கும், ஆகிய இருவகை வழக்குகளும் மொழியோடு நேரடியான தொடர்புடையவை. புலனெறிவழக்கு மொழியின் ஆக்கத்திற்குரிய நூல்களை இயற்றி மொழியை மரபு பிறழாமற் காக்கவேண்டும். உலக வழக்கு அன்னோர் நூல்களைப் பொன்னே போற் போற்றி மேற்கொண்டு வாழ வேண்டும். அங்ஙனம் ஒன்றுபட்டு வாழாது அறிவும் நாடும் பகை கொள்ளுமாயின் அவ்விரண்டின் பகை யினாலும் தடை செய்யப்படுவது மொழியின் முன்னேற்றமே யாகும். எனவே மொழியின் முன்னேற்றமும், அறிஞருலகமும் மக்களுலகமும் ஒன்றிற்கு ஒன்று முரண்பாடின்றி நேயமுறும் போதுதான் ஏற்பட முடியும் என்று அறிகிறோம்.

ஒரு பண்பட்ட மொழியின் அடிப்படைக் கருவிகள் இரண்டு. ஒன்று, எழுத்திலக்கண வரையறைகள் (Ortho graphy). மற்றொன்று, எழுத்திலக்கண வரையறைகளாலாகிய சொல்லிலக்கண வரையறைகள். இவ்விரு அடிப்படைக் கருவிகளும் தோன்றிய காலந்தொட்டுத் திண்மையாக அமையப் பெற்ற மொழிதான் இலக்கிய மொழியாகின்ற தகுதியைப் பெறமுடியும். பன்னெடுங்காலமாக வழங்கி, வழங்கிக் குறையாப் பயிற்சியும் நிறைவான வழக்கும் பெற்றுப் பெற்றுத் தான் மொழி முறையாகப் பண்படுகிறது. காய்ச்சக் காய்ச்சச்

சுவை பெருகும் பால்போலத்தான் மொழியும். நாட்டின் இயற்கை, செல்வம், விளைவு முதலிய வளங்களும், சூழ்நிலையும் ஆகிய இவைகளுங்கூட நுணுகி ஆராய்ந்து பார்க்குங்கால் ஓரளவு மொழி வளர்ச்சிக்கும், அதன் முன்னேற்றத்திற்கும் காரணங்களாக அமையக்கூடிய தகுதிகளைப் பெறுகின்றன. நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு உடல் உழைப்பால் வாழும் மக்களைக்கொண்ட நாட்டில் எஞ்சிய பத்து விழுக்காடு மக்களுக்கே மொழியைப் பற்றியும், மொழியின் முன்னேற்றத்தைப் பற்றியும் எண்ணுதற்கு நேரமிருக்கிறது. எனவே, நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையும் ஓரளவு மொழியின் வளர்ச்சிக்கும், வளர்ச்சியின்மைக்கும் காரணமாக அமையத்தான் செய்கிறது. மொழியைப் பற்றிச் சிந்திப்பதற்கென்று சிறிதளவும் நேரமில்லாத பொருளாதாரக் குறைவுள்ள மக்கள் வாழும் நாட்டில் மொழி எங்ஙனம் முன்னேற முடியும்? பண்டைத் தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் முன்னேற்றத்தையே எந்நேரமும் கருதும் புலவர்களும் புரவலர்களும் இருந்தனரென்றால் அன்றைய நாட்டில் பொருளாதார வளம் ஓங்கிப் பாங்குற்றிருந்ததே காரணம். அன்று மொழிக்கென்று பலருடைய வாழ்வு செலவிடப்பட்டது. தொல்காப்பியர் வாழ்ந்த பெருவாழ்வின் பயன்தான் இன்றைக்கு வாழ்கின்ற தமிழ். எனவே, ஒரு மொழி முன்னேற வேண்டுமானால், மொழியை ஆர்வத்தோடு பேணுகின்ற பெருமக்கள் மிகுதியாக இருக்கின்ற நாடாக அம்மொழி பயிலும் நாடு இருக்கவேண்டும். அது வளர்ச்சிக்கு முதற்காரணம்.

இனி மொழியின் தோற்றத்தைப் பற்றியும் எழுத்துக்களின் தோற்றத்தைப் பற்றியும் சிறிதளவு விவரிப்போம்.

**''மொழிமுதற் காரணமாம்**
**அணுத்திரள் ஒலி எழுத்து**
**அது முதல் சார்பு எனவிரு வகைத்தே''**

(நன்னூல்)

மொழிக்கு முதற்காரணம் அணுத்திரள் ஒலி. அவ்வணுத்திரள் ஒலியினைக் காரணமாகவுடைய மொழியின் காரியம் எழுத்து. எழுத்தின் காரணம் மொழி. வரிவடிவெழுத்து ஒரு மொழிக்கு இன்றியமையாதது என்பதை நமது இலக்கண நூல்கள் தக்க சான்றுகளோடு பொருத்தமுற விளக்குகின்றன. அவை வருமாறு:-

**"கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்**
**சட்டகம் போலச் செவிப்புல வொலியை**
**உட்கொளற் கிடும் உருபாம் வடிவெழுத்தே"**

(அகத்தியம்)

**காணப்பட்ட உருவம் எல்லாம்**
**மாணக்காட்டும் வகைமை நாடி**
**வழுவில் ஓவியன் கைவினைபோல**
**எழுதப்படுவது உருவெழுத்தாகும்**

(யாப்பருங்கல விருத்தி)

கண்ணுக்குப் புலனாகாத கடவுளுக்கு வடிவு முதலியவற்றால் மக்கள் உருக்கொடுத்து வழிபடுவதுபோலவும், கண்ணுக்குப் புலனாகின்ற உருவங்களை வெளிப்பட விளக்கும் ஓவியங்கள் போலவும், செவிப்புலனாகின்ற ஒலியைக் கட்புலனாகின்ற உருவாகக் காட்டுவதே வடிவெழுத்தாம். ஆகவே, ஒரு சிறந்த மொழியின் குன்றாத முன்னேற்றத்திற்கு அதன் எழுத்தமைப்பும் காரணமாக அமைகிறது என்பது யாவராலும் மறுக்க முடியாத தொன்று. இவ்வாறு தோன்றிய எழுத்துக்கள் ஒன்றும் பலவும் தம்முட் கூடும் கூட்டமே மொழி. ஓரெழுத்தாலேயே ஒரு மொழியும் ஆக முடியும். இரண்டு எழுத்துக்களாலும் ஒரு மொழி ஆக முடியும். இரண்டுக்கு மேற்பட்ட பல வெழுத்துக்களாலும் ஒரு மொழி ஆகமுடியும்.

*"ஓரெழுத் தொருமொழி*
*ஈரெழுத் தொருமொழி*
*இரண்டிறந் திசைக்குந்*
*தொடர்மொழி யுளப்பட*
*மூன்றே மொழிநிலை*
*தோன்றிய நெறியே"*

(தொல்காப்பியம்)

*"எழுத்தே தனித்தும்*
*தொடர்ந்தும் பொருள்தரிற்*
*பதமாம், அதுபாகப்*
*பதம் பகு பத மென*
*இருபாலாகி இயலுமென்ப"*

(நன்னூல்)

ஆசிரியர் தொல்காப்பியர் கூறாத பகாப்பதம், பகுபதம் என்னும் பிரிவுகளை நன்னூலார் ஏற்படுத்தினார் (Indivisible Words and divisible Words). ஆக மொழி எழுத்தாக உருவம் பெற்று எழுத்துக்கள் கூடி மொழியாக முன்னேறியிருக்கின்றன. உலக வழக்கும் செய்யுள் வழக்கும் அதன் முன்னேற்றத்திற்கு ஊற்றமாகத் துணை செய்திருக்கின்றன. அவற்றின் துணையால் மொழியின் ஆற்றலும், சொல்வளமும் பல்கி வளர்ந்திருக்கின்றன. எவற்றிற்கும் அசையாத திண்மையை உடையதாக மொழியை ஆக்கிய அரியபெரிய செயல் மக்களும் புலவரும் மனமகிழ்ந்து செய்த ஒன்றேயாகும். இனி எதிர்காலத்தில் மொழியின் மரபு கேடுறாதவாறு அதனை முன்னேற்றுவது எப்படி என்பதைப் பற்றிய செய்திகளைக் காண்போம்.

மொழியை எழுதுவதிலும் பேசுவதிலும் மிகுதியான கவனம் கொள்ளவேண்டும். முழுமுதலாகிய இறைவனிடம் பக்தி செலுத்துவதுபோல் மொழியின் மேல் பயபக்தி ஏற்பட வேண்டும். கடவுளைப்போல் முதன்மை வாய்ந்தது ஆகும்

மொழி. மொழியுணர்ச்சியற்ற மக்கள் வாழ்கின்ற நாடு நாகரிகத்திலோ, அறிவு வளர்ச்சியிலோ பண்படவே முடியாது. மொழிப்பற்றின்றி விழிப்பற்றுக் கிடக்கும் மக்கள் விலங்குகளினும் இழிந்தவர். தாய் மொழியை எண்ணி எண்ணி ஏற்றமுறவும் முன்னேற்றவும் மறந்துவிடுகின்ற சமுதாயம் வாழத் தகுதியற்றது. தாய்மொழியில் பிழையற எழுதவும் பேசவும் தெரியாதவர்கள் கடமை தவறிவிட்டவர்கள்; கடமையை மறந்தொழிந்தவர்கள். தாய் மொழியை வளரச் செய்வது பெற்ற தாய்க்கு உற்ற துணையாய்த் தொண்டு செய்து பேணுவது போன்றது. பெற்ற தாய் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பாள். மொழித்தாய் எழுத்தூட்டி, மொழிகாட்டிப் புகழ் நாட்டுவாள். உழைப்பாளி முதல் செல்வர் வரை யாவராயினும் சரி, மொழித் தாய்க்குப் புதல்வரே. புதல்வர் பத்துத்திங்கள் சித்தம் குளிரச் சுமந்து பெற்ற உத்தமத் தாயை மறத்தல் மாயாப் பெரும் பழியாய் ஓயாது வருத்துமன்றோ? பிழையற எழுதுதல், பிழையறப் பேசுதல், மரபு குலையாது நூலியற்றல், தான்தோன்றிகளாகாது, ஆன்றோர் சென்ற நெறியைப் பாதுகாத்தல், புதிய முறையைப் பழைய முறைக்குக் கேடின்றி, ஏற்றுக் கொள்ளுதல் முதலிய செயல்களாலல்லவா ஒரு மொழி முன்னேற முடியும்? கடவுளைப்பற்றி ஆராய்வார்க்கும் அறிய முடியாத பேராற்றல் வாய்ந்தவராக அவர் திகழ்வதுபோல மொழியும் தனது பொருட்காரணம் தோன்றாது நிற்கும் பெருமைசால் பேராற்றல் வாய்ந்தது. ''மொழிப் பொருட்காரணம் விழிப்பத் தோன்றா'' என்று பேராசிரியர் தொல்காப்பியர் இந்த உண்மையை வெளிப்படுத்துகிறார். எனவே மொழி என்பது ஆதியந்தமற்ற கடவுளைப் போன்றது என்ற கருத்து மீண்டும் வலியுறுத்தப் படுகிறது.

ஆகவே, மொழி பக்தியோடு பேணி வளர்த்தற்குரியது. வளர்க்கும் மக்கள் இறைவன் அடியவர்கள் போல்வார் ஆவர்.

இனி, மொழி முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்ட கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள் தோன்றவேண்டும். ஊர் தோறும் மொழி வளர்ச்சி மன்றங்கள் ஓங்கி வளரவேண்டும். அரசியல் துறையோடு ஒன்றுபட்ட முறையில் முன்னேறும் போதுதான் மொழி தனக்கென ஓர் அழியாத இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். எந்த ஒரு மொழியும் அரசியலோடு இசையாத வரை தனித்து முன்னேற முடியாது. மொழியின் மதிப்பும் தரமும் பெருகுவது அரசியலில் இடம் பெறுகின்ற போதுதான். ஆங்கிலம் இன்று உலகப் பெருமொழியாக அமைந்துள்ளதென்றால் அதற்கு முதன்மையான காரணம் முதலில் அது அரசியல் மொழியாக அமைந்ததுதான் ஆகும். எனவே, இதுகாறுங் கூறிய கருத்துக்களால், மொழியின் முன்னேற்றம் பிழையற எழுதுவதனாலும், பிழையறப் பேசுவதனாலும் மொழி முன்னேற்றக் கழகங்கள், நிலையங்கள் முதலியவற்றாலும், அரசியலோடு இயைபு பெறுவதனாலும், மக்கள் கடமையையுணர்ந்து மொழியைப் பேணுவதனாலும் ஏற்பட முடியும் என்று அறிகிறோம். ஆகவே, மொழி முன்னேற்றம் நாகரிக மக்கள் வாழும் தமிழ்நாடு போன்ற நாடுகளுக்கு உடனடியாக வேண்டப்படுவதொன்று. தமிழ் மக்கள் நல்லதொரு புத்துணர்ச்சி பெற வேண்டுமாயின் இம்முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். □

# 3. மொழியும் வரலாறும்

முகமதியப் பேரரசர் சிலர் சுவடிகளைச் சேகரித்து அரும்பெரும் நூல் நிலையங்கள் வைத்திருந்தனர் என்றும் நாலந்தாவில் அர்ஷவர்த்தனர் பல்கலைக் கழகங் கண்டார் என்றும் பல்லவர் காலத்தே காஞ்சியில் கடிகைகள் (மொழிக் கல்லூரிகள்) இருந்தன என்றும் வரலாற்றிலே நாம் படித்து மகிழ்கிறோம். தமிழ் வேந்தர் பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக மதுரையில் தமிழ்ப் பல்கலைக் கழகச் சங்கம் அமைத்துப் பேணி வளர்த்துப் பெருமை கொண்டதையும், அச்சங்கத்தில் அமுத இளமையும் அழகு நலமும் கொண்ட நூற் செல்வங்கள் பல அரங்கேறி உரங்கொண்டதையும் இந்நாட்டு வரலாற்றில் நாம் அறிவதில்லை. அறியவுங் கூடுவதில்லை. தமிழகத்து இளஞ்சிறார்க்கும் இளைஞர்க்கும் கற்பிக்கப் பெறும் வரலாற்றில் நூற்றிலே ஒரு குறும்பகுதியாதல் தமிழ் நாட்டைப் பற்றியதில்லை. அவர்கள் கற்கும் வரலாறுகள் யாவும் அவர்கள் கண்டும் கேட்டும் சூழ்ந்தும் இராத - இனியும் காணவோ, கேட்கவோ இயலாத இடங்களைப் பற்றியவையே. இதன் பயனாகக் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்கும் மாணவர்களைப் பொறுத்தவரை வற்புறுத்திக் காணச் செய்யும் ஒரு வகைப் பகற்கனவாக ஆகிவிட்டது வரலாறு. விண்டுசொல்லப் புகுந்தால் வேதனைக்குரிய செய்தியாகும். தமிழ்நாட்டு வரலாறு தமிழரில் பெரும்பாலோர் அறியாத அறிய முடியாத ஒன்று ஆகிவிட்டது. இது வருந்தத் தக்கதே!

## வரலாற்று உண்மைகள்

தமிழ் நாட்டு வரலாறு உலக வரலாறுகள் எவற்றிற்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பைத் தன்னகத்தே கொண்டதாகும். இது சம்பிரதாயத்திற்காகச் சொல்லுகின்ற சிறப்பன்று.

சான்றுகளோடு உறுதி செய்யக்கூடியது. போர், பூசல்களையும், அரசாட்சிக்கு இருவேறு வேந்தர் போட்டியிடுதலையும், ஒழுக்க வரையறை கடந்த அரசியற் சூழ்ச்சிகளையுமே பெரும்பாலும் உலக வரலாறுகள் பரக்கவிரித்துப் பேசுகின்றன. தமிழகத்து வரலாற்றில் இவைகட்கு ஒரு சிறிதும் இடமில்லை என்று சொல்ல வரவில்லை. ஆனால், இவைகள் மிகக் குறைவான அளவிலும் ஒழுக்கத்தையும் அறவுணர்ச்சியையும் வற்புறுத்தும் உண்மைகள் நிறைந்த அளவிலும், தமிழகத்து வரலாறு விளங்கும். ஒழுக்கமும், அறமும், அவையிரண்டுங் கலந்த பண்பாடும் உலகின் வேறு எந்த வரலாற்றிலும் இவ்வளவு கலந்ததுங்கூட இல்லை. போரிலும் கூட, வடக்கிருந்து மானங்காக்க உயிர்விடும் அரசர்களையும், பகைவன் கை நீர் பருக நாணி உயிர் துறந்த கணைக்கால் இரும்பொறைகளையுமே நாம் காண்கிறோம்.

## வரலாற்றின் படிப்பினை

நம்முடைய வரலாறு ஒழுக்கத்தையும் அற நூல்கள் விவரிக்கும் உண்மைகளையும் எடுத்துக் காட்டுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அதில் மனிதப் பண்பு மாண்புற்று விளங்குகிறது. அங்கே வாழ்க்கையை மலர்வனமாகக் காண்கிறோம். வெறும் போர்க்களமாகக் காண்பதில்லை. பகைவர்க்குப் பணியாத மன்னர் புலவர்க்குத் தணியக் காண்கிறோம். கண்ணிமைப்பதையும், போரில் முதுகிலே புண் படுதலையும் இழிவாகக் கருதும் பெருமிதப் பண்பு நமது வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. **பதிற்றுப் பத்தும், புற நானூறும்** எண்ணற்ற தமிழரசர்களையும் புலவர்களையும், காலத்தை வென்று நின்றுகொண்டே இன்றும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றன. அறவழியை வேலியாகக் கொண்டு அமைக்கப்பட்ட வாழ்வுப் பூஞ்சோலை போலப் பொலிவுடையது நமது வரலாறு. சிறு குழந்தைக்குக் கைப்பு

மருந்து கொடுக்கும்போது அதை ஒரு வெல்லக்கட்டிக்கு நடுவில் வைத்துக் கொடுப்பது வழக்கம். அதுபோலவே நேர்மையையும், பண்பாட்டையும் சூழ அமைத்துக் கொண்டு விளங்குகிறது தமிழகத்தின் வரலாறு. அறநூற் கருத்துக்களை நேரிடையாகக் கூறுவதினும் வரலாற்றில் அவை இயல்பாகவே அமைந்திருக்கும்போது அவற்றை எளிதாகக் கற்பித்துவிட முடியும். அம்முறையில் கற்பிக்கத் தகுந்த பேருண்மைகள் பொருந்திய வரலாறு எது என்று ஆராயும்போது முடிவாக முன் நிற்பது நம்முடைய பழவரலாறு ஒன்றுதான். வரலாறு என்றால் அது பிறப்பு இறப்புக்களின் பட்டியலாகவோ போரில் வெற்றி தோல்விகளின் விளக்கமாகவோதான் இருக்க வேண்டும் என்று ஒருவிதமான விரும்புதலற்ற நிலை யடைபவர்கள் தமிழகத்து வரலாற்றைக் கற்க முற்பட்டால் அந்த நிலைக்கு இடமிருக்காது என உறுதியாகச் சொல்லலாம்.

## முறையான வரலாறு

கடந்த காலத்தின் அடிச்சுவடாக நிகழ் காலத்திலும் அழியாத வழிகாட்டியாக இருக்கும் இயல்புள்ளதே சிறந்த வரலாறு. தமிழகத்தின் வரலாறு இப்படி வழிகாட்டியாக, அமைவது வரலாறு என்று நாம் ஏதும் எழுதிக் கொள்ள வில்லை. ஆனாலும் நமது வரலாறு இலக்கியங்களைத் தழுவி இருந்துகொண்டே அழிவை விலக்கி வருகின்றது. அதைத் தனி வரலாற்று நூல்களாக மாற்றுகின்றபோது நாம் மேற்கூறிய 'பட்டியல் முறையிலே' எழுதுவதில் பயனில்லை. நமது பழைய வரலாறு நிகழ்காலத்தின் புதிய சமுதாயத்திற்கும் முன்னோடியாகி, வழி வகுக்கும் முறையில் அமைய வேண்டும். அதுவே வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய வரலாற்றின் முறை ஆகும். வாழ்விற்குப் பயனற்ற வரலாறு காட்டுமல்லிகையைப்போல யாருங் காணாமல், நுகராமல் மலர்ந்து மண்ணில் உதிர்ந்து அழிந்துபோகக் கூடியது. அது வரலாறு அன்று. நிகழ்ச்சிப் பட்டியலே.

இங்கே வேறொரு செய்தியை நினைவூட்டுவது விலக்கமுடியாதது ஆகின்றது. வெளி நாட்டு ஆசிரியர்கள் எழுதியதனால் இந்திய வரலாறு அழியாத அடிமை முத்திரை ஒன்றைப் பெற்றது. அதுதான் கி.பி. - கி.மு. என்ற கால முற்பாடு பிற்பாட்டிற்குரிய அடையாளம். இந்த நான்கு எழுத்துக்களை வைத்துக்கொண்டு இந்திய வரலாற்றிலே எவ்வளவு குழப்பங்களை எல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவு குழப்பங்களையும் அவர்கள் செய்திருக்கின்றார்கள். தங்கள் சொந்த நாட்டின் மனநிலையோடு அவர்கள் இந்திய நாட்டின் வரலாற்றைக் கருதினார்கள். அதன் விளைவு?... எனைத்தானும் இந்திய வரலாற்றோடு தொடர்பில்லாத கி.பி. - கி.மு. அடையாளங்களை இட்டுத் தமக்குத் தோன்றிய யாவற்றையும் எழுதிப் போயினர். தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் சிலர், 'கட்டுத் தறியில் பல நாட்களாகக் கட்டப்பட்டிருந்த ஒரு கன்று அவிழ்த்து விட்டபின்பும் தான் கட்டுண்டிருப்பதாகவே எண்ணி நிற்பது போலத் தமிழக வரலாற்றையும் இதே அடையாளங்களை இட்டு எழுதுகின்றனர். 'திருவள்ளுவருக்கு முன்', 'திருவள்ளுவருக்குப் பின்' என்று எழுதினால் என்ன குறைந்து போகின்றது? இந்திய வரலாறு பெற்ற அடிமைத்தளையை விடுபட்ட பின்பும் தமிழ் வரலாற்றிலே தமிழ் உணர்வு வளர்ந்துவரும் இக்காலையில் இட்டுப் பார்ப்பது கூடாது. இது தேவையில்லாத ஒன்றும் ஆகும் எனலாம்.

## வரலாறும் வாழ்வும்

இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து வரலாறு எழுதும்போது வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமான பயன்களைத் தருகின்ற முறையில் அவற்றை எழுத வேண்டும். தமிழகத்திற்கு வேண்டிய வரலாறு இந்த வகையில் தனிச் சிறப்புடன் அமையவேண்டுமே அன்றி கி.பி. - கி.மு.

இவைகளைக் கொண்ட கணக்கு ஏடுகளாக அது இருந்து விடக் கூடாது. நம்முடைய தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் இன்றியமையாதது என்று விரும்புவார்களானால், தொ.மு. (தொல்காப்பியருக்கு முன்) தொ.பி. (தொல்காப்பியருக்குப் பின்) தி.மு. (திருவள்ளுவருக்கு முன்) தி.பி. (திருவள்ளுவருக்குப் பின்) என்றெல்லாம் எழுதிப் பழைய அறிஞர்களுக்கும் பெருமை கொடுக்கலாமே? அதை விட்டுவிட்டு இந்திய வரலாற்றுக்கும் தமிழ் வரலாற்றுக்கும் தொடர்பு சிறிதுமற்ற வேறு இலச்சினைகளை இவர்கள் இடுவானேன்? இங்கே எவரையும் தவறுபடக் கூறவில்லை! இது பொருந்தவில்லையே? இவ்வாறு செய்தால் என்ன? என்ற அளவில்தான் மேற்கண்ட கருத்துக்களை எழுதியுள்ளதன் நோக்கம் அமையும். முடிவாக, ஒழுக்கமும் அறவழியும் பண்பாடும் செறிந்து பழுத்த தமிழக வரலாறு அதனதன் நிலைக்கு இழிவு வராத முறையில் வாழ்க்கைக்கு வழி காட்டுந் துறையில் எழுதப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரை வேண்டுவது.

❑

# 4. மொழியும் போதனையும்

## ஏன் கூடாது?

கல்லூரிகளில் தமிழைப் போதனா மொழி ஆக்குவது கூடுமா? கூடாதா? கல்வித் துறையிலே பொறுப்பும் நெடு நாளைய அநுபவமும் ஆற்றலுங்கொண்ட பெருந்தகையாளர் பலர் இந்த வினாவைப் பொறுத்தமட்டில் மதில்மேற் பூனைகளாக ஒரு முடிவுக்கும் வர இயலாமல் மயங்கி நிற்கின்றனர். அவர்கள் ஏன் தமிழுக்கு ஏற்படும் இந்தத் தகுதியைக் கண்டு இவ்வாறு தயங்குகின்றனர் என்ற உள்துறைக் காரணம் புரியாமல் தமிழுக்காக ஏங்கி நிற்கும் நாமும் மயங்க வேண்டியிருக்கிறது. உண்மை என்ன தெரியுமா? ஒவ்வொருவருடைய மயக்கத்திற்கும் தயக்கத்திற்கும் அவர்களுடைய சொந்தக் காரணம் ஒன்று விலக்கவும் முடியாமல் வேண்டவும் முடியாமல் இருந்துகொண்டே தடை செய்கிறது. 'கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்' என்று அமைந்தடங்கி நிற்கிறான் தமிழன். காலம் மாறாமல் இருந்துவிடப் போவதில்லை. ஆனால், கருத்து மாற வேண்டுமே. தம்மைச் சுற்றி ஏதோ ஒருவகையான எண்ணத் திரையை எழுப்பிக் கொண்டிருப்பவர்கள் தமிழுக்குத் தகுதி உண்டு என்பதை உணர முற்பட வேண்டும் அல்லவா? அவர்கள் உணராவிட்டால் உணர்த்த முற்படும் அவ்வள விலாவது நாம் சிறிது விழிப்படைய வேண்டாமா? எப்படி விழிப்படைவது? 'கூடாதுபோல் இருக்கிறதே!' என்று சொன்னால், 'ஏன் கூடாது?' என்று நமக்குத் தெளிவு ஏற்பட வேண்டும் என்பதற்காகவாவது நாம் கேட்டு வைக்கத் தயங்குவானேன்? இந்தக் குறைந்த அளவிலாவது நம்முடைய விழிப்பை வெளிப்படுத்தலாமன்றோ?

## கலைச் சொற்கள்

''கல்லூரிகளில் தமிழ் மொழியில் பாட போதனை செய்யத் தொடங்குவதானால், அறிவியல் (Science), அரசியல்

(Politics), பொருளாதாரம் (Economics) முதலிய பகுதிகளை எவ்வாறு கற்பிக்க முடியும்? அவற்றிற்கு உரிய கலைச் சொற்கள் தமிழ் மொழியில் எங்கே இருக்கின்றன?'' சிந்தனை வளமும் மொழிகளின் இயல்பை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பயிற்சியும் உடைய பேராசிரியர்களிடமிருந்து இத்தகைய வினாக்களே பிறக்க மாட்டா. ஒருவேளை பிறந்துவிட்டால் என்ன கூறி எப்படி அவர்களுக்கு ஆறுதல் அளிக்க முடியும் நம்மால்? மேற்கூறிய பகுதிகளைத் தமிழிலே போதனை புரிவது எளிய செயல் என்று துணிந்து கூறிவிடுவதற்கு நமக்குப் பித்துப் பிடித்திருக்கிறதா என்ன? 'ஆனால், கலைச் சொற்கள் தமிழில் எங்கே இருக்கப்போகின்றன? இதெல்லாம் ஆகாத காரியம், வீண் முயற்சி' - என்று சொன்னால் இப்படிச் சொல்லுகின்றவர்களிடம் நமக்கு அநுதாபம், பரிதாபம், சிரிப்பு எல்லாம் வருகிறது. ஆங்கில மொழி போற்றிப் பயில வேண்டிய மொழி என்பதை எந்தத் தமிழறிஞரும் மறுத்தது இல்லை. மறுக்க விரும்பியதும் கிடையாது. ஆனால், அதே சமயத்தில் அறிவியல், அரசியல், பொருளியல் முதலிய கலைப் பகுதிகளும், அவற்றிற்கான கலை நூல்களும் அந்நூல்களுக்கான கலைச் சொற்களும் ஆங்கில மொழியைத் தவிர உலகின் வேறு எந்த மொழிக்கும் கிடையாது என்று கூறினால் அதை எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்? வேறு மொழிகளுக்கு இந்தக் கலைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளும் வாய்ப்பு ஆங்கிலத்தைப் போலக் கிடைக்கவில்லை. ஆங்கிலத்திற்குத் தன்னைப் பேசும் மக்களினத்தின் மிகுந்த பரப்பாலும் மேற்கூறிய கலைகள் வளருவதற்குரிய சூழ்நிலைகளாலும் இந்தத் தகுதி மிகுதியாகக் கிடைத்திருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாம்; கூறினால் ஓரளவு ஒப்புக் கொள்ள முடியும்.

## தயக்கம் யாருடையது?

'தமிழுக்கு அந்தத் தகுதி இல்லை. அதை உண்டாக்குவதும் அருமை' என்று கூறுவது அறியாமையால் நேரும் பிழைபட்ட முடிவு; பொருந்தாத துணிவு. இந்த முடிவால் தமிழ் உள்ளம் குமுறாமல் இருக்கமுடியாது.

"சொல்லவுங் கூடுவதில்லை அவை
சொல்லுந் திறமை தமிழ்
மொழிக் கில்லை
மெல்லத் தமிழ் இனிச்சாகும்
அந்த மேற்கு மொழிகள்
புவிமிசை ஓங்கும்
என் றந்தப் பேதை
உரைத்தான் – ஆ
இந்த வசை எனக்
கெய்திட லாமோ?
சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என்று, தமிழுணர்வு குன்றியிருந்த அன்றைய நாளிலேயே ஒரு தமிழ் உள்ளம் குமுறிச் சென்றிருக்கிறது. இன்று ஓராயிரமுள்ளங்கள் - அல்ல ஒரு கோடி தமிழுள்ளங்கள் குமுறும். இது வெறி அன்று. உரிமையின் வேட்கை. அறிஞர் மு.வரதராசன் அவர்கள் கூறுவதுபோலக் கல்லூரிகளில் போதிப்பவர் மேற்படி கலைகளை ஆங்கில மொழியிலேயே கற்பித்துப் பழகிவிட்டதுதான் இந்தத் தயக்கத்திற்குக் காரணம். தமிழில் மேற்படி கலைகளைப் போதிக்கலாம். கலைச் சொற்கள் உள்ளன. இன்றியமையாத நிலையில் கலைச் சொற்களை உண்டாக்கிக் கொள்ளலாம். கற்றுக்கொண்டிருக்கிற மாணவர்களின் தயக்கமன்று இது. கற்பிக்கின்ற ஆசிரியர்களின் தயக்கமே.

## தமிழில் முடியும்!

அறிவியல், அரசியல் முதலியன கல்லூரிகளில் கற்பிக்கப் படும் போது, அவற்றைக் கற்பிக்கின்ற ஆசிரியர் கருவி நூல்களாக (Reference Books) எவ்வெவற்றைப் பயன்படுத்துகின்றனரோ அவைபோன்ற கருவி நூல்களை முதலில் தமிழில் இயற்ற வேண்டும். இதற்கு அந்தக் கலைகளின் போதகராகிய பேராசிரியர்கள் தமிழ் மொழியோடும் தமிழ் நூல்களுடனும்

நெருங்கிய தொடர்புகொண்டு தத்தம் கலைகளை நூல் வடிவில் உருவாக்குவதற்கு ஒன்றுகூடி முயற்சி செய்ய வேண்டும். எண்ணற்ற மேலை மொழி வல்லுநராகிய தமிழறிஞர்களின் உதவியும் இதற்கு இன்றியமையாதது. சென்னை, அண்ணா மலை, திருவனந்தை ஆகிய தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் ஒன்றுபட்டு இதற்கான ஏற்பாடுகளைத் தம் பொறுப்பில் மேற்பார்த்துச் செய்ய வேண்டும். இந்த முயற்சிக்குப் பின்பு, 'தமிழில் இவ்வளவும் முடியும் என்று எதிர்பார்க்கவே இல்லையே' என்று ஆச்சரியம் அடையும் படியான விளைவுகள் நேரலாம். பல்லாயிரம் ஆண்டுகளாக ஒப்புயர்வற்ற சிறப்பும் பண்பட்ட இயல்பும் கொண்டு வாழ்ந்து வரும் தமிழ் மொழியில் ஆராய்ந்து முயன்று பார்க்காமல் ஒரு பெரிய தகுதியின்மையை உரைத்தால் அதை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதல்லவா? உலகத் தொடர்பு முதலிய ஒதுக்க முடியாத அவசியங்களுக்காக ஆங்கிலத்தை ஏற்று மகிழும் பண்பு தமிழனுக்கு என்றைக்கும் குறையாமல் இருக்குமென்று நம்பலாம். எனவே, அதை எண்ணி யாரும் தயங்க வேண்டிய தில்லை. இன்னொரு காரணமும் அங்கே நினைக்கத்தக்கது. உயர்நிலைப் பள்ளிகளில் எங்கும் அறிவியல் முதலிய பொருள்களைத் தமிழிலேயே கற்பித்துவிட்டுக் கல்லூரிகளில் மட்டும் ஆங்கிலத்தில் தொடங்குவதால் மாணவர்கள் இடர்ப் படுகின்றனர். உயர்நிலைப் பள்ளிகளில் பழகிப் பழகித் தமிழுக்கு அறிவியல், நிலவியல் (Geography) முதலியவற்றைக் கற்பிக்கும் தகுதி இன்று இயற்கையாக ஏற்பட்டு விடவில்லையா? இதேபோலக் கல்லூரிகளிலும் முயன்றால் நாளடைவில் பழகிப்போகும். எனவே, தமிழுக்குத் தகுதியில்லையே என்று சொல்லிக் கல்லூரிகளில் தாய் மொழியில் போதிக்கத் தயங்குவது பொருத்தமான காரணமாகத் தோன்றவில்லை. ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுகின்ற கதைதான் இது. தமிழ் மொழியைப்போல எல்லாக் கலைகளுக்கும் இடங்கொடுக்கும் பரந்த இயல்புடைய மொழி மற்றொன்று காண்பதரிது.

❒

# 5. மொழியும் இசையும்

நான்கைந்து ஆண்டுகளாக இசைக்கலை தமிழகத்தில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற்று வருவது கண்கூடு. அக்கலையில் ஆர்வமும் ஊக்கமும் கொண்டு பயிலுவோர் தொகையும் நாளுக்கு நாள் பெருமை அடைந்து வருகிறது. இசையை விரும்பிச் சுவைக்கும் சுவைஞர் தொகையும் மிகுதி யடைகின்றது. இசையியல் தெரிந்து அதனைப் பயிற்றும் இசைப் பேராசிரியர்களும், இசைக் கல்லூரிகளும், கழகங்களும் அத்துறையிற் செய்துவரும் பணி அளப்பரியது. இதே வளர்ச்சியும், கலைத் திறனும், சுவை விருப்பும், பழந் தமிழ் நாட்டில் இருந்தன. நாடகம், இசை முதலிய நுண்கலைகளைப் பழந்தமிழர் போற்றிப் பேணிப் பாராட்டிப் பெருவிருப்போடு சுவைத்து வந்த காலம் ஒன்று இருந்தது. இசைக் கலையைப் பகுதி பகுதியாகப் பிரித்து நுண்ணிதாக ஆராய்ந்து இவை குணம், இவை குற்றம், இவை இலக்கணம், இவை வழு, என அக் கலைக்கு நிலையான வரையறைகள் கண்ட பெருந்திறன் பழந் தமிழர்க்கு இருந்துள்ளது. அதனைத் துணைக்கொண்டு நோக்குங்கால் அவர்தம் உயர்ந்த கலை வாழ்க்கையின் பண்பட்ட நிலையை அளவிடும் கருவியாக அமைகிறது. உயர்ந்த பண்பாடும் வாழ்க்கையும், வாழ்க்கையைச் சூழ்ந்து நிற்கும் கலைகளை அடிப்படையாகக் கொண்டே கருக் கொள்ளத் தொடங்குகின்றன என்பது அறிஞர் துணிபு. பழந் தமிழர் கலைவாழ்க்கை இத்துணிபுடன் சற்றும் முரணாத ஒன்றாக அமைந்திருத்தலை வெளிப்படையாக அறியலாம். இசைக்கு இது இலக்கணம், இது குற்றம் என்ற வகுப்புண்மையைத் தமிழ் நூற்றுணைகொண்டு விளக்க முடியும். பதினொரு வகைப் பாடல் நெறிகளைப் பழந் தமிழர் மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு நெறியும் அமைந்த

முறை துறைகள் வேறுபாடுடையன. இசை மரபு என்னும் பழந் தமிழ் இசை நூலில் அப் பதினொரு வகைப் பாடல்களையும் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

**"உள்ளாளம் விந்துவுட னாத மொலியுருட்டுத்**
**தள்ளாததூக் கெடுத்தல் தான் படுத்தல் - மெள்ளக்**
**கருதி நலிதல் கம்பித்தல் குடிலம்**
**ஒருபதின் மேல் ஒன்றென்றுரை."**

(1) உள்ளாளம், (2) விந்து, (3) நாதம், (4) ஒலி, (5) உருட்டு, (6) தூக்கு, (7) எடுத்தல், (8) படுத்தல், (9) நலிதல், (10) கம்பித்தல், (11) குடிலம்.

இப்பதினொரு வகைப் பாடல் நெறிகளிலும் உள்ளாளப் பாடல் நெறி தலை சிறந்தது. இசை பாடுவார்க்கு இன்ன வின்ன குற்றங்கள் ஆகா என வரையறுத்துக் கூறும் இலக்கண அமைப்பை உடையது. உள்ளாளப் பாடல் நெறியிலிருந்து நாமறியும் இசையியல்பு நுணுகியதொரு பேருண்மையாக அமைகிறது. தற்கால இசைவாணர்களிற் பெரும்பாலோரிடத்தில் நாம் காணுகின்ற ஒரு பெரிய குறை என்னவென்றால், 'அங்க அசைவுகள்' என்றுதான் சொல்ல வேண்டும். உயர்ந்த இசை யின்பத்திற்குரிய சுவை நுகர்ச்சியை இவ்வங்க அசைவுகள் ஓரளவு பாதிக்கத்தான் செய்கின்றன. பாடுகின்றவர் தரத்தில் உயர்ந்த இசையைத் தேனாக உருக்கி இழைத்துப் பாட்டாகப் பாடி அவையில் உள்ளவர்களைக் கவர முயன்றாலும் அவரிடத்தில் உள்ள மிகச் சிறிய தவறாகிய அங்க அசைவால் அக் கவர்ச்சி ஏற்படாமற் பாழ்பட்டு விடுகிறது. அங்க அசைவால் தோன்றுகின்ற சிறிய நகைச்சுவை பெரிய இசைச் சுவையைத் தலையெடா வண்ணம் கீழ்ப்படுத்தி விடுகிறது.

இசைவாணரிடம் சுவைப்பவன் உண்மையான சுவையைக் காணவேண்டுமானால் கடவுளிடம் அடியானுக்கு ஏற்படுகின்ற

பாசம் அவனுக்கு இசைவல்லுநரிடம் ஏற்பட வேண்டும். சுவைப்பவன் இசைப்பவனுடைய அதிமனித ஆற்றலிற் கலந்துள்ள தெய்வத் தன்மையை உணர்ந்தாலொழிய உண்மையான இரசனை தோன்றுவதற்கு இடம் ஏற்படாது. யானறிந்த இசைவாணரொருவர் இங்கே எடுத்துக்காட்டாக அமையத்தக்கவர். பாட ஆரம்பித்தவுடன் குடுமி முடியவிழ்ந்து விடும். கண்கள் காதுவரை வலித்துக்கொண்டு செல்லும். புருவம் நெற்றியோடு போர் செய்யும். கழுத்து விம்மி விம்மி நெஞ்சுக் குழி தெரிவதும், புடைப்பதுமாக இருக்கும். இடை இடையே பலாச்சுளைப் பற்கள் ஒரு வெடிச் சிரிப்பை ஒலியின்றி வெளிக்காட்டும். உடல் ஆடும் ஆட்டமோ சொல்ல வேண்டியதே இல்லை. ஆரோகண, அவரோகண கதிகளை அவையினர்க்கு விளக்குவதாக எண்ணமோ, என்னவோ? ஒரு கை மேலே போகும், மற்றொரு கை கீழே அங்கவஸ்திரத்தைத் திருகிக் கொண்டிருக்கும். முன்னே பருத்தெழுந்த தொந்தியின் அவஸ்தை வேறு. இப்படிப்பட்ட இலட்சணங்களுடன் அவர் பாடினால் அந்த இசையின் தெய்விகத் தன்மை என்ன ஆகும்? அது வெறும் இசையாக மட்டுமா இருக்கும்? நடனம், நடிப்பு, தேகப்பயிற்சி முதலிய எல்லாம் கலந்த ஒரு கதம்பமாக அல்லவா இருக்கும்? இத்தகைய இசைக் குற்றங்கள் சிறிதும் வராமற் பாடுவதுதான் உள்ளாளப் பாடல் முறை. காந்தருவதத்தை வீணையுடன் வாய்ப் பாட்டும் பாடிய கலைத் திறத்தைச் செய்யுளிலே விளக்கமாகச் சித்திரிக்க வந்த சீவக சிந்தாமணி ஆசிரியர்,

**"கருங்கொடிப் புருவமேறா கயல்**
**நெடுங் கண்ணுமாடா**
**அருங்கடி மிடறும் விம்மா(து)**
**அணிமணி எயிறுந் தோன்றா**
**இருங்கடற் பவளச் செவ்வாய்**
**திறந்திவள் பாடினாளோ**

**நரம்பொடு வீணை நாவின்**
**நவின்றதோ என்று நைந்தார்.''**

(சீவக சிந்தாமணி - 658)

(மிடறு - கழுத்து; எயிறு - பல்)

என்று அவையிற் கூடியிருந்தார் வியக்கும் வண்ணம் பாடினாள் என்பதை விளக்கினார். சிந்தாமணிக்கு உரை கண்ட நச்சினார்க்கினியர் இச்செய்யுளின் உரையில் இசை நூல் மேற்கோளுடன் பாடல் நெறிகளை எடுத்துரைத்து அவற்றுள் உள்ளாளப் பாடல் நெறியின் சிறப்பையும் விளக்கிக் கூறினார். உள்ளாளப் பாட்டுப் பாடுகின்றவர்கள், 'இடைபிங்கலையை இயக்க மறுத்து மூலாதர முதல் பிரமந்திரமளவும் இயக்கம் ஆக்கி நடுவுதொழில் வரப்பாட வேண்டும்' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

**''கண்ணிமையா கண்டந்**
**துடியா கொடிறசையா**
**பண்ணளவும் வாய்தோன்றா**
**பற்றெரியா - எண்ணிலிவை**
**கள்ளார்நறுந் தெரியற்**
**கைதவனே கந்தருவர்**
**உள்ளாப் பாட லுணர்.''**

(கொடிறு - புருவம்)

என்பது இப்பாடல் நெறிக்கு 'இசை நூல் மரபு' கூறும் இலக்கணம். திருவிளையாடற் புராணம் விறகு விற்ற படலம், சிந்தாமணியில் மீண்டும் விமலையாரிலம்பகம் முதலிய பகுதிகளில் இசை பாடுவோர்க்கு ஆகாத குற்றங்களாக இவை விவரிக்கப்படுகின்றன.

நாளுக்குநாள் கலைத்துறையில் முன்னேறி வருகின்ற தமிழ் நாட்டு இசைவாணர்கள் தங்களுக்காக இவைகளை

மாற்றிக்கொள்ள விரும்பாவிடினும், இசைக் கலையின் தூய்மை யொன்றே குறிக்கோளாகக் கொண்டாவது இவைகளை மாற்றிக்கொண்டுதான் ஆகவேண்டும். 'இசை' தெய்விகத் தன்மை பொருந்தியதொரு கடவுட்கலை என்பதை மறுப்பார் யாருமில்லை. அதன் தெய்வீகத் தன்மை இவைபோன்ற சில சில்லறைக் குற்றங்களால் பாதிக்கப்படுமாயின் அது மிக வருந்த வேண்டிய ஒன்றாகும். இதுபோலவே பழைய தமிழ் நூலுரைகளில் அரிதும் பெரிதுமாக அகப்படும் சில நல்ல கருத்துக்களை அவ்வக் கலைத்துறையிற் சிறந்தார் பலர் ஏற்றுப் போற்றி ஆராய்ந்து பயன்படுத்துவது அவசியம். இசை, நடனம், நாடகம் முதலியவைகளைக் கூறும் நூல்கள் தமிழில் இருந்திருக்கின்றன. நம் காலத்துக்கு முன் அவை கெட்டன போலும். அவைகளிலிருந்து கிடைக்கும் சில பல கருத்துக்களுக்கு இன்றும் பஞ்சமில்லை. ஆனால், அக்கருத்துக்களைத் தேடிக் காண முயல வேண்டும். ❐

# 6. மொழியும் கவியும்

## பாட்டின் குறிக்கோள்

பாட்டு, கவிதை என்றவுடன் பதவுரை, பொழிப்புரை என்று இப்படித்தான் நம்மவர் சிந்தனைகள் ஓடுகின்றன. உயர்ந்த நோக்கத்திற்குப் பயன்படும் சிறந்த கருவியாக அதனை எண்ணும் மனப் பண்பு பெரும்பாலோருக்கு ஏற்படாதது வருந்தத்தக்கதே. வாழ்க்கையை உயர்த்துவது சிந்தனை. சிந்தனையை வளப்படுத்துவது அறிவு. அறிவின் தரத்தை உயர்த்துவது பாட்டின் நோக்கமாக இருக்க வேண்டும். பொழுதைக் கழிப்பதன்று அதன் நோக்கம். அறியாமையை நீக்குவதும் அறிவை வளர்ப்பதும் ஒரே செயல்தான். விளக்கைக் கொண்டுவந்தால் இருட்டறையில் ஒளி பாய்கிறது. 'இருள் போகிறது' என்றால் என்ன? 'ஒளி வருகிறது' என்றால் என்ன? இரண்டும் சேர்ந்து குறிப்பது ஒரு பொருளைத்தானே. பாட்டு, மனிதனின் சிந்தனைகளை வரம்புக்குட்பட்ட அழகுடன் உருவாக்குகிற ஒரு நல்ல வடிவம். நினைவு என்பது வெறும் பூ! நினைவின் முதிர்ச்சி சாதாரணப் பிஞ்சு. நினைவின் உறுதியான முடிவு காய். அது பாட்டாக வெளிப்பட்டால் கவிதைக்கனி. பூதான் பிஞ்சாகிறது. பிஞ்சுதான் காயாகிறது. காய்தான் கனியாகிறது. கள்ளிச் செடியும் எட்டியும் கூடத்தான் கனிகின்றன. ஆனால், பயன் என்ன? மனித உள்ளத்தில் ஏற்படுகின்ற பலவீனத்தை எந்த வகையிலாவது வெளியிட்டு விடுவதற்குப் பாட்டு என்று பெயர் இல்லை. ஒரு நல்ல பாட்டு ஒரு மனிதனை நல்லவனாக்கலாம், ஓராயிரம் மனிதர்களையும் நல்லவர்களாக்கலாம். ஒரு பெரிய சமுதாயத்தின் வாழ்க்கையையே நல்ல வழிக்கு மாற்றலாம். ஒரு பாட்டின் ஆற்றல் ஒன்பது பேரரசர்களின் செங்கோல்களை விட உயர்ந்தது. குப்பைத்

தொட்டியில் குப்பை என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் கொட்டலாம். தங்கப் பேழையில் அப்படிச் செய்யலாமா? தங்கத்தால் பேழை (பெட்டி) செய்தால் அதற்குள் பொதிந்து வைக்கும் பொருள் அந்தப் பேழையின் மதிப்பைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்கவேண்டுமல்லவா? பாட்டில் பொதிந்து வைக்கின்ற பொருளும் அப்படித்தான் இருக்கவேண்டும். பேச்சைக் காட்டிலும் உயரியது, எழுத்து. எழுத்தைக் காட்டிலும் உயர்ந்தது பாட்டு. பாட்டினும் உயர்ந்தது அதன் பொருள். பொருளினும் உயர்ந்து விளங்குவது அதன் குறிக்கோள். பாட்டு மனித வாழ்க்கையைத் துலக்கி ஒளியும் உயர்வும் தரவேண்டும், வீட்டுக்கு ஒளி கொடுக்கும் மனைவிளக்கைப்போல. பாட்டு மனித வாழ்க்கையின் கீழ்த்தர உணர்வுகளைக் கொட்டி வைக்கும் இருட்டறையாக இருக்கக் கூடாது, அசந்தர்ப்பத்தால் வீட்டை ஒளி செய்த விளக்கே வீட்டுக் கூரையை எரித்து விடுவது போல. எனவே குறிக்கோளில்லாத பாட்டு ஒரு பிணமாம்.

## பாட்டின் நெறி முறை

நடப்பதற்குப் புலம் நெறி; நடப்பதற்குக் கருவி கால்கள். வழியும் வேண்டும், கால்களும் வேண்டும். இரண்டும் சேர்ந்தால்தான் அதற்கு வழிநடை என்று பெயர். பாட்டுக்குப் புலம் அது செல்லும் நெறி. பாட்டுக்குக் கருவி அதன் முறையான கருத்து. பூவைத் தாங்குவதற்குக் காம்பு வேண்டும். காம்பை அழகான இதழ்க் கோவையால் மூடிக் காட்டி அழகு செய்யப் பூ வேண்டும். பூவும் காம்பும், தனித்தனியே பிரிந்தால் அழிவுதானே? பாட்டின் நெறியும் கருத்தும் நேர் எதிர்த் திசைகளில் முரணான பாதையில் செல்லக்கூடாது. 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்று ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? பாட்டின் நெறியும் அது கற்பவனுக்குக் கூறுகின்ற கருத்தும்

வேறுபட்டுப்போய் முரண் அடைவதைக் கண்டிப்பதற்கு எழுந்த தொடர்தான் இப்பழமொழி. பாடுகின்றவனுக்கு உயர்ந்த கருத்தையும் படிக்கின்றவனுக்குத் தாழ்வான கருத்தையும் தருவதுதான் நெறிதுறை முரண்பாடு. நெறி, நீர் செல்லும் வழி. துறை, அந்த நீர் தங்குமிடங்களில் ஒன்று. செல்லும்போது தூயதாய்த் தங்கியபோது கலங்கி நாறுகிற நீர் போல உயர்ந்த இதயத்தில் உயர்ந்த நோக்கோடு பிறந்தும் கற்பார்க்குப் பயனில்லாத முறையில் பொருளமைந்த பாட்டு வீணான படைப்பாகும்.

**"உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின்**
**வாக்கினில் தூய்மை உண்டாம்"**

என்று பாரதி கூறுகின்றாரே அந்தத் தன்மை அமைந்தவன் எண்ணிய கருத்தைப் பயனுள்ளதாகப் பாட்டிலும், அதன் மூலமாகப் பாட்டைப் படிப்போர் இதயங்களிலும் ஏற்றி வைக்க முடியும். பாடுவதற்கென்று தான் கொண்ட நெறி, பாடலின் பொருளுக்கென்று தான் கொண்ட முறை, யாவும் பாட்டைப் படிக்கின்றவர்கள் படித்தபின் கொண்டே தீர வேண்டிய நெறிமுறைகளாக இருக்கவேண்டும்.

## யார் பாடுவது?

மாடுகள், வண்டியை இழுக்கலாம்; இழுக்க முடியும்! வண்டி மாடுகளை இழுக்கலாமா? இழுக்கத்தான் முடியுமா? திருவள்ளுவர், கம்பர், செகப்பிரியர், காளிதாசர், ஓமர், மில்தன், பாரதியார், தாகூர் போன்றவர்கள் பாடினார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்கள் பாடலைப் படித்துப் பண்பட்டனர். அவர்கள் பாடல்களைப் படித்துச் சீர்திருந்த வேண்டியவர்கள் எல்லாம் அவர்களாகவே ஆகமுயன்றிருந்தால்...? பின்பு வண்டி மாடுகளை இழுக்க முயன்ற கதைதான். பாடத் தகுதி வாய்ந்த உள்ளொளி மிக்கவர்கள் பாட வேண்டும். மற்றவர்கள் படித்துப்

பண்பட்டால் போதுமானது. எல்லாரும் உள்ளொளி பெற்ற கவிஞர்களாகவே இருந்து விடமுடியுமா? கொள்ளையின்பம் குலவு கவிதை கூறத்தக்க பாவலர்களே பாடவேண்டும்.

**''நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்**
**இமைப் பொழுதும் சோராதிருத்தல்''**

என்று பாட்டை ஒரு குறிக்கோளாகக் கொண்டு நாட்டையும் சமூகத்தையும் உயர்த்துவதற்கு உழைக்கக் கருதுகிறவர்கள் பாடவேண்டும். பாட்டின் ஆசிரியன் தனக்குப் புகழ், பொருள், பெருமை ஆகியவற்றைத் தேடிக்கொடுக்கும் கருவியாக அதனை எண்ணக்கூடாது. பாட்டைச் சுவைக்கின்றவர்கள் பண்பட்டு உயரவேண்டும் என்பதைப் பாடுகிறவன் நோக்கமாகக் கொள்ள வேண்டும். எண்ணங்களைக் கோவை செய்து வரம்புக்குட்பட்ட சொற்களால் அழகிய முறையில் அழகிய கருத்துக்களுடன் வெளியிடும் ஆற்றலை இயற்கையிலே பெற்றவர்கள் பாடவேண்டும். கோத்துவைத்த எழுத்துக்களை அப்படியே வெள்ளைக் காகிதத்தில் கருப்பு மையால் பதித்துக் காட்டுகிற அச்சியந்திரங்களைப்போலக் கவியின் உள்ளமும் இருக்கக்கூடாது. உலகின் உயர்நிலை இழிநிலைக் காட்சிகளை மற்றவர்கள் காணாத ஒரு புதிய நோக்குடன் கண்டு தனக்கே உரிய சிந்தனைக் கலவையோடு அணிசெய்து படிப்போர்க்குக் கவர்ச்சி நிறைந்து தோன்றும்படி கூறும் தகுதிவாய்ந்தவன் எவனோ, அவன் பாடவேண்டும். அவன்தான் பாடத் தகுந்தவன்.

## எதைப் பாடுவது?

**''பல்வகைத் தாதுவின்**
**உயிர்க்குடல் போற் பல**
**சொல்லாற் பொருட் கிடனாக**
**உணர்வினில்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்''**

என்பது நம் தமிழ் மரபு கண்ட பாட்டிலக்கணம். பாடுவதற்கு ஒருரிமை பூண்டுயர்ந்த பொருள் வேண்டும். அந்தப் பொருளை உணர்வின் வன்மையால் அணிபெற உருவாக்குதல் வேண்டும். சாதாரண நடையில் சாதாரணக் கருத்தை உரைபோலச் சொல்லுகின்ற ஒருவகைப் பாட்டு மேல் புலத்தார் வழக்கில் உண்டு. இக்காலத்தில் தமிழ் வழக்கிலும் அது பரவி வருகிறது.

நடைச் செய்யுள் (Free verse - blank verse) என்பர் அதனை. உயரிய பொருட்பாடு அமையாவிட்டால் இவ்வகைச் செய்யுள்களும் பயனற்றவையே. உடலைக் காட்டிலும் கட்புலனாகாத உயிர் உயர்ந்ததாதல் போலப் பாட்டின் பதங்களையும் ஓசையையும், அணி அழகுகளையும் விட மிகச் சிறந்து அமைய வேண்டும் அதன் பொருள்.

எனவே, இதுகாறுங் கூறியவற்றால் பாட்டுக்குக் குறிக்கோள் இன்றியமையாதென்றும் குறிக்கோளோடு கூடிய பாட்டுக்கும் ஒரு நெறி முறை வேண்டும் என்றும் பாடுவார் பாடுவனவெல்லாம் பாட்டாகா, பாடத் தகுதி வாய்ந்தோர் பாடுவனவே பாட்டாகும் என்றும் பொருட்கு இடமாகச் செய்வது பாட்டின் இயல்பென்றும் கண்டோம். பாட்டு வாழ்க, அதன் குறிக்கோள் உயர்க!

☐

# 7. மொழியும் செவிப்பயனும்

தம்மை உடையார்க்கு மறுக்காமல் அவர் விரும்பும் பயன்களை யெல்லாம் நல்கி அமைவன யாவையும் செல்வம். இளமையும் அழகும் ஒருங்கு அமைந்தவர் இளமைச் செல்வர். பொருளும் பெருவாழ்வும் பெற்றவர் பொருட்செல்வர். அருளும் அன்பும் பண்பும் பெற்ற தூய மனத்தினர் அருட் செல்வர். கலைகளையுடையவர் கலைச்செல்வர். கவிதை செய்பவர் அல்லது கவிதையில் நயங்காண்பவர் இருவரும் கவிதைச் செல்வர். இவ்வாறு பலரைக் கூறலாமெனினும் செல்வர் யார்? என்பதற்கு விடை இவ்வளவிற் சாலும். ஒரு குறிப்பிட்ட துறையில் தமக்கு இணையின்றாக ஓங்கிய ஆற்றலுடையவர் யாவராயினும் அக்குறிப்பிட்ட துறையில் அவரே செல்வர். செல்வம் என்பது உடைமை. அது பொருளாகத் தான் இருக்க வேண்டுமென்னும் வரையறை யில்லை. தம்மை உடையாரைச் செம்மை நெறிச் செலுத்தி இம்மை மறுமைக்குத் தீமையில்லா நலம்பயக்கும் உடைமைகளெல்லாம் பண்ணப் பணைத்த பெருஞ் செல்வங்கள்.

**"நுண்ணுணர்வு இன்மை வறுமை அஃதுடைமை**
**பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்"**

என்று நாலடியார் நுண்ணுணர்வுடையாரைச் செல்வராகவும் அஃதிலாரை ஏழையராகவும் அமைத்துக் காட்டுகிறது. இக்கருத்துப் பற்றியே அறநூலுடைய பெருநாவலராகிய தெள்ளு தமிழ் மறை வள்ளுவரும்,

**"அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனு மிலர்"**

என்று உடைமை அறிவு பற்றி முடிவு செய்வதோர் செல்வ மாகவும் ஆவதைத் தாமெடுத்துக் கூறி விளக்குவாராயினர்.

எனவே இதுகாறுங் கூறியனவற்றால் செல்வமென்பது 'தம்மை உடைமையார்க்கு நலம் பயக்கும் உடைமை' என்ற முடிவிற்கு வருகிறோம். இந்த முடிவோடு நமது தலைப்பிற்கு வருவோமாயின் அதன் அமைவுப் பொருத்தத்தை நோக்க அது இன்றியமையாத ஒன்றென்பது போதரும். செவிச் செல்வம் என்பது நாம் விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட தலைப்பு. கேள்வியாகிய செல்வம், அல்லது செவியால் நுகரப்பட்டுப் பின் பெரும் பயன்கள் தரும் செல்வம் என்று இதை விரித்துக் கூற அமையும். இதனையுடையவர் எல்லாம் செவிச் செல்வர் அல்லது கேள்விச் செல்வர் எனத் தமது உரிமையைச் சுட்டிக் கொள்ளுதற்கு உரிய தகுதியுடையவரே. நூற்பொருளைக் கற்று அறிந்து அமைந்த சார்புடையோர் கூற, அதைக் கேட்டலாகிய உடைமையையே இங்கே செல்வமாகக் குறிக்கிறோம், பிற கேள்விகளைக் குறிக்கவில்லை. கேட்பது ஒரு தனி இன்பத்தைத் தரும். கேட்டதை நினைப்பது அதைவிடப் பேரின்பத்தைத் தரும். படிப்பது மனத்திற்கு மட்டும் இன்பத்தைக் கொடுக்கும். கேட்பது செவிக்கும் மனத்திற்கும், சிந்தனையுணர்வுக்கும் இடையறாத இன்பத்தைக் கொடுக்கும். இத்தகைய வேறுபாடே கல்விச் செல்வத்திற்கும் கேள்விச் செல்வத்திற்கும் இடையே உள்ளது. இதுபற்றியன்றே,

**"கற்றலிற் கேட்டலே நன்று"**

**"கேள்வி முயல்"**

என்பனபோன்ற ஆன்றோர் வாய்மொழிகள் தோன்றின. ஆராய்ந்து அடங்கி அமைந்து கேட்பதே ஒரு பெரிய கலை. அந்தக் கலையில் வெற்றிபெறத் தலைசிறந்த முயற்சி வேண்டும். 'கேள்வி முயல்' என்ற நுட்பம் நுணுகி நுணுகி ஆராயத்தக்கது. இரும்பைத் தன்வயம் ஈர்க்கும் காந்தம் போல் கேட்போர் கூறுவோர் கருத்தமைதியைப் பொருத்தமாக மனத்திற் கொள்ள வேண்டும். பொருத்தமின்றி மாறுபடுமாயின்

கூறுவார் கருத்தைக் கேட்பார் பிறழ உணர்ந்து மயங்க நேரிடும். எனவே மயக்கமின்றி உணரத் தயக்கமற்ற கேள்வியை முயல வேண்டும். முயற்சி திருவினை ஆக்குமல்லவா? கூறுவோர் கூறுங்கருத்தை உணர்கின்ற உணர்ச்சி வன்மை கேட்போருக்கு வேண்டும். அதைப் பெறுவதற்குத்தான் முயலவேண்டும். கூறுவோர் கருத்தைக் கேட்போர் புரிந்து கொள்வதும், புரிந்து கொள்ளாமையும், கேட்போருடைய உணர்ச்சி வன்மையையும், உணர்ச்சி மென்மையையும் பொறுத்த ஒன்றே யன்றிக் கூறுவோருடைய கூற்றைப் பொறுத்த ஒன்று அன்று. ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். உணர்ச்சி வாயிலாவது:- கூறுவோனது கூற்றை உணருந்தன்மை. உணர்வோர் வலித்தாவது:- கேட்போனது உணர்வு வலிமையைப் பொறுத்ததாம். 'கேள்வி முயல்' என்பதிலுள்ள 'முயல்' என்பதற்கு இதுகாறும் விளக்கம் கூறினோம். இனி, செவிச்செல்வத்திற்கும் புவிச்செல்வத்திற்கும் இடையே உள்ள நடை வேறுபாடுகளைத் தொடுப்போம். காசும் பணமும் காணிகளும் பெருக வாழ்வோர் என்றைக் காவது ஒரு நாள் பிறர் ஏசும் வண்ணம் இகழ்ச்சி எய்த நேரிடுவது ஒருதலை. காசும் பணமும் நிலையில்லாத போலிச் செல்வங்கள். கண்டபொழுதே கண்டு உண்ட பொழுதே மகிழ்ந்து உறங்கித் திரியும் மனிதப் போலிகளின் தரங்கெட்ட வாழ்க்கையே காசு பணவாழ்க்கை. தங்களைப் பற்றி நினைக்கக்கூட அவர்களுக்கு நேரமில்லை. அவ்வளவு தூரமேன்? தங்களைப் படைத்த பொங்கருட் பெருமானை நினைக்க விடுவதில்லை அவர்கள் செல்வம். இரண்டை மூன்றாக்குவதிலும் மூன்றை நான்காக்குவதிலும் அவர்கள் முயல்கிறார்கள். இறுதியில் ஒன்றையும் இன்றாக்கி விடுகிறது அவர்களது போலி முயற்சி. பணம் ஒரு பெரிய போதைப் பொருள். ஏமாறுகிற மனிதன் பணத்தாலும் வாழ முடியாது. கேள்வியாற் பண்பட்ட மனிதன் பண்படுத்தாத

பணத்தைப் பண்படுத்திப் பயன்படுத்தி வாழ முடியும். பணம் ஒன்றே துணையாக வாழ்வார்க்குப் பணமே கழுத்தையறுக்கும் கொழுத்த எமனாக அமையும். என்றும் நின்று நிலைக்கும் ஒன்று கேள்விச் செல்வத்தால் வரும் அறிவே. அறிவுடையார்க்குப் பணக் குரங்கை ஆட்டுகின்ற வித்தை நன்றாகத் தெரிந்த ஒன்று. செவிச் செல்வம் மனிதனைப் பண்படுத்தி விடுகின்ற கடமையைத் தனதாகக் கொண்டிருக்கிறது. பண்பட்ட மனமும் நாகரிக அமைதியும் கேள்விச் செல்வத்தாலே வளருவது போலப் பொருட் செல்வத்தால் எனைத்தும் வளர்வதே இல்லை. கேள்வி மனிதனைப் பண்படுத்துகிறது. பணம் மனிதனைப் புண்படுத்துகிறது. முன்னது என்றும் அழியாது நின்று தளர்வு வந்த காலத்தும் கிளர்வு நல்கும் தோன்றாத் துணையாக அமைகிறது. பின்னது தான் இருக்குங்காலத்தில் மட்டுமின்றி இழக்கப்படுங் காலத்திலும் வறுமைத் துன்பத்தையும் கழிவிரக்கத்தையும் பெருகத் தருவதற்குத் தவறுவதில்லை. ஒன்று நன்று ஆராய வேண்டும். துன்பம் மனிதனைப் பண்படுத்துகிற அளவு இன்பம் மனிதனைப் பண்படுத்த முடிய வில்லை. துன்பம் வாழ்க்கையின் எல்லா அனுபவங்களையும் மனிதனுக்குக் கொடுக்கிறது. இன்பம் அனுபவங்களை ஏற்படாது கெடுக்கிறது. முன்னது மனிதனை எச்சரிக்கிறது. பின்னது எச்சரிக்கத் தவறிவிடுகிறது. இதே வேறுபாடுதான் - செவிச் செல்வத்திற்கும் புவிச் செல்வத்திற்கும் இடையேயும் உள்ளது. ஒன்று வாழ்க்கை அனுபவத்தைத் தருகிறது. மற்றொன்று தருவதற்குத் தவறிவிடுகிறது. பிறசெல்வங்கள் நிலையானவை அல்ல. இது நிலையான பெருஞ்செல்வம். பிற செல்வங்கள் இறுதியில் விளைப்பது துன்பத்தையே ஆகும். இஃது எக்காலத்தும் இன்பத்தையே தன்னால் பிறருக்கும் தனக்கும் விளையச் செய்கிறது. ஆக இதுவரை கூறிய கருத்துக்களால் செல்வத்துட் செல்வம் என்பது வெள்ளிடை

மலையாகச் செவிச் செல்வம்தான் எனத் தெரிகிறது. அது மட்டுமன்று, அச்செல்வம் பிற செல்வங்களுள் எல்லாம் தலையாயது என்பதும் வெளிப்படுகிறது.

**''செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை''**

என்று இதை வள்ளுவனார் யாப்புறுத்துகின்றார். கேட்டுக் கேட்டுப் பழகிய பிறகுதான் மனிதன் சான்றாண்மை எய்த முடிகிறது. சால்பு என்றது அறிவால் நிறைவு எய்துகின்ற அமைதி நிலை. இந்த அமைதி நிலை நுணுக்கமான கேள்வி நிலையான செவிச் செல்வத்தாற் பண்பட்டவருக்கே எளிதின் எய்துகிறது. பிறருக்கு இது எய்துவது இயல்வதில்லை. இனிச் செவியால் நுகரப்படும் கேள்வியாகிய உணவிற்கும் வாயால் நுகரப்படும் சுவைகளாகிய உணவிற்கும் இடையே சில வியக்கத்தக்க இயைபுகளும் வேறுபாடுகளும் உண்டு. ஆழ்ந்த செவிச் செல்வமாகிய செவியுணவுடைய மக்களுக்குச் செவியுணவு நுகர்ந்து வருங்கால் சுவையுணவில் மனமே செல்லுவதில்லை. பொதுவாக அறிவியற் செயல்களில் ஈடுபாடுடையவர்கட்கு வேலை நேரங்களில் பசி தோன்றுவதே தெரிவதில்லை.

மேல்நாட்டு விஞ்ஞானி ஒருவன் மூன்று நாளைக்கு உண்ணாமல் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததாக வரலாற்றில் படித்திருக்கிறோம். எனக்குத் தெரிந்த தமிழ்ப் புலவரொருவர் காலை ஐந்து மணிக்குக் கம்ப ராமாயணத்தை விரித்துக்கொண்டு பாடத் தொடங்கினாரானால் பன்னிரண்டு மணி வரைக்கும் பசி தெரியாமல் கவிச் சுவை நுகர்ந்து கொண்டேயிருப்பார். மனம் ஒன்றில் ஈடுபடுகின்றபோது அதில் ஆழ்ந்து விடுமாயின் மற்றொன்றை நோக்கி எளிதில் திரும்புவதில்லை. இது மனவியல் நூலார் கண்ட முடிவு. இனி இயைபுகளாவன :- தாம் விரும்புகின்ற சுவையையோ

அல்லது உணவையோ ஒருவர் பிறவற்றில் ஈடுபாடின்றி மன இயைபோடு எந்த முறையிற் சுவைக்கின்றாரோ அதே முறையிற்றான் செவிச் செல்வத்தை விரும்புவாரும் கேட்டுக் கேட்டுச் சுவைக்கின்றனர். மிளகுச் சாற்றில் பெரு விருப்புடையா ரொருவருக்கு அவர் விரும்பும்போது அது கிடைக்கவில்லையெனின் எத்தகைய துன்பமுறுவாரோ அதே துன்பத்தைத்தான் கேட்டுக் கேட்டுப் பழகியவரும் கேட்க முடியாதபோது உறுகின்றார். கேள்வியாகிய செவிச் செல்வம் உடையவர்களுக்கும் பசி வருகின்ற நேரம் உண்டு என்றால் அது அவர்களுக்குச் செல்வமாகிய கேள்வி இல்லாத நேரமே யாகும். கேள்வியுணர்வில் அவர்கள் இன்பங் காணத் தொடங்கி விடுவார்களாயின் பின் சுவையுணவை மறந்தே விடுகின்றனர். செவிக்கு உணவு கிடைக்க முடியாத நிலையில்தான் அவர்கள் வயிற்றுக்கும் சிறிதளவு உணவு ஈயவேண்டியிருக்கிறது. வயிற்றிற்குள் இடும் உணவு அன்றன்றே அழியக்கூடியது. செவிக்குள் இடும் உணவு என்றென்றும் அழியாதது. இந்தப் பெரிய கருத்தமைதியை ஆசிரியர் பெருந்தகையார் திருவள்ளுவர் மிக நயம்பட,

**"செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்"**

என்று கூறியுள்ளார். இந்தக் குறுவெண் பாட்டில்தான் எத்துணைப் பெரிய நயங்கள் அமைந்துள்ளன. 'செவிக்கு உணவு' என்றே செவிச் செல்வமாகிய கேள்வியைக் கூறுகிறார். வயிற்றுக்கு உணவாகிய சோறுங்கறியும் பலவேளை யுண்டும், மீண்டும் மீண்டும் வேண்டப்படுகின்றன. ஆனால் செவிக்குணவாகிய கேள்வி பலமுறை வேண்டப்பட்டாலும் முன்னுண்டது அழிந்து போவதில்லை. நாளுக்கு நாள் பல்கி வளர்கின்றது. 'இல்லாத போழ்து' என்பதனால் கேள்வியுணவு இருக்கும் போது வயிற்றுக்குணவு வேண்டும் என்ற நினைவே எழுவதில்லை என்பதை நயம்படத் தெரிவிக்கிறார்.

கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்னும் ஆறு சுவைகளையுடைய வயிற்றுணவினும் சொற் சுவை, பொருட்சுவை என்னும் இரண்டேயிரண்டு சுவைகளை யுடைய கேள்வி பெரிதும் விரும்பப்படுகிறதென்ற நயமான பொருள் நுண்மையை இந்தச் சொற்கள் வெளிப்படுத்துகின்றன. 'சிறிது' என்பதனால் வயிற்றுணவு பெருகினால், நோய், காமம், மதர்ப்பு, கொழுப்பு முதலியன பெருகுவதோடு, பொருட் செலவும் மிகுதியாகும். செவியுணவு பெருகினால் சால்பு தவிர வேறு யாதும் தோன்றவே முடியாததோடு பொருட் செலவும் மிகுதியாவதுமில்லை என்ற பொருட் செறிவைப் பெற வைக்கிறார். 'வயிற்றுக்கும் ஈயப்படும்' என்பதனால் வேளை தோறும் நம்மை வாட்டும் வயிற்றை இழித்துரைக்கிறார். ''ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றே'' என்பதனால் ஈதல் வயிற்றின திழிபையும் கேள்வியினது பெருமையையும் உணர்த்தி விளங்குகிறது.

ஆக, இதுவரை கூறிய சில பல கருத்தமைதிகளாற் செவிச் செல்வமாகிய கேள்வியறிவு புவிச் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயதென்றும், தன்னையுடையார்க்குச் சான்றாண்மை நல்கி அவர் வாழ்வில் அமைதி நிலையெய்தத் துணை செய்யும் என்றும் வயிற்றுணவினும் மேலான இயல்பினையுடைய தென்றும் விளக்கி இக்கட்டுரையை இவ்வளவில் அமைக்கின்றோம்.

❐

# 8. மொழியும் மரபும்

கற்பனை, பேச்சு, எழுத்து, காவியம் ஆகிய எவற்றிலும் காலச் சூழ்நிலைக்கு ஏற்ற புதுமைகள் இடம் பெற்றிருப்பது போல் யாவற்றையும் ஊடுருவி நின்று தாங்கும் பழைய அடிப்படை ஒன்றும் அவசியம் அமைந்திருக்க வேண்டும். மொழியின் தூய்மைக்கும், மொழியை மூலமாகக்கொண்டு நிகழும் கலை, காவியம் ஆகியவற்றுக்கும் நிரந்தரமான இயற்கைப் பாதுகாப்பை உண்டாக்கிக் கொடுக்கும் வன்மை அந்த பழைய அடிப்படையின் பொறுப்பிலே நிகழ வேண்டும். காலம், வாழ்க்கை, காவியம், உலகம் ஆகிய எல்லாப் பொருள்களையும் மொழிக்குரிய சம்பந்தத்தைக் குறிக்கொள்ளும் மூலமாகவாவது அது காப்பாற்றுவதற்கு உரியது. அந்த 'அது' என்பதுதான் எது? பழைய அடிப்படையா? அப்படி என்றால் என்ன? அதுதான் மரபு. மரபைக் கடைப்பிடிப்பதில் அறிவும் விழிப்பும் வேண்டியதில்லை என்றாலும், அறிவும் விழிப்புமே துணையாக மரபைச் சீர்திருத்தி மாற்றிக் கொள்ளலாம் என்றாலும் இரண்டுமே வேண்டாத துணிவுகள். மரபின் பொறுப்பை உணர்ந்தவர்கள் இந்த இரண்டு துணிவும் தவறு பட்டவை என்பதை அறிவார்கள். உணர்ச்சிகளை வெளியிடுவதற்காகக் காவியத்தைப் படைக்கும் தேவை பெருகிய காலம் இது. மரபு குறுக்கிடும் நிலை ஏற்பட்டால், புதுமை, புரட்சி என்று அழகிய சொற்களைக் காட்டி மரபை ஒதுக்கி விலக்கத் துணிந்தவர்கள் வாழும் காலமும் கூட. அறிபுலனுக்கும் நுகர்புலனுக்கும் அவை பிறக்கும் மனத்திற்கும் ஆகிய இம்மூன்றோடும் தொடர்புபடும் இலக்கியம் மரபை விலக்கிய முறையிலே தோற்றுவிக்கப் படுமானால் சமுதாயத்தோடு இயைபு இழப்பது உறுதி.

'மரபு' என்பது உள்ளத்திற் சொல்லாக்கி உணர்வுகளைக் கவிதை யாக்கும் மொழித்துறைக் கலைஞர்களுக்கு இரும்பு விலங்காக இடப்பட்டிருக்கிறது என்று நினைந்து வீணே பழித்தல் பிழை. இலக்கியங்களைச் சமூகத்தோடு இணைக்கும் பொறுப்புடையதே மரபு. மரபினது பொறுப்பு அநாவசியம் என்ற எண்ணத்தோடு குலைக்கப்படுமானால் குளத்தின் கரைகள் நீர் நிறைந்துள்ள நிலையில் உடைத்துவிடப் பெறுவது போல் ஆகும்.

## காலமும் மரபும்

காலத்தோடு தொடர்பு படுத்திக் காணும்போது மரபு ஒரு பூச்செடியை ஒத்தது. ஒரே இடத்தில் ஒரே விதமான நீரும் மண்நிலையும் ஒரே பெயரும் பெற்று விளங்கினாலும் காலத்திற்கேற்பப் பூத்தும் பூக்காமலும் பெருமை, சிறுமை, மிகுதி, குறைவு ஆகிய வேறுபாடுற்றும் திகழும் இயல்பினது போலவே மரபும் விளங்கும். தான் ஒன்றாக இருந்தும் காலந் தோறும் சூழ்நிலை தோறும் மொழிவளர்ச்சிக்கு ஏற்பத்தான் என்ற ஒருமை மூலத்திற்கு அழிவு இன்றியே தன்னைப் பரந்த பன்மையாக மாறுபடுத்திக் கொண்டு வாழ்கிறது மரபு. இவ்வாறு பரந்த மனப்பான்மை உடையதாக விளங்கும் மரபை எழுத்தாலும், பேச்சாலும் உணர்வுகளாலும் இலக்கியத்தைப் படைக்கும் கலைஞர் சமூகம் குறுகிய நோக்கோடு புறக்கணிக்குமானால் அது எவ்வளவு பெரிய தவறு? உணர்வுகளை அனுபவித்துத் தானும் அவற்றின் ஆட்சிக்குப் பாத்திரமாக வேண்டிய நிலை வாழ்க்கை. உணர்வுகளை அனுபவித்து அனுபவித்துச் சிந்தனை பழகுதல் கற்பனைப் பயிற்சி. அவற்றை எல்லாம் சொல்வரம்புக்கு உட்பட்ட வெளியீடாக எழுதுவதோ, பேசுவதோ, இலக்கியம். இவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் சொல்வரம்புடனே ஒருவகைப்பட்ட முறையும் இயல்பு குன்றாத சொற்பொருள்

ஆட்சியும் வேண்டுமல்லவா? முறையும் சொற்பொருள் ஆட்சியும் படைப்பவனின் விருப்பத்திற்குரியவை என்றாலும் நுகர்பவர்களின் வெறுப்புக்குரிய முறையில் மரபு மீறிய தன்னுரிமையைப் படைப்பவன் நிலைநாட்ட முயலுதல் கூடாது. காலமே எதிர்க்கும் முழுப் பெருங் குற்றமாக உயர்ந்து விடும் இந்தச் செயல்.

**''எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே''**

என்று சொல்மரபுக்கு வரையறை கண்டனர் முன்னோர். காலத்தாலும், சூழ்நிலையாலும் இன்னும் எத்துணைப் பல கோடி ஆண்டுகள் சென்றாலும் இந்த விதியை நிர்மூலமாக்கி விட முடியாது. சிறிது மாறுபாடு செய்வதற்கு வேண்டுமானால் முடியலாம். ''காலம் என்ன அவ்வளவு ஆற்றல் வாய்ந்ததா?'' என்றால் மரபின் விட்டுக் கொடுக்கும் இயல்புதான் காலத்தின் ஆற்றல். மரபு மட்டும் விதித்த விதியாக வளைந்து கொடாது நின்று விடுமானால் காலம் அதை என்னதான் செய்துவிட முடியும்?

## மரபு வழுக்கள்

'தென்றல் காற்று அடிக்கிறது (வீசுகிறது), பூவைப் பிடுங்கினான் (கொய்தான்), சோறு போட்டான் (படைத்தான்), நல்ல பெண்களுக்குள்ளே இவளும் ஒருவள் (ஒருத்தி) - என்றெல்லாம் பேச்சிலும், எழுத்திலும், பாட்டிலும், வசனத்திலும், உணர்வுபெருகி அறிவுகுறைந்த ஆகுலத் தன்மை படைத்தவர்கள் மரபு வழுக்களை வளர்க்கிறார்கள். மொழியின் உயிராற்றலை உருக்குலைக்கும் இத்தகைய மரபுப் பிழைகளைக் காலம் உண்டாக்கிக் கொடுத்தால் யார் என்ன செய்ய முடியும்? தென்றல், பூ, என்ற சொற்களின் மென்மை கவின், அடிக்கிறது, பிடுங்கினான் என்ற பொருத்தமற்ற வினைச் சொற்களால் அழகிழந்து போகிறது.

இலக்கியங்களில் மரபுவழுக்கள் அமைத்துக் கொள்ளப் படுகின்றனவே என்றால் வழுமைதியால் ஒரு பெரும் பயன் ஏற்படும் நிலையிலேதான் அதுவும் பொருந்தும். சிறு குழந்தையின் காதுகளில் இரும்புக் கம்பியால் தட்டான், குழந்தை அழ அழக் குத்துவது வன்துயர் பயப்பதாக இருந்தாலும் அத்துளையில் பின்பு அழகான பொன்னணி ஒன்று அமைந்து காட்சிக்கு எழில் உண்டாகிவிடும்போது அந்தத் துயர் மறைந்து விடுகிறது. அதேபோல இலக்கிய ஆசிரியன் வழுப்புரிந்து மரபு தவறினால் அந்த வழுவுக்குக் காரணமாக அமைந்த பொருளாட்சி அதனினும் சிறந்த நயம் ஒன்றை அளிப்பதாக இருக்கவேண்டும். இவ்வாறு நயமளிக்காத நிலையில் மரபுவழு அமைத்துக் கொள்ளப் படுமானால் அது இலக்கிய ஆசிரியனின் சொந்த ஆற்றற் குறைபாட்டை நிர்ணயிக்கத் தகுந்த சான்றாக நிற்குமே அல்லாமல் வேறொன்றும் ஆகாது. சான்றாக ஒன்று காண்போம்.

> ***"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்***
> ***கழிபேர் இரையான் கண்நோய்."***

இத்திருக்குறளில் அஃறிணை உயிர்களின் உணவைக் குறிக்கும் 'இரை' என்ற சொல்லை உயர்திணையான் மேற்பொருத்திக் கூறியது திருவள்ளுவரின் மரபு வழுவே. ஆனாலும், இந்த வழுவை நாம் அமைத்துக் கொள்கிறோம். ஏன்? பசியறியாமல் மேலும் மேலும் உண்டு உடலைக் கெடுத்துக் கொள்ளும் அவனது அறியாமையை விளக்க ஏற்ற வார்த்தையாக நின்று விட்டது இரை என்ற சொல். அதுதான் காரணம். இனி அழகு அணி, இவை காரணமாகவும் வேறு பெயரால் இவைகள் அமைத்துக் கொள்ளப்படும்.

> ***"பாயிருள் பருகிப் பகல்கான்***
> ***றெழுதரு பல் கதிர்ப் பரிதி"***

''கூண்டு குமுத மலர்,
சிரிக்கக் கோகனகம்
ஈண்டிதழ்ச் செங்கை
குவிக்குமால்...''

என இவைகளும் ஒருவகையில் மரபு வழுக்களே ஆவன. எனினும் இலக்கணை சமாதி, பிறிதின்குணம் பெறலணி, என வேறு வேறிடங்களில் வேறு வேறு பெயர்களால் இவற்றை அழகும் நயமும் மிகுந்தமை குறித்து அமைத்துக் கொள்ளுவர். இலக்கிய ஆசிரியர்கள் தங்களது தவறுகளை மறைக்கும் ஒரு சாதனமாகப் பயன்படுத்துவது அன்று வழுவமைதி என்பது. ஒரு நயத்தையோ அழகையோ உண்டாக்க வேண்டிய விரைவில் சிறிய மரபுப் பிழை நேர்ந்துவிட்டால் வேறு வழியின்றிப் பயனின் மிகுதியை நோக்கி அமைத்துக் கொள்ளலாம். வழுவமைதியாய்ப் பெற்றுக்கொள்ள முடிந்த பயன் இந்த அளவினதே.

## நிகழ்காலத்தில் மரபின் நிலை

புதுமை, புரட்சி என்ற சொற்கள் இரண்டும் இல்லாமற் போயிருக்குமானால் மரபு தவறி எழுதுகின்றவர்கள் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் இரண்டு பிடி கொம்புகளை இழந்து போயிருப்பார்கள். பாட்டு, உரை, எழுத்து, பேச்சு ஆகிய எல்லாத் துறைகளிலும் மரபை எதிர்ப்பது, மீறுவது என்பது ஒரு பொழுது போக்கு விளையாட்டாகிவிட்டது இப்போது. இன்னும் விளக்கமாகச் சொல்லப் புகுந்தால் அதில் பலருக்குத் தனிப்பட்ட ஓர் ஆர்வமும் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் இந்த நிலைக்கு யார் பொறுப்பு? என்று சற்றே சிந்தித்துப் பார்த்தால், உணர்ச்சிப்பெருக்கே, முடிவான காரணமாக முன்நிற்கிறது. உணர்ச்சிகளைப் பேசியோ, எழுதியோ வெளியிட வேண்டுமென்ற ஆசைத் துடிதுடிப்புப் பலரிடம் பற்றிக் கொண்டிருக்கின்ற அளவிற்கு உணர்ச்சிகளை

வெளியிடும் அமைந்து அடங்கிய அறிவுத்திறன் சிறிதள வாவது சிலரிடம் கூடப் பெருகவில்லை. அடிப்படைக் காரணம் இவ்வளவினதே. அழகை உண்டாக்குவதற்காக உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுத்த நிலைமாறி, உணர்ச்சிகளை உருவாக்குவதற்காக அழகைப் படைக்க முயலுகின்ற வற்புறுத்தும் முறை நிகழ்கால இலக்கிய உலகில் மிக வேகமாக முன்னேறி வருகின்றது. எதையும், எப்படியும், எங்கும் சொல்லலாம் - சொல்ல முடியும் - சொன்னால் என்ன? என்று துணிந்தவர்கள் அந்த வழியை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். "மோட்டார் கம்பெனியில் அப்ரண்டிசாக ஒர்க் பண்ணுகிறான் ஸார் அவன். குட்ஃபெல்லோ ஸார்!" - என்று தாய்மொழிச் சொல்லேயின்றிப் பேசி மகிழச் சிறிதும் கூசாத காலம் இது. எழுத்திலும் சிலர் இந்த முறையினைச் சிறிது சிறிதாக, நுழைத்து வருகின்றனர். பாட்டும், உரையும், எழுத்தும், பேச்சும், எல்லாமே இலக்கியத் தொடர்புடையவை தாம். அவற்றில் எங்கே பிழை புரிந்தாலும் மரபு சிதையத் தான் சிதையும். மரபின் சிதைவு மொழியையும் சிதைக்கத் தொடங்காது என்பது என்ன உறுதியாகப் போயிற்று?

## மரபைக் காப்பாற்றுக

காலம், விலக்க முடியாத அளவிற்கு இரண்டொரு மரபுத் தவறுகளையும் நமக்கு உண்டாக்கிக் கொடுத்துவிட்டது. 'எனது நண்பர்!' - அவர் எங்கள் சங்கத்து விழாவில் பங்கெடுத்துக் கொண்டார்; - இவைகள் மரபுப் பிழைகள் என்று சொன்னால் இந்தக் காலத்தில் யாராவது ஒப்புக்கொள்வார்களா? காலத்துக்கு ஓரளவு வளைந்து கொடுத்துப் பொறுக்கும் இயல்பு மரபுக்கு ஓர் அளவு இருப்பதனால் சில வழக்குகளும் காலகதியில் அமைந்து பொருந்திவிடுகின்றன. அப்படிப் பொருந்தி அமைந்த பின்னர் அவற்றைப் பிழையென்று உணரும் உணர்ச்சியே பலருக்கு ஏற்படுவதில்லை. 'எனது'

என்பது ஆறாம் வேற்றுமை அஃறிணை ஒருமைக்கு மட்டுமே பொருந்தும். உயர்திணை ஒருமையோடோ பன்மையோடோ பொருந்தாது. எனது வீடு எனது புத்தகம் என்று கூறலாம். உயர்திணை முன் வருமானால் என்னுடைய நண்பர் எனக்கு நண்பர், என் நண்பர் என்றே கூறவேண்டும்.

தமிழில் பெரும் புலவர்களாகிய பலருக்கும் கூட ஏறக் குறைய இந்த முறை இப்போது மறந்துபோய்விட்டது என்றே சொல்லலாம். 'பங்கு எடுத்துக் கொள்ளுதல்' என்று தொடர் அமைவது தமிழ் மரபு இல்லை. 'Take Part' என்ற ஆங்கிலத் தொடரை நாம் 'பங்கெடுத்துக் கொண்டார்' என்று தமிழ் வழக்கில் பிழையற்ற மரபைப் போலவே மனத்திருப்தியோடு பேசவும் எழுதவும் செய்கிறோம். இன்னும் இவைபோலக் காலத்தால் அமைந்து அடங்கிப் போன மரபு வழுக்கள் எண்ணற்றவை. மொழியைக் கற்பவர்களையும், கற்க விரும்பு கின்றவர்களையும் அச்சுறுத்துகின்ற அளவிற்கு மரபைக் கடைப்பிடிக்காவிட்டாலும் மொழியின் நன்மையைப் பாதுகாக்கின்ற அளவிற்காவது மரபைக் காப்பாற்ற வேண்டும். கைக்கொண்டு கடைப்பிடிக்க வேண்டும். நம்முடைய அசாத்திய முன்னேற்றத்திற்கு நடுவே இந்தச் சில மரபு வழுக்களையும் களைந்துவிட்டு மேலும் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். ❑

# 9. மொழியும் மனத் தத்துவமும்

ஒரு மனிதனைத் தக்கான் அல்லது தகவிலன் என்று அறிந்துகொள்வது எப்படி? புறநடத்தைகளால் அறிந்து கொள்ள முடியுமா? அல்லது அக நடத்தைகளால் அறிந்து கொள்ள முடியுமா? எதன் மூலமாக ஒரு மனிதன் தக்கான் அல்லது தகவிலன் என்பதை உண்மையாக அறிந்துகொள்ள முடியும்? அக நடத்தைகள் என்பன மெய்யாகவே மனத்தில் எழும் எண்ணங்களையும் கோட்பாடுகளையும் குறிக்கும். புற நடத்தைகள் என்பன வெளிப் பகட்டுக்காகத் தான் நடந்து கொள்ளும் உண்மை எண்ணங்களுக்கு மாறுபட்ட செயல்களைக் குறிக்கும். எனவே, அக நடத்தைகளாலேதான் ஒரு மனிதன் உண்மையில் தக்கான் அல்லது தகவிலான் என்பதை அறிந்துகொள்ள முடியும் என்பது தெரிகிறது. மேனாடுகளில் இவற்றை மனோதத்துவம் என்ற பெயரின் கீழ் ஆராயும் ஆராய்ச்சியாளர்கள் பலர். மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் இதுபற்றி விரிவாக ஆராய்ந்தவை பல; இனி ஆராய்ந்துகொண்டிருப்பவையும் பல. நமது பழந் தமிழ் நூல்கள் சில, ஒரு மனிதன் தக்கான் அல்லது தகவிலான் என்பதை அறிவது எதனால்? என்னும் கேள்விக்கு விடை பகர்கின்றன. அக நடத்தைகள் என்பன வெளிப்படையாகக் கண்ணுக்குப் புலனாகாதன ஆகையால், அவைகளைக் கொண்டு ஒரு மனிதனை அறிந்துகொள்வது எப்படி முடியும்? எனக் கேட்கலாம். அந்த மனிதனுடைய அக நடத்தைகளே உருவெடுத்து அவனுக்கு ஒரு மகன் பிறக்கிறான் என்றால், அவனுடைய மகன் மூலமாக நாம் அந்த மனிதனது தக்க தன்மை, அல்லது தகவிலாத் தன்மையை அறிந்துகொள்ள முடியும். ஏனென்றால், அந்த மனிதன் தன் மகனைப் பெறுவதன் பொருட்டு மனையாளிடத்திலே அடையும்

இன்பம் ஐம்புலன்களும் பொருந்தி (கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று) இருப்பதால் அவனுக்குப் பிறந்த மகனும் அவனது புலன்களாகிய அக நடத்தைகளுக்கு விளக்கமாக அமைகிறான். தகப்பனது மன நிலை அந்த நேரத்தில் ஏற்பட்ட புலன்களின் பொருந்திய தொடர்ச்சியால் மகனிடமும் அமைந்துவிடுகிறது. இவை போன்ற உண்மைகளால் தகப்பனது அக நடத்தைகளை மகனிடம் அமையக் கண்டு, தகப்பன் தக்கான் அல்லது தகவிலான் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த ஆராய்ச்சிக்கு ஆதரவு கொடுக்கும் ஒரு சில சொற்றொடர்களைக் கிராமாந்திரங்களில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ''அப்பனைப்போல் மகன்'' என்றும் ''மகனைப்போல அப்பன்'' என்றும் சொல்லுவார்கள். பிரசவ வீடுகளுக்குச் சென்று குழந்தையைப் பார்த்து வரும் உறவினர்களில் சிலர், ''அப்பாவைக் கொண்டிருக்கிறான் பிள்ளை'' என்று கூறிக்கொள்வார்கள். சிலர் பிள்ளைகள் பிடிவாதத்திலோ நல்ல குணத்திலோ ஒருவாறு தன் தகப்பனாரைப்போல இருந்துவிட்டால் ''தகப்பன் சாமி'' என்று சொல்லிச் சிரிப்பார்கள். இவைகளெல்லாம் வேடிக்கை காரணமாகக் கூறப்படுவன என்றாலும், இவைகளின் அடிப்படைக் கருத்துக்கள் நமது கட்டுரைக்கு உறுதி பயக்கின்றன. இந்தச் சொற்றொடர்களைச் சிலர் வசை மொழியாக, ''விதையைப் போலத்தானே முளையிருக்கும்'', ''அப்பனைப்போல் மகனும்'', ''அந்தப் பயலுக்கு வாய்த்த புத்திதானே இந்தப் பயலுக்கும்'' என்று குரோதமாகக் கூறி விடுவார்கள்.

மேற்கூறிய இவை எல்லாம் சேர்ந்து ''மகனறிவின் தக்க தன்மை யல்லது தகவிலாத் தன்மையைக் கண்டு தந்தை யறிவின் தன்மையை நிர்ணயித்து விடலாம் என்ற மனோ

தத்துவக் கருத்திற்கு ஊன்றுகோலாய் அமைகின்றதனால்தான் இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

இனி நமது பழந் தமிழ் இலக்கியங்களில் ஒரு சில வற்றில் இக் கருத்துக்களுக்கு ஆதரவு கொடுக்கும் பாடல்கள் காண்கின்றன. அவைகளைக்கொண்டு இக்கூற்றுக்கள் ஒருவாறு உண்மையாவதை அறியலாம். திருக்குறளில் 'நடுவு நிலைமை' என்ற ஒரு அதிகாரம் எட்டாவதாகத் திகழ்கிறது. அதிலே சிறந்த மனோதத்துவக் குறள் மணி ஒன்றைப் பதித்திருக்கின்றார் வள்ளுவனார். 'நடுவு நிலைமை' என்பது அறத்தின் வழுவாமல் அனைவருக்கும் ஒப்ப நிற்கும் தன்மை. இதில், 'அறத்தின்' என்பதற்கு 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என நான்கும் இல்லாத தன்மையோடு' என்பது விரிபொருள். 'அனைவர்க்கும் ஒப்ப நிற்றல்' என்பதற்கு அன்போடு சுற்றத்தார்க்குதவும் தூய வாழ்வு நடத்தல் என்பதைப் பொருளாகக் கொள்ளலாம்.

எனவே, மேற்கூறிய 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவை நான்குமற்ற தன்மையோடு சுற்றத்தார்க்கு உதவி அன்பு செய்து வாழும் 'தூய வாழ்வே' நடுவு நிலைமைத் தன்மையானதொரு பேரறிவு ஆகும். இந்தத் தன்மை ஒரு தந்தையின்பால் அமைந்திருக்கிறதா, இல்லையா' என்பதை அவனுடைய மகனது தன்மையைக் கொண்டு காணலாம். தம் குறளில் ஒரு சிறந்த மனோதத்துவ முடிவை வள்ளுவனார் தருகிறார். இன்று நுணுகி நுணுகி மேனாட்டிலும், மற்றெங்கும் ஆராயப்படும் இவ்விஷயத்தைத் திருக்குறளில் காணுகிறோம் என்றால் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும் அல்லவா? இதுதான் வள்ளுவர் கூறும் அந்த மனோதத்துவப் பேராராய்ச்சி முடிவு:-

**''தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.''**

இந்தக் குறளுக்கு உரை கூறவந்த பரிமேலழகர், 'எச்சம்' என்பதற்கு மக்கள் என்று பொருள் கூறினார்.

மேற்கூறிய மனோதத்துவக் கருத்துக்களை மனத்திற் கொண்டு தேர்ந்த பின்னரே பரிமேலழகர் இச் சொல்லுக்கு இச்சிறந்த பொருளைக் கூறியிருக்க வேண்டும். எச்சம் என்பதற்கு, ஒரு பொருளின் மீதமான பகுதி என்பது பொதுவான பொருள். ஒரு பொருளின் மீதமான பகுதியைக் கொண்டு - அந்த மீதப் பகுதியின் சுவை, பண்பு, தோற்றம் இவைகளைக் கொண்டு - முதற்பொருளின் தன்மையையும் கணக்கிட்டுவிட முடியும். ஆகையால், 'எச்சம்' என்ற சொல்லின் அமைப்பே நமக்குப் பெருங் கருத்தைக் கொடுத்து விடுகிறது இங்கே. எனவே, நடுவு நிலைமை என்ற பேரறிவுத் தன்மை மிகவும் வாய்ந்திருக்கக்கூடிய ஒரு தந்தைக்கே அப்படி மகன் பிறக்க முடியும். ஆகையால், தத்தமக்குள்ள நடுவு நிலைமையைத் தம்முடைய மகனிடம் காணும்படி அவர்கள் மகனைப் பெற முயலும் ஐம்புலத் தொடர்பான நுகர்ச்சி காரணமாக மகனிடமும் தந்தையின் தன்மை அமைந்து விடுகிறது. அது காரணமாக மகனறிவே தந்தையின் அறிவிற்கு ஒரு விளக்கமாக முன் தொடர்பு தந்து நிற்கிறது. இதுவே இந்தக் கருத்துக்களாகிய மனோதத்துவத்தின் சிறந்த விதி. திருக்குறளிலிருந்து விரியும் இக்கருத்துக்களுக்கு வேறு நூலாதரவு இருந்தால்தானே வள்ளுவர் கருத்துக்கள் சிறப்படையும்?

ஆகவே, வள்ளுவனார் கருத்துக்களுக்கு ஆதரவு கூறுகின்ற கீழ்க்காணும் பெருந்திரட்டுப் பாடல் வரிகளைக் காண்போம்.

**"முக்குணந் தம்மின் மாறி**
**முயங்கிடுந் தந்தைக்கப்போ**
**தெக்குண முதிக்கும் பிள்ளைக்**
**கக்குணம் விதியதாமால்"**

இப்பெருஞ் சான்றால் ஆசிரியர் திருவள்ளுவனார் கூறிய சிறந்த மனோதத்துவக் கருத்து, உண்மை முடிவு என்று அறியப் படுகிறது.

இனி நாலடியார் என்ற நீதி நூலில் நமது கருத்துக்களுக்கு ஆதரவு பயக்கும் வெண்பா ஒன்று காண்கிறது. செந்நெல்லைப் பூமியில் விதைத்தால் அதே செந்நெல் பயிர்தான் முளைத்து எழும். வேறு ஏதாவது நன்றாக விளையாத நெல்லைப் போட்டால் அதே பலவீனமான சாவி நெற்பயிர்தான் முளைத்தெழும். எனவே, எந்த விதை இடப்படுகிறதோ அந்த விதையின் பயிரே முளைக்கும். தீய தந்தைக்குத் தீய மகனும் நல்ல தந்தைக்கு நல்ல மகனும்தான் பிறக்கிறான். விதைக்குத் தகுந்த முளைதான் முளைக்கிறது. முளையைப் பார்த்தால் விதை எப்படியிருக்கும் (வளமான நல்ல விதையா? அல்லது பலவீனமான தீய விதையா?) என்பதை அறிந்து கொண்டு விடலாம். இந்தத் தத்துவத்தை முதலில் உருவகப்படுத்தி விட்டுக் கடைசி அடியில் 'மகனறிவு தந்தையறிவு' என்றார் சமண முனிவர். திருவள்ளுவர் கருத்துக்கு இங்குமொரு சிறந்த விளக்கம் கிடைக்கிறது. இதோ அவ்வெண்பா:-

**"செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றுமச்**
**செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்**
**வயல்நிறையக் காய்க்கும் வளவய லூர**
**மகனறிவு தந்தை யறிவு."**

இதன் கடைசி அடியில் 'மகனறிவு தந்தை அறிவு' என்று கூறவந்த ஆசிரியர் 'மகன்' என்ற சொல்லை முதல் நிலைக் கண் கூறினார். ஆகையால் மகனறிவின் தன்மையை ஆராய்ந்தாலே தந்தையறிவின் தன்மை தானாகப் புலப்படும் என்ற உண்மையைக் காண்கிறோம். இதிலிருந்து மனிதனது முக்குணம்மாறும் மன நிலையே பிறக்கும் மகனிடம் பிரதி பலிக்கிறது என்று, மகனது தக்க தன்மை அல்லது தகவிலாத் தன்மையே தந்தையினது தன்மையைக் காணப் பயன்

படுகிறது என்றும் மகனறிவு நடுவு நிலைமையின் பாற்பட்டதாய் இருந்தால் தந்தையறிவு அஃதே என்றும் மகனுக்கும் தந்தைக்கும் உள்ள மனோதத்துவக் குணத் தொடர்பை அறிய இதனால்தான் முடியுமென்றும் நன்கு தெரிந்து கொண்டோம்.

மனித எண்ணங்களையும் மனித உணர்ச்சிகளையும் ஆராயும் மூலமாக இன்று மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களும் மற்றுமுள்ள அறிஞர்களும் இவ் வுண்மையை வெளியிட்டாலும் என்றோ பழந் தமிழ் நூல்கள் இவ்வுண்மையை வெளியிட்டு விட்டன. நடைமுறை உலகில் நல்ல தந்தைக்குத் தீய மக்களும் தீய தந்தைக்கு நல்ல மக்களும் இருப்பதைப் பார்க்கும் போதுதான் நாம் இக் கருத்தை மேலும் ஆராய வேண்டி யிருக்கிறது.

# 10. இரண்டு மணிமொழிகள்

"அப்பா! இந்தக் குறள் பாடத்தில் வந்திருக்கிறதப்பா! இதற்குப் பொருள் விளங்கவில்லை. சொல்லிக் கொடுங்களப்பா" உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் என் தலைமகன் கையில் பாடப் புத்தகத்தோடு என் அருகே வந்து நின்றுகொண்டு கேட்டான். நான் அவன் கையிலிருந்த பாடப் புத்தகத்தை வாங்கினேன். அவன் சுட்டு விரலால் அந்தக் குறளைத் தொட்டுக் காட்டினான்.

**"வேண்டாமை யன்ன விழுச் செல்வம்**
**ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பதில்"** (37 - 3)

இதுதான் அந்தத் திருக்குறள். 'பொருள்களின் மேல் ஆசைப் படாமலிருப்பதைப் போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை. மோட்ச உலகத்தின் கண்ணுமில்லை' - இதுதான் பொருள். போய்ப் படி - என்று வார்த்தைக்கு வார்த்தை பொழிப்புரையாக ஒரு பொருளைக் கூறினேன். புரிந்து விட்டதுபோலப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு போய் விட்டான் பையன். இந்தக் குறளின் பொருள் அவனுக்குப் பரீட்சை எழுதும் அளவுக்குப் புரிந்தது. ஆனால், உலகில் இதன் பொருளைப் புரியாதார் எத்தனை பேர்? நான் கூறி அனுப்பிய இந்தச் சாதாரணமான பொருளால் அவன் மனம் தெளிவுற்றுச் சென்றுவிட்டது என்னவோ மெய்தான்! ஆனால், அவன் மனந்தெளிந்து செல்வதற்குக் காரணமாகப் பொருள் கூறித் தெளிவுறுத்திய என் மனம் விரைவாகக் கலங்கத் தொடங்கிவிட்டது!

துறவிக்கு 'வேண்டாமை' தான் விழுச் செல்வம்! அதை ஒத்த செல்வம் இவ்வுலகிலோ வேறெங்குமோ (துறக்கம் முதலியவற்றிலோ) இல்லை என்கிறார் நம்முடைய திருவள்ளுவர். ஆனால், என்னருகிருந்த டால்ஸ்டாய், காந்தி யடிகள், என்னும் மற்ற இருவரின் நூல்களோ, 'வேண்டாமை

துறவிக்கு மட்டும் விழுச் செல்வமில்லை, சமூக வாழ்வில் பொதுநலத்தின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு தனி மனிதனும் எவ்வளவிற்குத் தந்நலத்தைச் சுருக்கிக் கொண்டு தேவைகளைப் பெருகவிடாமல் வேண்டாமையைக் கடைப்பிடிக்க முடியுமோ அவ்வளவிற்குக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று கூறின.

திருவள்ளுவர் துறவியைத் துறவியாக வாழச் செய்வதற்கு எந்த ஒரு பண்பு வேண்டுமோ அதைத் துறவிக்காகவே கூறுகிறார். அதே நேரத்தில் டால்ஸ்டாயும் காந்தியடிகளும் மனிதனைச் சமூக வாழ்வில் மனிதனாக வாழச் செய்வதற்கு எந்த ஒரு பண்பு வேண்டுமோ அதைத் தனி மனிதனுக்காகவே கூறுகின்றார்கள். இரு வேறு பக்கமும் சற்றே மாறித் தோன்றும் இந்தக் கருத்தமைப்பு என் சிந்தனையை வளர்த்தது. 'துறவிக்கு ஒன்றும் வேண்டாத நிலையே விழுச் செல்வம்' என்றால் பொது வாழ்வில் தனி மனிதனுக்கு அவ்வாறு இருக்க முடியுமா? திருவள்ளுவராவது பொதுவாழ்விலிருந்து விலகி வாழும் துறவிகளோடு வேண்டாமையைத் தொடர்பு படுத்துகிறார். ஆனால், டால்ஸ்டாயும், காந்தியடிகளும் இந்தப் பண்பை பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள சாதாரண மக்களோடும் தொடர்பு படுத்துகின்றார்களே...! இஃது எவ்வாறு பொருந்தும்? கருத்துப் பிழை அதனை நல்கும் இருவரில் எவர் பக்கமாவது இருக்கிறதா? அல்லது சிந்தனை செய்யும் நம் மதியில்தான் இருக்கிறதா? - என்பதே எனக்குப் புலனாகாமல் மயங்கினேன். மடியிலே கனமில்லாதவன் வழியில் பயப்படமாட்டான் அல்லவா? தேவையை நிறை வேற்றிக் கொள்வதற்காகப் படுகின்ற முயற்சித் துன்பமும் அது நிறைவேறாமல் முறிந்துபோனால் ஏமாற்றமடைகின்ற துன்பமும், தேவை என்றே ஏதுமற்றவனுக்குக் கிடையா தல்லவா?

வாழ்வில் ஊக்கம் பெறுவதற்குப் போதுமென்ற மனம் தான் வேண்டும். தேவைக்கு மீறிய பெருஞ் செல்வமும் ஒரு வகை வறுமைதான். மனத்தில் சூழ்ச்சியை விதைப்பது

அளவுக்கு அப்பாற்பட்ட தேவைதான்! எதுவரினும் கலங்கிக் கையறவுபட்டுச் சோர்ந்து விடாத மனம் ஒன்றுதான் மனிதனின் அழியாத தேவை. இன்பம் வரினும் துன்பம் வரினும் விளைவற்ற பொறுமை உள்ளம் கொண்டு அறம் ஒன்றையே நம்பி வாழ முற்படுகிறவனுக்கு என்றும் கவலை அவலங்கள் இல்லை. இன்பத்திலோ துன்பத்திலோ உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு அழுந்தி விடுவோர்தாம் கலங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

''எந்தப் பொருளின் மேலும் அளவுக்கதிகமான பற்று வைத்துவிடாதே! அப்புறம் அந்தப் பொருளின் இழப்பிலோ, அழிவிலோ நீ வைத்த பற்றினால் அந்தப் பற்றினும் பன் மடங்கு துன்பப்பட வேண்டி நேரிடும். ஆகவே, தண்ணீரில் எண்ணெய் போலவும் தாமரை இலை மேல் தண்ணீரே போலவும் மண்ணில் எழுந்து மண் படாமல் பூக்கும் தாமரை மலர் போலவும் வாழ்வில் ஒட்டியும் ஒட்டாததுபோல் வாழ்க'' - என்ற அறிவுரை என் நினைவில் படர்ந்தது. இந்த அறிவுரையையொட்டி,

> **''மெய்த் திருப்பதம் மேவு என்ற போதினும்**
> **இத்திருத்துறந்து ஏகு என்ற போதினும்**
> **சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை**
> **ஒத்திருக்கும் முகத்தினை...''**

(காட்சிப் படலம்)

என்ற கம்பனின் பாட்டும் என் சிந்தனையில் தோன்றியது.

> **''இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்**
> **மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து''** (54 : 9)

என்ற அரசியல் திருக்குறளும் நினைவின் விளிம்பிலே வந்து நின்றது. அரசியலுக்கு அது சரிதான்! பொதுவாழ்வுக்கு...? இந்தக் கேள்வி என் சிந்தனையை மறுபடியும் தடம்புரளச் செய்தது. தடம் புரண்டு கிளர்ந்த இந்த புதுச் சிந்தனையில் வேறொரு புதிய உண்மையும் புலனாயிற்று! வெறும்

கெண்டைமீன் அகப்பட்டால் போதும் என்று இட்டதூண்டிற் கொக்கியில் ஆயிரக்கணக்கில் விலைபோகும் முத்துச் சிப்பியே தொத்திக்கொண்டு வந்ததுபோலாயிற்று, என் சிந்தனையின் விளைவு. துறவற்ற வாழ்வு, அரசியல் வாழ்வு, தனி மனிதனின் சமூக வாழ்வு, ஆகிய இம்மூன்று வேறுபட்ட வாழ்வுகட்கும் தேவையைச் சுருக்கிக்கொண்டு வாழும், வேண்டாமை என்னும் விழுச் செல்வம், ஒரு குறிப்பிட்ட விகித ஒழுங்குப்படி வேண்டியிருக்கிறது. டால்ஸ்டாயும், காந்தியடிகளும் துறவு, அரசியல், சமூகம் என்று பகுத்து நோக்காமல் மொத்தமாகத் 'தேவை சுருங்கித் தந்நலம் குன்றினால் ஒழியச் சமூக வாழ்விலுள்ள போட்டி, பொறாமை பூசல்களும் ஊழல்களும் நீங்க வழியில்லை' என்று பொதுவிற் கூறிச் சென்றார்கள். ஆனால் சிந்தனை வளமும் அறிவுத் திறனும் மிக்க நம்முடைய தமிழ்நாட்டுத் திருவள்ளுவரோ, இந்த வேண்டாமை என்னும் விழுச் செல்வம் அரசியல் வாழ்வுக்கு எவ்வளவு தேவை? பொது வாழ்விற்கு எவ்வளவு தேவை? என்று மூன்று வேறு இடங்களில் மூன்று வேறு விதமாகப் பிரித்து விகிதப்படுத்திக் கூறியிருக்கின்றார். துறவிக்கும், அரசியலாளர்க்கும் பற்றற்ற நிலை, விருப்பு, வெறுப்பில்லாமை ஆகிய இந்தப் பண்புகள் சமஅளவில் தேவை. சமூக வாழ்வில் ஈடுபட்டுள்ள தனி மனிதனுக்கு இவ்வளவு தேவையை இந்தப் பண்புகள் பெற முடியாவிடினும், பிறரைத் துன்புறுத்தாமலும், பிறரால் நாம் துன்புறுத்தப்படாமலும் வாழ்கின்ற அவ்வளவிற்காவது அவசியமானவையே.

திடுமென்று மேசையிலிருந்து ஏதோ கீழே உருண்டு விழுந்து உடைந்த ஒலி என் சிந்தனையைக் கலைத்தது. திடுக்கிட்டவனாக நாற்காலியினின்று எழுந்து மேசைக்கடியில் குனிந்து பார்த்தேன். ஏறக்குறைய ஐம்பதுவெண் பொற்காசுகள் பெறுமானமுள்ள என்னுடைய பார்க்கர் எழுதுகோல் (Parker Pen) மேசையிலிருந்து கீழே விழுந்து உடைந்திருந்தது. பல ஆண்டுகளாக நான் பயன்படுத்திவந்த எழுதுகோல் அது! மூடி விளிம்புகளில் பொன்வளையங்கள் இட்டுக் காண அழகாக

விளங்கிய அந்த உயர்ந்ததரத்து எழுதுகோலை என் உயிரினும் சிறந்ததாக மதித்து வந்தேன். ஆனால், இப்போதோ அது உடைந்து ஒழுகிய மைக்கறையின் நடுவே சில்லுச் சில்லாகக் கிடந்தது. போர்க் களத்தில் குருதி வெள்ளத்தினிடையே கை கால்கள் வெட்டுண்டு இறந்து கிடக்கும் காதலனை அவனுடைய ஆருயிர்க் காதலி எத்தகைய சோக உணர்வோடு காண்பாளோ அத்தகையதோர் அவலம் என் நெஞ்சத்தை அழுத்திப் பிழிந்தது. நான் திருக்குறள் புத்தகத்தை அசைத்த போது அதன் ஒரு முனை பேனாவை உருட்டியிருக்க வேண்டும்! எப்படி உருண்டு விழுந்தாலென்ன? என்னுடைய உள்ளத்தில் அழியாத மகிழ்ச்சிக்கும் ஆர்வத்திற்கும் காரணமாக இருந்த அந்த அரும்பொருள் அழிந்து போய்விட்டது! இனி அதை மீண்டும் முழு உருவுடன் காண இயலாது என்பது உறுதி. கொற்சேரி ஊதுலையைப் போல வெய்துயிர்த்து உருகித் தவித்தது என் உள்ளம். அளவு மீறிய பற்றுச் செலுத்திப் பேணிய அந்த எழுதுகோலை இழந்த தவிப்பில் நான் சிந்தித்துக் கொண்டிருந்த செய்தியே எனக்கு மறந்து போய்விட்டது. டால்ஸ்டாயை மறந்தேன், காந்தியடிகளை மறந்தேன், திருவள்ளுவரையும் மறந்து விட்டேன். 'வேண்டாமை' பற்றிய அவர்கள் கருத்துக்களும் என் உள்ள மலரிலிருந்து உதிரும் இதழ்கள்போல வாடி உதிர்ந்து விட்டன.

மேசைமேல் கிடந்த மூவரின் நூல்களும், கருவுயிர்த்த சற்றைக்கெல்லாம் தாயிழந்த பார்ப்புக்களைப் போலப் பார்ப்பேரரற்றுக் கிடந்தன. நான் வேண்டிப் பேணிக் கொண்டிருந்த ஒரு மதிப்பிற்குரிய பொருளின் எதிர்பாராத சிதைவு என் உள்ளத்தைச் சிதைத்துக்கொண்டிருக்கும்போது வேண்டாமையைப் பற்றிய கருத்துக்களும் நூலறிவுரைகளும் அங்கே எப்படித் தங்கமுடியும்? இந்நிலையில் ஒரு வாரம் கழிந்தது.

அரிமாவின் குகையிலே நாய்க் குருளையைக் கொண்டு போய்க் குடியேற்றியது போலப் பழைய எழுதுகோலின்

இடத்தை மூன்று வெண்பொற் காசுகளுக்குக் கடைவீதியில் வாங்கியிருந்த ஒரு புது எழுதுகோலுக்கு அளித்திருந்தேன். ஆனால் அப்படியும் அந்தப் பழைய எழுதுகோல் உடைந்து போன துயர நினைவை மட்டும் என்னால் மறக்கவே முடிய வில்லை. புதிய எழுதுகோல் கையெல்லாம் மையாக ஊறி என்னை வருத்தும்போது கூடப் 'பழைய எழுதுகோல் இருந்தால் இப்படி எல்லாம் ஆகாதே' - என்ற எண்ணம் தோன்றி ஏங்கி நெடுமூச்சு விடச்செய்யும். அன்று காலையிலும் அப்படித்தான் ஏங்கிக்கொண்டே அந்தப் புது எழுதுகோலினால் வேண்டா வெறுப்பாக எழுதிக் கொண்டிருந்தேன். என் தலைமகன் அன்றொரு நாள் வந்ததுபோலவே பாடப் புத்தகமும் கையுமாக வந்தான். 'என்னடா வேண்டும்?' என்று நான் கேட்டேன். 'அன்றைக்குப் போலவே ஒரு குறளுக்குப் பொருள் தெரிய வேண்டுமப்பா' என்று கேட்டான் அவன். ''என்ன குறளடா அது?'' - என்று வினவினேன்.

**''இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்ப முறுதல் இலன்.''** (குறள் 629)

இந்தக் குறள்தான் அப்பா! கணீரென்ற குரலில் குறளைக் கூறினான் புதல்வன். எதிர்பார்த்துக் கொண்டிருந்த கருத்துப் பல நாட்களுக்குப் பின் எதிர்பாராத விதமாக என்னை அடைந்துவிட்டது போன்ற நிலையைப் பெற்றேன் நான். பொறியை அமுக்கியதும் குபீரென்று பாய்ந்து எரியும் மின் விளக்கின் ஒளிபோல என் மனத்தில் ஒரு கருத்தொளி பாய்ந்தது. விரைவாக அவனுக்குப் பொருளைக் கூறி அனுப்பி விட்டு அன்று போலவே டால்ஸ்டாய், காந்தியடிகள், திருவள்ளுவர் ஆகிய மூவர் நூல்களையும் விரித்துக் கொண்டு சிந்தனை செய்ய அமர்ந்தேன். எனது சிந்தனையின் மணிமுடியாக அமைந்து முடிவு பெறவேண்டிய கருத்து இன்று - இப்பொழுது எனக்கு விளங்கிவிட்டது!

ஆனால், இந்தக் கருத்தை நான் விளங்கிக் கொள்வதற்கு என் விலையுயர்ந்த எழுதுகோல் பலியாகித் தீர வேண்டு

மென்பதுதான் இறைவன் சித்தமோ என்னவோ? **'எந்தப் பொருளின் மேலும் அளவிற்கும் அதிகமான பற்றுக் கொண்டால் அந்தப் பொருளின் அழிவில் வேதனைப்பட வேண்டிய நிலை உறுதியாக ஏற்படும்.'** - இந்த மெய் என் மனத்தில் பதிந்தது!

துறவிகளுக்கு எத்தகைய வேண்டாமை வேண்டும் என்பதை அவாவறுத்தலிலும், அரசியலாளர்க்கு எத்தகைய வேண்டாமை வேண்டும் என்பதைப் 'பொச்சாவாமையிலும்' (இகழ்ச்சியிற் கெட்டாரை என்ற குறள்) தனிமனிதனுக்குச் சமூக வாழ்விலே எத்தகைய பற்றற்ற நிலை வேண்டும் என்பதை 'இடுக்கணழியாமை'யிலுமாகக் கூறி விகிதப்படுத்தி டால்ஸ்டாய்க்கும், காந்தியடிகளுக்கும் தெளிவுரை கூறும் திருவள்ளுவர் புலமையை என்னால் வியவாமல் இருக்க முடியவில்லை.

டால்ஸ்டாயும், காந்தியடிகளும் எனக்குத் தெளிவாக விளக்க முடியாத ஒரு கருத்தை அவர்களுக்கும் முன்பேயிருந்து மறைந்த தமிழகத்துத் திருவள்ளுவர் உள்ளங்கை நெல்லிக்கனி என விளக்கிச் சென்றிருப்பதைக் கண்ட நான் அவருக்கு எந்த வகையில் நன்றி செலுத்துவது என்றறியாமல் திகைத் திருந்தேன். அப்போது பலகணிவழியே வீசிய காற்றில் திருக்குறள் புத்தகத்தின் பக்கங்கள் புரண்டு படபடத்தன. 'குறளை மீண்டும் மீண்டும் படித்து ஆழ்ந்து சிந்திப்பது மூலமாக நீ உன் நன்றியைச் செலுத்தலாம்' என்று படபடத்த அந்த ஏடுகள் எனக்குச் சொல்வதுபோலிருந்தது.

**"வேண்டாமை அன்ன**
**விழுச்செல்வம் ஈண்டில்லை**
**யாண்டும் அஃதொப்பதில்.**
**இன்பத்துள் இன்பம்**
**விழையாதான் துன்பத்துள்**
**துன்ப முறுதல் இலன்."**

❑

# 11. மொழியில் ஒப்புநயம்

மிகச் சிறிய குறட்பாவிலும் உவமைகளை நயம்பட அமைக்கும் திறனைத் திருவள்ளுவர்பால் காணலாம். அவர் கூறும் உவமைகள் யாவும் திரண்டு தெருண்ட செறிவும் நுணுக்கமும் பொருந்தியவையாக இருக்கும். தாம் கூற வந்த பொருளை நன்கு விளக்குந் திறன் பெற்ற உவமைகளையே கூறுவார் வள்ளுவர். அணி அலங்காரங்களுக்காக அகப்பட்ட வற்றையெல்லாம் ஒப்புக்காட்டும் வேடிக்கைக் கவிவாணர் செயலை அறவே வெறுப்பவர் அவர் என்றுகூடச் சொல்லலாம். பொருளை விளக்குகின்ற ஆற்றலும் பயனும் இல்லாத உவமைகளை அவர் ஒரு போதும் கூறார். கருத்துக்கு விளக்கம் கூறும் இன்றியமையாத நிலை ஏற்படுமானால் ஒரே உவமையையே இரண்டு மாறுபட்ட பொதுத்தன்மைகளை யுடைய இரண்டு வேறு உவமைகளாக ஆக்கிக் கூறும் அருங்கலைத் திறனும் வள்ளுவனாரிடம் உண்டு. அத்தகைய அருங்கலைத் திறன் அவரியற்றிய நூலுள் அமைந்துள்ள மையைக் குறிப்பிட்டு விளக்குவதுதான் இக்கட்டுரையின் நோக்கம். உடம்பிற்கும் உயிருக்குமுள்ள தொடர்பை வள்ளுவர் இரண்டிடங்களில் உவமையாகக் கூறியுள்ளார். உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பின் நிலை யாமையை வேறொரு விதமாக உவமை கூறி விளக்குகிறார் வேறொரு குறளில். ஒருவனுக்கும் ஒருத்திக்குமுள்ள காதலை விளக்குவதற்கு உடம்பிற்கும் உயிருக்குமுள்ள தொடர்பை நிலைத்ததாக உவமை கூறுகிறார் மற்றொரு குறளில். இவ்விரண்டு உவமைகளில் பொதுத்தன்மை வேறுபடுதல் வெளிப்படையாக விளங்கும். ஒன்றில் நிலையாத 'தொடர் பின்மை'யையும் மற்றொன்றில் நிலைத்த தொடர்பையும் பொதுத்தன்மைகளாகப் பொருத்தி இவ்விரு உவமைகளையும்

கூறியிருக்கிறார் வள்ளுவர். அதுதான் இங்கு அவரிடம் நாம் காணும் பெரிய நயம்.

**“குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு.”**

(நிலையாமை - 8)

இஃது அறத்துப்பாலில் துறவறவியலில் நிலையாமை என்னும் அதிகாரத்திலுள்ள ஒரு குறள். ‘முட்டை தனித்து நீங்கப் பறவை அதனைவிட்டுச் சென்றாற்போல உடம்பு தனித்து நீங்கும்படியாக அதனைத் தான் பிரிய வேண்டிய காலத்துப் பிரிந்து செல்லுவது உயிர்.’ உடம்பும் உயிரும் அக்காலத்து அன்னவகையால் தொடர்பின்மையை உறுவன என்பது இக் குறளாற் போந்த கருத்து. இதனுள் ‘நட்பின்மை’யை நட்பு என்று சுட்டியுள்ளார் வள்ளுவர்.

தமிழ் இலக்கண நூலார் இதனை ‘எதிர்மறை இலக்கணை’ என்பர். இக்குறளைச் சுட்டி ‘அபிதாமூலத் தொனி’ என்றும் ‘விருத்த விலக்கணை’ என்றும் பிரயோக விவேக நூலார் விளக்கியுள்ளமை இங்கே ஒப்பு நோக்கி மகிழத்தக்கது. முட்டையிலிருந்து நீங்குவதற்கு முன் பறவைக்கும் முட்டைக்கும், உடம்பிலிருந்து நீங்குவதற்கு முன் உயிர்க்கும் உடம்பிற்கும், ஒரு குறிப்பிட்ட கால அளவு நட்பு உண்மையைக் கூறுவதற்கு அவ்வாறு இலக்கணைப் பொருளும், தொனி நயமும்பட அமைத்த நுணுக்கம் பாராட்டத்தக்கது. இக்குறளால் உடம்பிற்கும் உயிர்க்குமுள்ள தொடர்பு நிலையற்றது என்பதை நன்கு வற்புறுத்தும் இதே வள்ளுவர் உடம்பிற்கும் உயிர்க்கும் நிலைத்த தொடர்புள்ளது போல் வேறோரிடத்தில் வேறொரு உவமையைச் சொல்லியிருப்பாராயின் அஃது ஆராய வேண்டிய ஒன்றல்லவா? மூவிரு குற்றமும் முற்றக் கடிந்து பற்றற்ற துறவிக்கு உடலுயிர் இயைபின் நிலையாமையை உணர்த்தவேண்டிய இடத்தில் அமைந்தது இந்த முதல் உவமை. ‘ஈருடலும் ஒருயிருமாக

இணைந்த காதலர்' என்றவாறு ஒருமை பெற்ற காதல ரிருவருக்குமுள்ள தொடர்பை விளங்கக் கூறி விவரிக்க வேண்டிய இடத்தில் உடம்பும் உயிரும் ஒன்றோடொன்று இணைந்து பிணைந்துள்ள இயைபை உணர்த்தி அதுபோன்ற இயைபைக் காதலுக்கும் கற்பிப்பது அந்த இரண்டாவது உவமை.

**"உடம்போ டுயிரிடை யென்ன மற்றன்ன**
**மடைந்தையோ டெம்மிடை நட்பு."**

(காதற் சிறப்பு - 2)

இது காமத்துப்பாலில் களவியலில் 'காதற் சிறப்புரைத்தல்' என்னும் அதிகாரத்திலுள்ள ஒரு குறள். 'உடம்பும் உயிரும் தம்முள் இரண்டறக் கலந்து ஒருருவாய் இயைந்தாற் போன்றது மடந்தைக்கும் எமக்கும் இடையே உள்ள நட்பு. அது பிரிக்க முடியாது இணைந்த ஒருமைப்பாடு உடையது' என்பது இக்குறளாற் போந்த கருத்து. உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள இயைபு மாத்திரமே இங்கே உவமை.

'யாக்கைக்கு உயிர் இயைந்தன்ன நட்பு', 'இருதலைப் புள்ளின் ஒருயிரம்மே' என்று அகநானூறு இக்கருத்தை விவரிக்கும். அவள் வேறு, தான் வேறு என்று வேறுபடாது இயைந்துள்ள காதலுணர்ச்சியின் ஒருமையை நட்பென்று கூறினான் தலைவன். இங்கே உவமை, 'உடம்போடு உயிர்க் குள்ள இயைபு.' பொருள் மடந்தைக்கும் அவனுக்குமுள்ள உணர்ச்சி ஒருமை. இவ்விரண்டு குறள்களிலும் வந்துள்ள இரண்டு உவமைகளையும் இவ்வாறு பகுத்து உண்மை நயத்தைக் காணவில்லையாயின் வள்ளுவர் செய்தது தவறு என்றே நினைக்கத் தோன்றும். முதற் குறளிற் பயின்றுள்ள 'நட்பு' என்ற சொல்லுக்குத் தொடர்பு - உறவு என்றே பொருள் கொண்டால் போதும். இரண்டாங் குறளில் கண்ட 'நட்பு' என்ற சொல்லுக்கு 'உணர்ச்சி ஒருமை' காதல் என்பன போலப் போந்த பொருள் கொள்ளுவதே உவமையைச் சிறப்பிக்கும்.

இவ்விரண்டு உவமைகளும் வள்ளுவர் கலைத் திறனை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளன. இக்குறள்களின் விளக்கவுரையில் ஆசிரியர் பரிமேலழகர் சுருக்கமான முறையில் இவைகள் ஒன்றோடொன்று மாறுபடாத நயத்தைக் கூறியிருக்கிறார். ஒன்று துறவுலகம். மற்றொன்று காதலருலகம். இரண்டிலும் அமைந்த உவமையியல்பு மாறு படாத முறையில் அதற்கு மேற்பட்ட பொருட் சிறப்பையும் காணும்படி செய்திருக்கிறார் வள்ளுவர். ஒருவனுக்கு நிலை யாமையை அறிவுறுத்த வேண்டும். மற்றொருவனுக்கு நிலைத்த காதலை அறிவுறுத்த வேண்டும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்திக் கல்லையும் திரும்பத் தான் பெற்றுவிடுவதுபோல ஒரே கருத்தை இரண்டுவமைகளாக்கிக் குற்றமும் அணுகாமல் காத்துக்கொள்கிறார் வள்ளுவர். நிலையாத உடம்பினைக் கருவியாகக் கொண்ட துறவிக்கு அவ்வுணர்வு மறவாது, தான் முயலவேண்டியது கடனாகின்ற தன்மையை அவ்வாறு உணர்த்தினார். ஈருடல் ஒருயிராகக் கலந்த ஒருமையுணர்ச்சியை இவ்வாறு உணர்த்தினார். கல் ஒன்றுதான். வீழ்ந்த மாங்காய்கள் இரண்டு. இது வள்ளுவர் திறமைக்கு ஒரு மணிமுடி சூட்டி வைக்கிறதல்லவா?

வள்ளுவர் நூலைத் திரும்பத் திரும்பப் படிக்கும்போது புதிய புதிய நயங்கள் காண்கிறோம். மலைப்பு ஏற்பட்ட பிறகு தான் உண்மை மலைபோலக் கண் முன்னே தோன்றுகிறது. 'இரண்டு உவமைகளை வள்ளுவர் இவ்வாறு புணர்த்துக் கூறியது தகுமா?' என்ற மலைப்பு ஏற்பட்டது. அதற்கு விடை இவ்வளவு விரிந்துபோயிற்று. வெறும்விடையாக மட்டும் அமைந்து விடவில்லை. ஐயத்தைப் போக்கி அரிய நயத்தையும் காணும்படி செய்துவிட்டது அந்த மலைப்பு.

❑

# 12. தென்னிந்திய மொழிகள்

'செப்பும் மொழி பதினெட்டு உடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்' - என்று கவியரசர் பாரதியார் பாரத தேவியின் மொழி வளத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்தியாவின் மொழிகளைப் பற்றி ஆராயும்பொழுது ஓர் உண்மை நன்கு புலப்படுகிறது. வட இந்திய மொழிகளில் பெரும்பாலானவற்றிற்கு மூலகாரணமாகத் தமிழும் அமைந்திருப்பதுதான் அவ்வுண்மை. இலக்கணச் சிறப்பும், பண்பட்ட அமைப்பும் உள்ள உயர் தனிச் செம்மொழிகளே வேறு சில மொழிகளை உண்டாக்க முடியும். உயிரிலிருந்து உயிர்கள் பிறப்பதுபோல, ஒரு மொழியிலிருந்தே பிற மொழிகள் தோன்றுகின்றன.

இந்தி மொழி, வங்க மொழி, மஹாராஷ்டிர மொழி ஆகிய மொழிகள் சமஸ்கிருதத்தைத் தாயாகக்கொண்டு, பிறந்தவை. இதேபோல் கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகள், தமிழைத் தாயாகக் கொண்டு பிறந்தவை. இவைகளின் தொகுதிக்கு மொத்தமான பெயராக அமைந்ததே 'தென்னிந்திய மொழிகள்' அல்லது 'திராவிட மொழி இனங்கள்' என்பது. தென்னிந்திய மொழி இனங்கள் ஒரே அடிப்படை அமைப்பைக் கொண்டவை. இந்த மொழிகள் தோன்றிய விதத்தைப் பற்றி ஆராய்வதற்கு, நிறைந்த சான்றுகள் உள்ளன. தென்னிந்திய மொழிகளில் இப்போது பெரு வழக்கில் உள்ள ஐந்து மொழிகளையே இங்கு உரைத்தோம். கால்டுவெல் இவற்றோடு இன்னும் ஏழு மொழிகளைச் சேர்த்து மொத்தம் பன்னிரண்டு மொழிகளைக் குறிப்பிட்டார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு என்று ஆறு மொழிகள் பண்பட்ட திருத்தமான தென்னிந்திய மொழிகளாகவும், துதம், கோதம், கோண்டு, கந்தம்,

ஒராவோன், இராஜ் மஹால் என்ற ஆறு மொழிகள் பண்படாத - திருந்தா தென்னிந்திய மொழிகளாகவும் கால்டுவெல்லின் ஆராய்ச்சி கூறுகிறது.

## தோன்றிய விதம்

கால்டுவெல் கூறிய திருந்தாத மொழிகள் ஆறும் இக்காலத்தில் தென்னாட்டின் எப்பகுதியில் வழங்கப்படுகின்றன? எவரால் வழங்கப்படுகின்றன? என்றே தெரியவில்லை! திருந்திய மொழிகளாகிய தமிழ் முதல் குடகு ஈறான ஆறில், குடகு மொழி இக்காலத்தில் வழக்கிழந்து, ஏறக்குறைய கன்னடத்தோடு கலந்துவிட்டதால் ஏனைய நான்கு மொழிகளையே ஆராய்வது பயன் தரும் செயலாகும்.

கால வரம்புக்குட்படாத நாள் தொட்டுத் தமிழகத்தில் வழங்கி வந்த செந்தமிழ் மொழி, தனது நில எல்லையைச் சுற்றிப் பன்னிரு கொடுந்தமிழ் நிலங்கள் அமையப்பெற்று இருந்தது. செந்தமிழ் நாட்டார் வழங்கிய தமிழும் கொடுந்தமிழ் நாட்டார் வழங்கிய தமிழும் நாளுக்கு நாள் வேறுபாடுகள் பெருகி, மாறுபட்டுக்கொண்டே வந்தன. தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி பன்றி அருவா, அருவா வடதலை, சீத நாடு, மலாடு, புனல் நாடு என்பனவே அந்தப் பன்னிரண்டு கொடுந் தமிழ் நிலங்களின் பெயர்கள். இக் கொடுந் தமிழ் நிலங்களில் மாறுபட்டு வழங்கத் தொடங்கிய தமிழே நாளடைவில் மூன்று புது மொழிகளாக உருவடைந்தது. மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்பனவே அம் மூன்று மொழிகள். 'வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' - என்று தொல்காப்பியர் எல்லை கூறுவதற்கு முன்னரே இப்புதிய மொழிகள் தமிழிலிருந்து பிரிந்திருக்க வேண்டும். ஒரு காலத்தில் தென்னாடு முழுவதும் ஆண்டு வந்த தமிழ், நாளடைவில் தன்னினின்றும் தோன்றிய கிளை மொழிகளுக்கும் இடம் ஒதுக்கிக் கொடுத்துவிட்டு,

வேங்கடத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட எல்லையில் மட்டும் தன் ஆளுகையை வைத்துக் கொள்ளும்படி நேர்ந்தது.

## 1. தமிழ்

தமிழ் என்ற பெயர் 'திராவிடம்' என்ற வட சொல்லில் இருந்து பிறந்திருக்கலாம் என்று கால்டுவெல் கருதுகிறார். மற்ற மொழிக்காரர்கள் தமிழை அரவம் அரவபாஷா என்றும், தமிழர்களை அரவவாடு என்றும் குறிப்பிடுவது பற்றி 'டாக்டர் குண்டெர்ட்' என்பவர் ஆராய்ந்து ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். தமிழில் அறநூல்கள் மிகுந்திருப்பதனால் அறவம், அறவமொழி என்று பெயர் ஏற்பட்டு, நாளடைவில் அப்பெயரே வல்லின ஒலி பிறழ்ந்து அரவம், அரவமொழி என்று வழங்கத் தொடங்கியிருக்க வேண்டும் என்கிறார் 'குண்டெர்ட்'. தமிழில் உள்ள 'அறம்' என்ற சொல்லே கன்னடத்தில் 'அரவு' என வழங்குகிறது என்பார் இவர்.

கிரேக்க நூலாசிரியராகிய 'டாலமி' தமது யாத்திரை நூலில் சோழ மண்டலத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, நெல்லூர்க் கரையில் வாழ்ந்த மக்களை 'அர்வாணி' என்று குறித்தது இக்கருத்தாலேயே என எண்ணுவதற்கும் இடமிருக்கிறது. தமிழ் மொழி சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவருக்கும் உரியதாகப் பண்டை நூல்கள் கூறுகின்றன. இன்றோ சேர நாடாக முன்பிருந்த பகுதிகளில் மலையாளமே பெரிதும் வழங்குகின்றது. 'வண்புகழ் மூவர் தன் பொழில் வரைப்பு' என்று தொல்காப்பியர் கூறிய காலத்தில் சேர நாட்டிலும் பெரும்பகுதி தமிழ் வழங்கிற்றுப் போலும்.

## 2. மலையாளம்

மலையாள நாட்டின் தோற்றத்தைப் பற்றிக் 'கேரளோற் பத்தி' என்ற நூலும் பெரிய புராணம் என்ற நூலும் ஏறக்குறைய ஒரே அபிப்ராயத்தைத் தெரிவிக்கின்றன. பரசுராமர் நடுக்

கடலில் மழுவை எறிந்து, குமரி முதல் கோகர்ணம் வரையுள்ள பகுதிகளை உண்டாக்கி, அந்தணர்களுக்கு தானம் செய்தார் என்பதே மேற்படி அபிப்ராயம். ஆகையால்தான் 'பரசுராம தேசம்' என்ற பெயர் கேரளத்துக்கு வழங்குகிறதென்பர். கேரளத்தின் மொழியாகிய 'மலையாள மொழி' பற்றி இந்நூல்கள் விரிவாக எதுவும் கூறவில்லை. 'மலையாள மொழி' அமைப்பில் தமிழைத் தாயாகக் கொண்டிருந்தாலும் ஒலிக்கின்ற விதத்தில் சம்ஸ்கிருதச் சாயலைப் பெற்றிருக்கின்றது. தமிழிலிருந்து உண்டாகிய கிளை மொழிகள் யாவற்றிலும் தமிழுக்கு மிகமிக நெருக்கமான உறவு உடையது மலையாளமே என்பது கால்டுவெல் கருத்து.

மேற்குக்கரைப் பிரதேசங்களில் வடக்கே மங்களூர் தொடங்கித் தெற்கே திருவனந்தபுரம் வரை மலையாள மொழி பேசும் மக்கள் பரவலாக வாழ்கின்றனர். மலையாள மொழியில் பெருவாரியான தமிழ்ச் சொற்கள் தமிழுருவம் பெறாமலும் மாறியும் கலந்து வழங்குகின்றன. ஆரிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி ஆராய்ந்துள்ள டாக்டர் எல்.ஏ.ரவிவர்மா என்ற மலையாள ஆராய்ச்சியாளர் தமிழுக்கும் மலையாளத்துக்கும் உள்ள நெருங்கிய உறவைக் கூறியுள்ளார். திருவனந்தபுரத்திற்குத் தெற்கே தமிழும் மங்களூருக்கு வடக்கே கன்னடமும் மலையாள மொழியோடு கலந்து விடுகின்றன. 'கேரள மொழி', 'கேரளர்' என்ற பெயர்கள் மலையாளத்திற்கும், மலையாளிகளுக்கும் இட்டு வழங்கப்படுகின்றன. 'பிளினி' தமது யாத்திரை நூலில் 'கேரள புத்திரர்கள்' (கெரா புத்ராஸ்) என்று இவர்களைக் குறிப்பிடுகின்றார். தொடக்கக் காலத்தில் தமிழிலிருந்து தோன்றித் தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மலையாள மொழி, பிற்காலத்தில் அதே உறவைச் சம்ஸ்கிருதத்தோடு கொண்டு இணைந்தது. இதனால் எண்ணற்ற வடமொழி வழக்குகளும் சொற்களும்

அம் மொழியில் கலந்திருக்கின்றன. மலையாள மொழியும் தமிழும் ஒத்திருந்ததால், தமிழிலிருந்துதான் மலையாளம் பிறந்தது என்ற கூற்றை டாக்டர் குண்டெர்ட் மறுக்கின்றார். மலையாள மொழியின் எழுத்துக்கள் வடமொழிக் கிரந்த எழுத்துக்கள் போலவே உள்ளன. மலையாள மொழி வழக்குப் பற்றிய சில உண்மைகளைத் திரு. கே.ராமகிருஷ்ணையா எழுதிய 'Studies in Dravidian Phylology' என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். இதைத் தவிர, வேறு சில நூல்களும் உள்ளன.

## 3. தெலுங்கு

மலையாளத்தைப் போலவே தமிழிலிருந்து தோன்றித் தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்ட மற்றோர் மொழி தெலுங்கு. தமிழைப் போலவே பழம் பெருமையும் இலக்கிய நிறைவும் தெலுங்கு மொழிக்கு உண்டு. கிழக்கே பழவேற் காட்டிலிருந்து சிக்கை குளம் வரையிலும், மேற்கே மைசூரின் வட எல்லை தொடங்கி மஹாராஷ்டிர நாட்டின் தெற்கெல்லை வரையிலும் தெலுங்கு மொழி பேசப்படும் எல்லைகளாகக் கூறப்படுகின்றன. முகம்மதியர்கள் ஆட்சிக் காலத்தில் 'தெலுங்காணம்' (தெலிங்காணம்) என்ற பெயர் இந்நிலப் பகுதிக்கு வழங்கி வந்தது. வட மொழி வாணர்கள் தெலுங்கு மொழி வழங்கும் நிலத்தை 'ஆந்திர'மென்றும் தெலுங்கர்களை 'ஆந்திரர்கள்' என்றும் கூறினர். தெலுங்கு மொழியிலும் தமிழ்ச் சொற்கள் உருமாறிக் கலந்துள்ளன. தெலுங்கு எழுத்தும் கிரந்த எழுத்துப் போலவே அமைந்துள்ளது. திரிகலிங்கம் என்பது மருவித் 'தெலுங்கு' என்று பெயர் ஏற்பட்டதாகவும் ஓர் ஆராய்ச்சி உண்டு. தெலுங்கு மொழியின் ஒரு பிரிவைத் தமிழர்கள் 'வடுகு' என்று கூறினர். தமிழ் நாட்டு நாயக்கமார் பேசும் வடுகுக்கும் ஆந்திர நாட்டுத் தெலுங்கிற்கும் சிறிது வேறுபாடு இருக்கின்றதைக் காண்கிறோம். இதுபற்றிய சில விவரங்களை ஜி.ஜே.சோமயாஜி எழுதிய 'ஆந்திர பாஷா

விகாசம்' என்ற நூலில் தெரிந்துகொள்ளலாம். எது எவ்வாறு இருப்பினும் தென்னிந்தியாவில் தமிழுக்கு அடுத்தபடி அல்லது தமிழைவிட அதிக மக்களால் பேசப்படும் மொழி தெலுங்கு ஆகும்.

## 4. கன்னடம்

கர்நாடகம், கானரீஸ் என்று வேறு பெயர்களாலும் இதைக் கூறுவர். மைசூர்ப் பகுதி முழுமையிலும், மஹாராஷ்டிரத்தின் தென் பகுதியில் சில இடங்களிலும், ஹைதராபாத்தின் மேற்குப் பகுதியில் சில இடங்களிலும் கன்னட மொழி பேசப்படுகிறது. நீலகிரியின் மேல்புறமுள்ள மக்கள் பேசும் பழைய கன்னடத்திற்கும் பிற பகுதிகளில் வழங்கும் கன்னட மொழிக்கும் அதிக வித்தியாசம் உண்டு. மலையாளக் கரையிலுள்ள கானராவில் கன்னடத்துடன், மலையாளம், மராத்தியின் ஒரு பிரிவான கொங்கணி, கன்னடமும் மலையாளமும் கலந்து தோன்றிய 'துளு' ஆகிய மூன்று மொழிகள் பேசப்படுகின்றன. டாக்டர் குண்டெர்ட், கரு+நாடு+அகம் என்ற மூன்று சொற்கள் சேர்ந்தே கர்நாடகமாயிற்று என்பர். மைசூர்ப் பகுதிகளைப் பழைய தமிழ் நூல்கள் 'எருமை நாடு' என்று குறிக்கின்றன. கன்னட மொழியின் எழுத்துக்களும் கிரந்த எழுத்துக்களை ஒத்தே அமைந்தன.

## 5. துளுவும் குடகும்

துளு, குடகு ஆகிய இவ்விரண்டு மொழிகளையும் கால்டுவெல் தென்னிந்தியாவின் பண்பட்ட மொழிகளாகக் கூறியிருப்பினும், இக் காலத்தில் இவை வழக்கும், சிறப்பும் இழந்துவிட்டன. மேலும், இவை தனி மொழிகளல்ல. மலையாளத்தின் பின்னமாகத் துளுவும், பழைய கன்னடத்தின் பின்னமாகக் குடகும் தோன்றின. இலக்கிய இலக்கணங்களோ, எழுத்து அமைப்போ ஏறக்குறைய இவ்விரு மொழிகளுக்கும்

இல்லையென்றே கொள்ளலாம். இவற்றை மலை ஜாதி மக்கள் பேசுவதாகக் கூறுகின்றனர். ஆனாலும், இனி வளர்ச்சிக்குரிய சூழ்நிலை இவற்றுக்கு இல்லை.

## பேசுவோர் தொகை

*1911*-ஆம் வருடம் எடுத்த கணக்கின்படி தென்னிந்திய மொழிகளைப் பேசுவோர் தொகை கீழே குறிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 1,91,89,740 |
| தெலுங்கு | - | 2,35,42,859 |
| கன்னடம் | - | 1,05,25,739 |
| மலையாளம் | - | 67,92,277 |
| துளு | - | 5,31,498 |
| குடகு | - | 42,881 |

இப்போது தமிழ் பேசுவோர் (உலகெங்கும்) ஏறக்குறைய 3.5 கோடி. தெலுங்கு பேசுவோர் ஏறக்குறைய 4.5 கோடி. கன்னடம் ஏறக்குறைய 2.5 கோடி. மலையாளம் ஏறக்குறைய 90 லட்சம். துளு, குடகு பேசுவோர் தொகை இப்போது பெரிதும் குறைந்து விட்டன.

# 13. மொழியும் நாடகமும்

உழைப்பதும், உண்பதும், இன்பத் துன்ப உணர்ச்சிகளை அநுபவிப்பதுமாக வாழ்ந்த மனிதனுக்கு ஒரு காலத்தில் ஒரு விநோதமான ஆசை உண்டாயிற்று. தன்னுடைய வாழ்க்கையையும், அதில் மலிந்து கிடக்கும் பல்லாயிரம் உணர்ச்சியலைகளையும் தன்னிலிருந்து பிரித்து வேறுபடுத்திக் கலையாக நிறுவிப் பார்க்க வேண்டுமென்ற ஆசைதான் அது. தன் முகத்தை அடிக்கடி கண்ணாடியில் அழகு பார்த்துக் கொள்வது போல் வாழ்க்கையை அரங்கத்தில் பார்க்க வேண்டும் - வாழ்வதுபோல் நடித்துப் பார்க்க வேண்டும், என்ற ஆசை ஏற்பட்டது. அவ்வாறு அரங்கத்தில் நடிக்கப் படும் வாழ்க்கை, உலகத்தில் வாழ்கின்ற நடைமுறை வாழ்வைக் காட்டிலும் தரமாய் வீறுமிக்கதாய்ச் சுவை பயப்பதாய், இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

நடிப்பவர்களுக்குப் புகழும், காண்பவர்களுக்குச் சுவையும், தரக்கூடிய சிறந்த வாழ்க்கையை மேடையிற் சித்திரிக்க விரும்பினான் மனிதன். வாழ்வில் இருந்து கொண்டே வாழ்வின் உணர்ச்சிகளை வேறாகப் பிரித்து நடித்து அழகு பார்க்கும் இந்தப் புதிய விருப்பத்தால் மனிதனுக்குச் சில வசதிகள் கிடைத்தன. துன்பப்படுகிறவன் இன்பத்தின் சிகரத்தை நடிக்கவும், காணவும் முடிந்தது. மாறுபட்ட உணர்ச்சி நளினங்களை வேறுபட்ட மனிதர்கள் ஓரிடத்தில் ஓர் அரங்கில் ஒருசேரக் காண முடிந்தது. இதனால் வாழ்க்கை என்றும், வாழ்க்கையிலிருந்து பிறந்த கலை என்றும் இரு பிரிவு ஏற்பட்டது.

உணர்ச்சிகளோடு போராடுவது வாழ்க்கை. உணர்ச்சி களோடு விளையாடுவது கலை. வாழ்க்கைக்குப் பயன்

வாழ்வது. கலைக்குப் பயன் அநுபவிப்பது. கலை என்பது நாடக வழக்கு. வாழ்க்கை என்பது உலகியல் வழக்கு. வாழ்க்கையில் துன்பங்களே அதிகம். கலையிலோ துன்பத்தை நடித்தாலும், பார்த்தாலும் அதனால் கிடைப்பது இன்பமே. ஆரம்ப காலத்தில் பாடல் ஒன்றைப் பாடி அப்பாடற் பொருளுக்கேற்ப அரங்கில் அவிநயம் காட்டும் அளவில் அமைந்திருந்தது கூத்துக் கலை. பின் அக்கூத்துடன் இயற்றமிழாகிய உரையாடலும், கலந்தவிடத்து அதற்காக நெடுநேரம் நடித்துக்கொண்டு செல்வதற்கேற்பப் புனையப் பட்ட வாழ்வு ஒன்று நாடகக் கதையாகத் தேவைப்பட்டது. ஆடலும், அவிநயமும், பாடலும் கலந்து கூத்து மாத்திரையாய் நின்ற கலை வித விதமான உணர்ச்சிகள் பெற்ற கதா பாத்திரங்களைக் கொண்டு பேச்சினும், மெய்ப்பாட்டினும், பல்வகைக் கோலம் பாங்குறப்புனைந்து வளர்ந்து விழுமிய நாடகக் கலையாயிற்று.

ஆதியில் தமிழின்கண் கூத்தெனக் கூறப்படும் ஆடல், பாடல், அவிநயம் எவ்வாறு இருந்திருக்கலா மென்று நினைத்துப்பார்க்கும்போது இன்று கேரளத்தில் ஆடப் படும் கதகளிக் கூத்துடன் ஒருபுடையொப்புமை உடையதாக இருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது. பண்டைத் தமிழ் நூல்களிற் கூறப்படும் கொடுகொட்டிக் கூத்து, சாக்கைக் கூத்து - என்பனவும் இவ்வாறே அமைந்திருத்தல் வேண்டும். கூத்து என்ற நிலையிலிருந்து வளர்ந்து அரங்க நிகழ்ச்சிக்கு நாடகம் என்ற பெயர் வந்ததும் அதன் தன்மை புதுமை பெற்றது. அவ்வாறு புதுமை பெற்ற பின்னும் குறவஞ்சிக் கூத்து, தோற்பாவைக் கூத்து, கழைக் கூத்து முதலிய கூத்துக்கள் இன்றளவும் திருவிழாக் காலங்களிலும், பிற இடங்களிலும் நடித்துக் காட்டப்படுவதும் உண்டு.

அரங்கில் நாடகத்துக்கென்று ஒரு கதை, அதில் உணர்ச்சிகளாலும், குணங்களாலும், வேறுபட்ட பல வகைக் கதாபாத்திரங்கள் அடுத்தடுத்து வளரும் சம்பவத் திருப்பங்கள், கதையின் இணையற்ற உச்சநிலை - இவையெல்லாம் ஏற்பட்டு வளரும் சூழ்நிலை உருவானபோதுதான் இந்தத் துறை தனி மதிப்புப் பெற்றது.

நாடகத் துறைக்கு ஏற்பட்ட இந்த வளர்ச்சி சிலப் பதிகாரக் காலத்துக்கு முன்பே உயர்வு பெற்று ஓங்கத் தொடங்கியிருந்ததென்று கூறலாம். பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், கூத்த நூல் ஆகிய நாடகத் தமிழ் நூல்களெல்லாம் இருந்தன என்பது சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் தெரிய வருகிறது. நாடகக் கலை இணையற்ற வளர்ச்சி பெற்றிருந்த அந்தக் காலத்துக்குப் பின் 'இசை நாடகம் காமத்தை விளைவிக்கும்' - என்ற தவறான கருத்தால் எவராலும் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப் பெற்று நலிந்துபோகும் நிலையும் ஒரு காலத்தில் வந்தது. அதுதான் நாடகக் கலையின் வரலாற்றிலேயே இருண்ட காலம்.

இனி நாடகக் கலையில் பழந்தமிழர் கொண்டிருந்த வழக்காறுகள் சிலவற்றைக் கவனிப்போம். நடிப்போர் நிகழ்த்துமிடம் அரங்கம் எனவும், காண்போர் அமருமிடம் அவையம் எனவும் பிரிக்கப்பட்டது. அரசர் முதலாயி னோருக்காகச் சிறப்பு வகையால் நடிக்கப்படுபவை வேத்தியல் எனவும் - எல்லார்க்கும் பொதுவாக நடிக்கப் படுபவை பொதுவியல் எனவும் வகை செய்யப்பட்டிருந்தன. அரங்கம் எவ்வாறு அமையவேண்டும் என்றும் பழைய நாடக நூல்களெல்லாம் இலக்கண வரையறை செய்திருந்தன.

கூத்தருக்கும், பாணருக்கும், விறலியர்க்கும், பொற் பூவும், பொற்றாமரையும் போல்வன பரிசில் நல்கிச் சிறப்புச் செய்யும் வழக்கத்தை அரசர்கள் மேற்கொண்டிருந்தன ரென்று தெரிகிறது. இவ்வாறு உயர்நிலையடைந்திருந்த காலத்துக்குப் பின்பு நெடுநாட்கள் கவனிப்பாரற்றுத் தாழ்ந்து தெருக்கூத்தாம் நிலைக்குப் போய்விட்ட நாடகக் கலையை மீண்டும் சில பெருமக்கள் தோன்றி உயர்நிலைக்குக் கொண்டு வர முயன்றனர், முயல்கின்றனர், முயல்வர்.

சம்பவக் கோவையும், உணர்ச்சிகரமான திருப்பங்களும் உள்ள கதை நாடகத்துக்குத் தேவை. பேச்சாலும், மெய்ப் பட்டாலும், இசையாலும், சுவையை உண்டாக்கிச் சிறப் படைவது நடிப்பு. நடிப்பில் பிறக்கும் சுவை இரு வகை நிலைகளை உடையது. ஒன்று சுவை தோன்றுமிடம்; மற்றொன்று நுகருமிடம். தொல்காப்பியர் **'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே'** என்றார். நடிக்கும்போது தான் மேற்கொண்ட பாத்திரத்தின் உணர்ச்சிக்கு ஏற்ப நடிகன் உண்டாக்கிக் கொள்ளும் தத்ரூபமான போலித்தன்மைதான் மூலமான முதற் சுவை. அதைக் காணும் அவைமக்களிடம் உண்டாகும் அநுபவம் கிளைச் சுவை.

நடிகன் சுவையை உய்ப்பவன். இரசிகன் சுவையைக் கண்டு அநுபவிப்பவன். மிகப் பலராகிய அநுபவிப்பவர்களின் முன் தனி ஒருவன் தனி ஒரு சுவையைத் தத்ரூபமாக நடித்துக் காட்டுவது சிரமமான காரியமல்லவா? எல்லாராலும் இயலாத அத்தகைய சிரமமான காரியத்தைச் செய்தால்தான் நடிகனுக்குப் பெருமை. ஒன்பது வகைச் சுவைகளுக்கும் வெளியீடாக ஏற்படும் பாவங்களுக்குப் பழைய தமிழில் மெய்ப்பாடு என்று பெயர். உணர்ச்சிகள் படியும் கண்ணாடியாக மாறும் திறமை இருந்தால் நடிகன் வெற்றி பெற்று விடுகிறான்.

நாடகத் தமிழின் இலக்கணத்தையும் முறைகளையும் இக்காலத்திலும் அறிந்துகொள்ள ஏற்ற விதத்தில் உயர்தரமான நூல்களை எழுதி அளித்துள்ளனர் இரு பெருமக்கள். **'நாடக வியல்'** என்னும் நூலை எழுதிய பரிதிமாற்கலைஞரும், **'மதங்கசூளாமணி'** என்னும் நூலை எழுதிய விபுலானந்த அடிகளும் என்றும் தமிழர்களின் நன்றிக்கு உரியவர்கள். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழி நாடக இலக்கிய வளத்தையும் ஒப்பு நோக்கி எழுதப்பட்ட நூலே மதங்கசூளாமணி. மதுரைத் தமிழ்ச்சங்கத்தினரால் வெளியிடப் பெற்ற இவ்வரிய நூல் இப்போது பதிப்பற்றுப் போனமை தமிழர்க்கு இழப்பே யாகும்.

இனி நூல்களும், நாடகக் கதைகளும் எழுதியதோடு அமையாமல், நடித்தும், நாடகக் கலையை வளர்க்கப் பல்லாற்றானும் பாடுபட்டவர்கள் சிலரை நினைக்க வேண்டும். சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் இராசமாணிக்கம், இன்று டி.கே.எஸ். சகோதரர்கள், சேவா ஸ்டேஜ்காரர்கள், போன்ற பலர் நாடகக் கலையை வளர்த்து வருகிறார்கள்.

ஆயினும் தமிழ் நாடகக் கலை இன்னும் மேல் நிலையைப் பெறுவதற்கு முயன்று கொண்டே இருக்க வேண்டும். நாடகத்துக்கென்றே அமைந்து நாள்தோறும் பல ஆயிரம் திரட்டித் தரும் நாடக அரங்கங்கள் கல்கத்தா நகரத்தில் இருப்பதுபோல் சென்னை, மதுரை முதலிய தமிழ் நகரங்களில் ஏற்பட வேண்டும். நாடகத்தில் நடிக்கும் நடிகர்களின் ஏழ்மையும், வாழ்க்கைத் தொல்லைகளும் குறைந்து வாழ்க்கைத் தரமும், வசதியும் பெருக வேண்டும். நாடக மேடை அரங்க நிர்மாணத்துக்குப் புதுமையான பல நவீன சாதனங்களையும், உத்திகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மக்களின் ஆதரவும், கலைஞர்களின் திடநம்பிக்கையும் இருந்தால் நாடகம் புனிதமான கலையாக வளர்ந்துவிட முடியும்.

நாடகம் எழுதுபவர்களும், நடிப்பவர்களும் கம்பெனி நடத்துபவர்களும், 'ஐயோ! பொருட் காட்சிகளும், கோவில் திருவிழாக்களும் அழைக்காவிட்டால் பிழைக்க முடியாதே' என்று அஞ்சாமல் தினசரி நடித்து வளம் பெற்று வாழ்வதற்கு ஏற்ற தனி நாடக அரங்குகள் தமிழ் நாட்டின் பெரிய நகரங்களிலெல்லாம் வந்துவிட்டால் கலை வளரத் தடையே இல்லை. நாடகம் உயிரோட்டமுள்ள கலை! பல்லாயிரங் காலத்துப் பயிர். அது நலிந்தால் சத்தியமே நலிந்த மாதிரித் தான். சத்தியத்தைப் போல இருப்பது நலியலாம். சத்தியம் நலியக் கூடாது. நலியவிடக் கூடாது! ❑

# 14. மொழியும் சிறுகதைகளும்

## கதை பிறக்கும் கதை

கதைகளைப் படிக்க வேண்டுமென்ற ஆர்வமும் கதைகளை எழுத வேண்டுமென்ற முனைப்பும் ஒத்த அளவில் வளர்ந்து வருகிற காலம் இது! தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் நல்ல காலம்; இதை நாம் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளத் தயங்க வேண்டியதில்லை.

மனித சமுதாயத்தில் கதைகள் எப்படி உண்டாயின? கதைகளை எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் எப்படித் தோன்றினர்? ஓயா வாழ்க்கைப் போரில் பிறந்த நாள் தொட்டு ஒழியாது முனைந்து கிடக்கும் மனித இனம் கதைகளில் இன்பம் காணத் தொடங்கிய காலம் எது?

சுவை நிறைந்த இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டால் கதையின் கதை ஓரளவு தெளிவாகப் புரிந்துவிடும். வாழ்வின் இன்பத் துன்பங்களையும் ஏற்ற தாழ்வுகளையும் குறைவு நிறைவுகளையும் அதில் இருந்துகொண்டே அதனின்றும் நினைப்பில் விலகி நின்று கலை நோக்குடன் பார்க்கும் ஆசை முதன் முதலாக மனித இனத்திற்கு என்று ஏற்பட்டதோ அன்றே கதைகளை உருவாக்கும் ஆசையும் படிக்கும் ஆசையும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

நம்மைப் புகைப்படம் எடுத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை; நம்மைப் பிறர் புகழ வேண்டும் என்ற ஆசை; (சில சமயங்களில் பிறர் செய்யும் புகழ்ச்சியை நாமே செய்து கொள்ளுதலும் உட்பட) நம்முடைய நிழலைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை - நமக்கு ஏற்படவில்லையா? கதை இலக்கியம் படைக்கப்பட்டதும், இது போன்றதோர் அவாவின் விளைவுதான் என்று கருதலாம்.

வாழ்க்கையில் மலிந்து கிடக்கும் உயர்வு தாழ்வான குணங்களையும் வியப்பு விந்தை கலந்த நிகழ்ச்சிகளையும்

சாதாரண அசாதாரணச் சம்பவங்களையும் கலைக்கண்ணாலே காணும் நவீனமான விருப்பம் இந்தத் தலைமுறையில் அளவு கடந்து வளர்ந்திருக்கிறது. வாழ்க்கையே வளர்ந்திருக்கும் போது கலைகள் மட்டும் வளராமலிருக்க முடியுமா? சிறு கதை, நாடகம், நாவல், திரைப்படம் ஆகிய பல துறைகளிலிருந்தும் கதைக்கு மதிப்புப் பிறந்ததே இந்தக் கலைக் கண்ணோட்டத்தின் காரணமாகத்தான்.

## புதிய சிறுகதை

பஞ்ச தந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் இன்னும் பழைய தலைமுறையைச் சேர்ந்த எண்ணற்ற நீதிக் கதைகள், ஆகியவற்றையும் சிறுகதைகளென்று கூறலாம். ஆனால், உண்மையில் கால் நூற்றாண்டுக் காலத்திற்குள்ளாகத் தமிழில் புதிய முறையில் வளர்ந்திருக்கும் சிறு கதை இலக்கியத்தை ஈடு இணையற்ற வளர்ச்சி என்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். புறநானூற்றிலும், சங்க நூல்களில் மிகுந்திருக்கும் அகத்துறை பாடல்களிலும், பிற்காலத்துப் புலவர்கள் தத்தம் அநுபவங்களைக் கூறிப் பாடிய தனிப் பாடல்களிலும், சிறு கதையின் சாயல் இருக்கிறது. ஆனால் அவைகளே முழுமையான சிறுகதைகள் ஆக இயலாது. ஒரு உணர்ச்சியை, ஒரு நிகழ்ச்சியை உருக்கமாக விவரித்துப் பொருத்தமாகக் காட்டுவதுதான் சிறு கதை என்றால் சங்கப் பாடல்கள் பலவும் (Lyrics) பிற்காலத் தனிப் பாடல்கள் பலவும் (Ballads) சிறு கதை அமைப்பு மட்டுமாவது உடையவைதாம்.

இருந்தாலும் இன்று மக்களிடையே பெரும் புகழும் பெற்று நிலவும் உரைநடைச் சிறு கதைகள் ஆங்கில மரபு பற்றிய சார்புடையவை. பழைய காலத்தில் செய்யுள் இலக்கியத்திற்கு எவ்வளவு மதிப்பு இருந்ததோ அவ்வளவு மதிப்பும் தகுதியும் உரைநடை இலக்கியம் இன்று பெற்றிருக்கிறது. எதையும், எப்படியும், எவ்வளவு தெளிவாக வேண்டுமாயினும், உரைநடையில் சொல்ல முடியும் என்ற நம்பிக்கை எழுதுகிறவர்களுக்கும், படித்துத் தெரிந்துகொள்ள

முடியும் என்ற நம்பிக்கை படிக்கிறவர்களுக்கும் ஏற்பட்டு விட்டது.

ஈழத்திலும் தமிழ்நாட்டு வார, மாத இதழ்களிலும் உரைநடையில் நல்ல கருத்துக்களைக் கொண்ட சிறு கதைகளை அடிக்கடி காண்கிறோம். ஒரு நல்ல சிறு கதையை நன்றாக எடுக்கப்பட்ட புகைப்படத்திற்கு ஈடு கூறலாம். குறிப்பிட்ட காட்சியைக் குறிப்பிட்ட விநாடியில் உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டும் புகைப்படக் கருவி போல ஒரு குறித்த நிகழ்ச்சியை ஒரு குறித்த நோக்குடன் (Theme) விவரித்து முடிப்பது சிறுகதை. ஓவியன் ஓவியத்தில் தன் கை விரும்பிய வண்ணமெல்லாம் புனைந்து பொலிவுகாட்டலாம். புகைப் படத்தில் அப்படிச் செய்ய முடியுமா? ஒரு நல்ல சிறுகதை அளவு மீறிய நிகழ்ச்சிகளைப் புனைந்து கதைப்போக்கின் ஒருமைப்பாடு குன்றுமாறு செய்யுமானால் அதை எங்ஙனம் சிறுகதை என்பது? அம்பு பாய்வதுபோல் நேரே பாய்ந்து சென்று நிகழ்ச்சியின், மையக் கருத்திலே படிக்கும் உள்ளம் பொருந்துமாறு சிறுகதை முடிவு பெற வேண்டும். புதிய சிறு கதையின் மரபும் இதுதான். உலகத்துச் சிறு கதைகளின் வெற்றிக்குக் காரணமும் இதுதான்.

மாதம் ஒன்றிற்கு ஏறக்குறைய இருநூறு சிறுகதைகளுக்குக் குறைவில்லாமல் தமிழ் நாட்டு இதழ்களில் வெளிவருகின்றன. எண்ணிக்கையின் பெருக்கத்தைக் கொண்டு மட்டும் பார்த்தால் இது வளர்ச்சியாகலாம். தமிழ் மரபோடு கூடிய நடை, என்றும் நிலைத்து நிற்கக்கூடிய உண்மை (Eternal Truth), சிறு கதை அமைப்பிற்கு இயைந்த போக்கு, என்று மூன்று வகையால் சமன் செய்து சீர்தூக்கிப் பார்த்தால் மாதத்திற்குப் பத்துக் கதைகளாவது தேறும்.

தமிழில் சிறுகதை இலக்கியத்திற்கு முதலில் வித்திட்டு வளர்த்த பெருமக்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டு இன்றைய நிலையைக் காண்போம். உருவாகிக் கொண்டிருக்கின்ற, இனி மேல் உருவாகப் போகும் நல்ல சிறுகதையாசிரியர்களுக்கும் நாம் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு எழுதுகிறவர்களில் இரண்டு வகை. எப்படி எழுதினாலும் சரி; அது படிக்கிறவர்களைத் திருப்திப் படுத்துவதாக இருந்தால் மட்டும் போதுமானது என்று எண்ணுகிறவர்கள் ஒருவகை. முடிந்தால் தரமுள்ள, உரமுள்ள, பண்பாட்டோடு கூடிய சிறு கதைகளை எழுதவேண்டும். இல்லாவிட்டால் எழுதாமலிருப்பதே நல்லது - என்றெண்ணும் பொறுப்புள்ள கதாசிரியர்கள் மற்றொரு வகை. இந்த இரண்டு வகையில் முன் வகையைச் சேர்ந்தவர்கள் செல்வம், செல்வாக்கு இரு துறையிலும் உடனடியாக வளர்ச்சி பெற்று வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மக்களை உருவாக்க வேண்டிய எழுத்தாளர்கள், சமூகத்தின் நேர்மையான வளர்ச்சிக்குக் காரணமானவர்களாக இருக்க வேண்டும். குற்றவாளிக்கு விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பம் இருந்தால் மட்டும் சட்டமோ, நீதியோ அவனை மன்னிக்க முடியாது. சட்டத்துக்கும் நீதிக்கும் எவ்வளவு பொறுப்பு உண்டோ அவ்வளவு பொறுப்பு எழுத்தாளர்களுக்கும் உண்டு.

நீங்கள் எழுதும் சிறு கதையால் எத்தனை மக்களைக் கவரலாம்? என்று எண்ணிப் பார்த்து மதிப்பிடாதீர்கள். எத்தனை மக்கள் திருந்துவர்? எத்தனை பேருடைய உள்ளத்துக்கு உண்மையைப் புரிய வைக்கலாம்? என்று இப்படியும் தெரிந்து மதிப்பீடு செய்யுங்கள். அறத்தையும், நேர்மையையும் வற்புறுத்தத் தவறிய எத்துறையும் கலையென்ற பெயரில் நிலைத்ததில்லை. தமிழ்நாட்டின் வாழ்வில் தான் எத்தனை குழப்பங்கள்? இந்தத் துன்பம் நிறைந்த சூழ்நிலையில் பொழுது போக்குவதற்காக மட்டும் எழுதிக் கொண்டிருக்கலாமா? மக்களைச் சிந்திக்கச் செய்யும் சிறு கதைகள்தான் இன்றையத் தேவை!

## எழுத்தாளர் பொறுப்பு

ஆகவே, தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஒரு வார்த்தை! காரில் ஏறப்போகிற அவசரத்தில் பணப் பையைத்

தவற விட்டுவிட்டுக் காருக்குள் ஏறியபின் டிக்கெட்டுக்குப் பணமின்றித் தவிக்கும் பிரயாணியைப் போல் இன்றைய வளர்ச்சியின் வேகத்தில் உங்களுக்கிருக்கும் பொறுப்பைத் தவற விட்டுவிடாதீர்கள். பின்னால் வருத்தமடைய நேரிடும்.

ஒவ்வொரு கலைக்கும் அந்தக் கலையை ஏற்றிருக்கும் கலைஞனுக்கும் அதனதன் நிலைக்கேற்ப ஒரு பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்பைப் புறக்கணித்தால் நிலைக்க இயலாது. புதுமைப்பித்தனும், கு.ப.ராவும், அடிப்படையிட்டுப் படைத்த தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்தும் தூய முயற்சிகளைச் செய்யுங்கள். தமிழ் மரபும், தமிழ்ப் பண்பும், தமிழ் மக்கள் இனமும், என்றும் எதற்காகவும் பொறுப்பின்மைக்குத் தொடர்ந்து ஆதரவளித்தது இல்லை. இதை நீங்கள் நன்றாக நினைவு வைத்துக்கொள்ள வேண்டும். கரையில்லாமல், துறையில்லாமல் தன்போக்கில் ஓடும் ஆறு ஆக்கத்துக்குப் பயன்படுமா? கரைக்கு அடங்கித் துறைக்கு நிறைந்து ஓடுவதுதான் ஆறு. பொறுப்பு என்பது இதுதான். சிறு கதைகளுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் இப்போதிருக்கும் ஆதரவைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய நாளில் சமூகத்துக்கு எத்தனையோ உண்மைகளை எளிய முறையில் புரியவைக்கும் பொறுப்பு உங்களுக்கு இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். இதனால் சிறு கதைகளை வெறும் பிரச்சாரம் செய்யும் கருவிகள் என்று நான் சொல்வதாக நினைக்கக்கூடாது. தெளிவாக ஆராய்ந்தால் குறிக்கோள் இல்லாமல் வெறும் பொழுதைக் கழிப்பதற்கென்று எந்த ஒரு கலையும் உலகில் ஏற்படவில்லை. சிறுகதை இலக்கியம் உண்மையை நிறுவுவதற்காகப் புனைந்து காட்டப் படும் ஒரு பொய் (Short story is a lie to create a truth). இந்தப் பூட்டுக்கு இந்தச் சாவியைத்தான் பயன்படுத்த வேண்டுமென்பது போல் உண்மையைப் பரப்புதற்காகத்தான் சிறு கதை என்ற பொய்யைப் பயன்படுத்த வேண்டும். இது உங்கள் பொறுப்பு.

## வாசகர் பொறுப்பு

*தமிழ் வாசகர்கள் முன்னைப்போல் இல்லை. உணர்ந்து, தெளிந்து எதையும் எடைபோட்டுச் சொல்லும் பொறுப்பு வாசகர்களுக்கும் சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகிறது. 'தரமுள்ளது இது' - 'தரமில்லாதது இது' - என்று பிரித்துப் பார்க்கும் அறிவு தமிழ் வாசகர்களுக்கு முழு அளவில் ஏற்பட்டு விட்டால் கவலை இல்லை.*

*படிக்கிறவர்கள் விழிப்படைந்திருக்கிறார்கள் என்று தெரிந்தாலே எழுதுகிறவர்களுக்கு அது ஒரு முன்னெச்சரிக்கை மாதிரி. சிறு கதைகளில் என்ன பயனை மக்கள் எதிர் பார்க்கிறார்கள் என்பது எழுதுகிறவர்களுக்குப் புரிந்துவிடும். படிக்கிறவர்கள் எல்லோரும் சிறு கதை எழுதும் ஆற்றல் உள்ளவர்களாக மாறிவிடுவதற்கு முடியாது. சிறு கதைகளை எழுதும் ஆற்றல் கருவிலே வாய்க்கப்பெற்ற திரு. ஆனால், பெறுவதற்கரிய அந்தத் திரு தவறான வழியில் பயன்பட்டு விடாமல் நேரிய வழியில் செலுத்திக்கொண்டு போகும் பொறுப்பு உயர்தர வாசகர்களின் கையில் இருக்கிறது.*

*தமிழ்ச் சிறுகதைகள் உலக இலக்கியத்தில் மிகச் சிறந்த இடத்தைப் பெறப் போகும் காலம் தொலைவில் இல்லை. உண்மையுணரும் திறனுள்ள வாசகர்களே! நிலைத்து நிற்கும் இலக்கியத் தரமுள்ள சிறு கதைகளை எழுத ஆர்வமுள்ள எழுத்தாளர்களே! இந்தப் பொற்காலத்தில் தமிழில் வரும் சிறு கதைகளை, 'இது ஒரு நல்ல சிறுகதை' - என்று பிற மொழியினரும், தாய் மொழி வாசகரும் பாராட்டத்தக்க விதத்தில் உருவாக்குங்கள். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இதைச் செய்வதில் அவ்வளவாகத் துன்ப மில்லையே?*

❑

# 15. மொழியும் புதின வளர்ச்சியும்

## நோக்கம்

தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சியால் நாம் அடைந்துள்ள பெரும் பயன்களில் இரண்டை முக்கியமாகக் குறிக்கலாம். சிறுகதை, நாவல் என்னும் இரு துறைகளும் இந்தச் சில ஆண்டுகளில் ஒருவாறு தமிழ் மொழியைச் சற்றே வளப்படுத்தி யிருக்கின்றன என்று மறுப்பின்றி ஒப்புக் கொள்வதில் பிழையில்லை. ஆனால், இந்த வளத்தில் வளர்ச்சியின் பங்கு எவ்வளவென்று பார்க்கவேண்டும்.

நாவலுக்கும், சிறுகதைக்கும், அமைப்பில் எத்துணையோ வேறுபாடுகள் உள்ளன. சிறுகதையை வாழ்க்கை மாளிகையின் ஒரு சிறிய பலகணி என்று கூறினால் நாவலை மாளிகையின் பூரண அம்சம் என்றே சொல்ல வேண்டும். காவியத்திற்கும் தனிச் செய்யுளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுதான் நாவலுக்கும், சிறு கதைக்கும் உள்ள வேறுபாடு. கவி உள்ளமும், உயர்ந்த நோக்கங்களும், சிறந்த நடை நலமும் உள்ள ஆசிரியன் எழுதிய நாவலை ஒரு வசன காவியம் என்று சொல்லிவிடலாம். எல்லா நாவல்களையும் வசன காவியம் என்று சொல்லமுடியாது. பொழுது போக்கு நாவல்கள், இலட்சிய நாவல்கள், துப்பறியும் நாவல்கள், என்று தமிழ் நாவல்களை மூன்று வகைக்குள்ளே அடக்கி விடுவது பொருந்தும். இந்த மூவகை நாவல்களிலும் தமிழ் நாவலாசிரியர், தமிழ்நாட்டு வாசகர்கள் - ஆகிய இரு சாராரும், எந்த அளவில் எழுதியும், படித்தும் வளர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை ஓரளவு விவரித்துக்கூறி முடிப்பது தான் இக்கட்டுரையின் நோக்கம்.

## வளர்ச்சியின் திறவுகோல்

*அதிக வளர்ச்சியை முன் நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்தால் தான் குறைந்த வளர்ச்சியின் அடிப்படைக் குறைபாடுகள் தெரிய முடியும் என்பவர்களின் கூற்றை முற்றும் மறுப்பதற் கில்லை. பிறநாட்டு நிலை என்ற அளவு கோலால் அளந்து உண்மையை மறைக்காமல் கூறினால் தமிழில் சிறுகதைத் துறை வளர்ந்துள்ள அளவு நாவல்துறை இன்னும் வளர வில்லை என்கிறார்கள். இப்போது வளர்வதற்குத் தொடங்கி யிருக்கிறது; 'இனி மேல் வளரும்' என்று நம்புவதற்கு நிறைய இடம் இருக்கிறது அல்லவா?*

*தமிழில் இப்போதுள்ள நிலையில் எல்லாவகையிலும் சிறந்த நாவல்கள் என்று சொல்லத் தக்கவற்றை விரைவாக எண்ணிவிடலாம்.*

*இந்திய மொழிகளில் ஈடும் எடுப்பும் சொல்ல முடியாத மிகச் சிறந்த முறையில் நாவல் இலக்கியத்தை வளர்த்திருக்கும் மொழி வங்க மொழி. கீழை நாட்டு நாவல் இலக்கியத்தின் தந்தையர் என்று புகழத்தக்க மாபெரும் நாவலாசிரி யர்களெல்லாம் வங்க மொழிக்கு உரியவர்கள்.*

*மராத்தி, இந்தி ஆகிய மற்ற வடநாட்டு மொழிகளும் வங்க மொழி ஆசிரியர்களின் வழியைப் பின்பற்றி அரும் பெரும் நாவல்களை அளித்துள்ளன. ஆனால் வட இந்திய மொழிகளில் சிறுகதை அவ்வளவு வளர்ச்சி பெறவில்லை என்கிறார்கள். தமிழிலோ சிறுகதை இலக்கியம் அதிசயப்படத் தக்க வளர்ச்சியடைந்திருக்கிறது. அவ்வளவு வளர்ச்சியை நாவல் துறை இன்னும் அடையவில்லை.*

*இப்படி வளராமைக்குப் பலவிதமான காரணங்களைக் கூறலாம். தமிழில் நன்றாகக் கதை எழுதும் சக்தி உள்ள வர்களெல்லாம் பெரும்பாலும் வேறு தொழில்களில் இருந்து*

கொண்டு இடையே கிடைக்கும் சிறுசிறு ஓய்வு நேரங்களில் எழுதி வருகின்றனர். தொடர்ந்து ஒரு நாவலையோ, நெடுங் கதையையோ, எழுத அவகாசம் குறைவு. ஒரு வாரப் பத்திரிகையோ, அல்லது மாத இதழோ, வாரா வாரமோ, மாதா மாதமோ வற்புறுத்தி ஒரு நீள் கதையை எழுதி வாங்கினால் தான் அவர்கள் தங்கள் தொழிலுக்கு நடுவே ஒரு பெரிய நாவலைப் படைக்க முடிகிறது.

இந்தச் சூழ்நிலை மாறி நேரமிகுதியும், சுதந்திரமான இயல்பும், ஆரஅமரச் சிந்திக்கும் திறன் மிகுதியும் உள்ளவர்கள் எழுத முன்வந்தால் வங்க மொழியையும், மற்ற வட இந்திய மொழிகளையும் மிஞ்சி விடுகிற அளவுக்குத் தமிழ் நாவல் இலக்கியம் வளர்ந்துவிடும்.

இரண்டாவதாக இன்னும் ஒரு காரணம் சொல்லலாம். நல்ல நாவல்கள் வளர்வதற்கும், வளராமலிருப்பதற்கும், படிக்கின்ற வாசகர்களும் ஒருவகையில் காரணமாகிறார்கள்.

சாணைபிடிக்கிற கல் கத்திக்குக் கூர்மையைக் கொடுத்ததா? அல்லது கத்தி கல்லிலிருந்து கூர்மையைத் தானாகவே வலியப் பெற்றுக் கொண்டதா? என்றால் கத்தியும் சாணைக் கல்லும் சேரும் போது ஏற்படுகின்ற புதிய பண்புதான் கூர்மை என்பது. நல்ல இலக்கியத்திற்கு உரைகல் நல்ல வாசகர்கள்தாம். எழுத்தாளனின் தகுதியையோ, தகுதியில்லாமையையோ விருப்பு வெறுப்பின்றிக் கண்டு தரமுள்ள இலக்கியத்தைத் தான் மதிக்கலாம் என்ற கட்டுப்பாடும் நேர்மையும் வாசகர் களிடையே ஏற்பட்டுவிட்டால் போதும்; பின்பு எழுது கிறவனின் தரம் தானாகவே உயரும். இலட்சிய எழுத்தாளர் போலவே இலட்சிய வாசகர்களும் வளர வேண்டும்.

வாசகர்களுக்கும், நாவலாசிரியர்களுக்கும் நடுவே இப்படி ஒரு இலக்கியச் சூழ்நிலை உருவானால் வளர்ச்சியைக்

குறைவில்லாமல் எதிர்பார்க்கலாம். 'இதைத்தான் எல்லோரும் நிறையப் படிக்கிறார்கள். இப்படித்தான் எழுத்தாளர்களும் எழுதுகிறார்கள். இப்படி எழுதினால்தான் வாசகர்களுக்குப் பிடிக்கிறது' என்று பலர் சொல்லக் கேட்கிறோம். வளர்ச்சியின் அளவுகோல் இது அன்று. உலகத்துச் சிறந்த நாவல்களோடு ஒப்பிட்டுப் பார்த்துச் சிறந்தன என்று சொல்லப்படுவதற்கு என்னென்ன தகுதிகள் உண்டோ அவற்றைக் கொண்டு நமது வளர்ச்சியை அளக்கவேண்டும் என்பவர்கள் அந்த அளவு தான் உண்மையான அளவு என்கிறார்கள். ஆக்கபூர்வமான நோக்கத்தோடு கூறினால் இதை ஒப்புக்கொள்வதற்கும் இடமிருக்கிறது. ஆனால், இன்றைய விமர்சகர்கள் உலகத்துச் சிறந்த நாவல்களைப் பலிக்களமாக வைத்துத் தமிழ் நாவல்களை அந்தக் களத்திலே காவு கொடுத்து மகிழ்கிறார்கள். ஆக்கத்துக்கு வழிகோலும் பயனுள்ள அளவையே இங்கு அளவு என்று நான் குறிக்கிறேன்.

## வளர்ந்த வழி

தமிழ் நாவல் பிறந்த காலத்தை, வேதநாயகம் பிள்ளை, பாரதியார், ராஜமையர், மாதவையா, இவர்கள் காலத்திலிருந்து படிப்படியாகக் கூறுகிறார்கள். இவை எல்லாம், ஏறக் குறைய நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட வளர்ச்சிதான். பத்தே வருடங்களில் தமிழ்ச் சிறு கதைகளுக்குக் கிடைத்திருக்கின்ற வளர்ச்சி அதைவிட அதிகமான வருடங்களாகியும் நாவலுக்குக் கிடைக்கவில்லையே என்று வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

வேதநாயகம் பிள்ளையின் பிரதாபமுதலியார் சரித்திரம் தான் தமிழில் தோன்றிய முதல் நாவல். பழைய காலத் தமிழ் நடையில் அமைந்தது. பாரதியார் எழுத முயன்று எழுதிய 'சந்திரிகையின் கதை' என்ற நாவலில் அமைப்பு நன்றாக இருந்தாலும் முற்றுப் பெறாமல் அரைகுறையாக நின்று விட்டது. 'விகர் ஆஃப் வேக் பீல்டு' என்ற ஆங்கில நாவலைப்

படித்த ஆர்வத்தால் எழுந்த தமிழ் நாவலே பி.ஆர்.ராஜமையரின் 'கமலாம்பாள் சரித்திரம்.' இது சற்றே பண்பட்ட அமைப்போடு கூடியதென்றே புதிய நாவல்களைப் 'பழைய காலத்தில் வந்திருக்க வேண்டியது' - என்று குறை கூறும் பழைய விமரிசகர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு அடுத்தபடி கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பணிபுரிந்த பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் ஆகிய தமிழ்ப் பேராசிரியர்கள் தூய தமிழ் நடையில் சிலவற்றை எழுதினர்; மேலே கூறிய தொடக்க காலத்து நாவல்களில் அதிகப் புகழையும் அதிக வாசகர்களையும் சம்பாதித்துக் கொண்டதும் 'கமலாம்பாள் சரித்திரம்'தான் என்கிறார்கள். மாதவையாவின் நாவல்களும் இந்த நிலையே பெற்றன.

இதன்பின் துப்பறியும் நாவல்கள் - பயங்கர நாவல்களின் சகாப்தம் ஆரம்பமாயிற்று. ரெயினால்ட்ஸ், டூமாஸ் ஸ்காட் முதலிய மேனாட்டு நாவலாசிரியர்களின் பாணியைப் பின் பற்றி ஜே.ஆர்.ரங்கராஜு, வடுவூரார், ஆரணியார் ஆகியோர் எழுதத் தொடங்கினர். இராஜாம்பாள், சந்திரகாந்தா, கிருஷ்ணா சிங் முதலியவைகளை இந்த வகை நாவல்களாகக் குறிப் பிடலாம். வடுவூராரும், ஆரணியாரும் இத்தகைய நாவல்களை ஏராளமாக எழுதிக் குவித்துள்ளனர். பலரைக் கவர்ந்த சிறப்பும் அக்காலத்தில் இவற்றுக்கு உண்டு என்கிறார்கள். ரங்கராஜுவின் 'இராஜாம்பாள்' நாவலுக்கு அந்தக் காலத்தில் இருந்த 'மவுஸ்' சொல்லி முடியாது. இந்த வகை நாவல்களாலும் தமிழுக்குச் சில ஆயிரம் வாசகர்கள் உண்டாயினார்கள் போலும்.

## புதிய திருப்பம்

இந்தப் பயங்கர நாவல்களின் சகாப்தத்திற்குப் பிறகு தமிழ் நாவல் இலக்கியத்தில் மூன்றாவதாக ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. துப்பாக்கியும், துப்பறிவும், இல்லாமல் சமூகப்

பிரச்சினை, அதில் சீர்திருத்த நோக்கம் ஆகியவற்றைக் கொண்டும் நாவல்கள் எழுதலாம் என்ற நம்பிக்கையோடு சில எழுத்தாளர்கள் தோன்றினர். நாரண துரைக்கண்ணன் (ஜீவா), வை.மு.கோதைநாயகி அம்மாள், லக்ஷ்மி ஆகியவர்களும், கல்கியும் தமிழ் நாவல்கள் எழுதினர். வை.மு.கோ. எழுதிய நாவல்களின் தொகை அதிகம். பொழுது போக்குக்காக ஆண்களும், சாதாரணமாகப் பெண்களும் அவற்றை விரும்பிப் படித்தனர். உயர்ந்த உண்மைகளையும் உத்திகளையும் நாவலுக்காக அடைகிற இலக்கிய வீரம் இந்தக் காலத்தில் மெல்லத் தளிர்க்கப் பார்த்தது.

கல்கி வந்தார். நாவலுக்குத் தொடர் கதை என்ற பெயரும் இக்காலத்தில் உண்டாயிற்று. தேசிய இயக்கத்துக்கும் நாவல் மூலம் பிரச்சாரமளித்தவர் கல்கி. தியாக பூமி, கள்வனின் காதலி, ஆகிய அவருடைய தொடக்க கால நாவல்கள் தமிழ் வாசகர்களைப் புதிய அழகான பண்பட்ட பாதைக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்த்தன. தரமுள்ள நல்ல வாசகர்கள் பலரைக் கவர்ந்தார் கல்கி.

கோதைத் தீவு, சுந்தரி, விஜயம், முதலிய துணிவான சமூக சீர்திருத்த நாவல்களை வ.ரா. எழுதின சமயமும் இதுவே. வக்கீல் தொழில், மேல்நாட்டுப் படிப்பு, போலி நாகரிகம் - இவற்றைக் கிண்டல் செய்து எஸ்.வி.வி. நாவல்கள் எழுதினார். சங்கரராம் நாவல்களும் இரண்டொன்று தொடர்கதைகளாக வெளிவந்தன.

இந்தச் சமயத்திலும் வங்காளம், மராத்தி, இந்தி ஆகிய பிற இந்திய மொழிகளில் வளர்ந்துள்ள அளவு தமிழ் நாவல் இலக்கியம் வளரவில்லை. வளர்ச்சிக்கு அடியெடுத்து வைத்தது.

1930-வது ஆண்டுக்குப் பின்புதான் தமிழ் நாவலுக்கு இலக்கிய மதிப்பும், தனித் தன்மையும், ஓரளவு ஏற்பட்டது.

மாத, வார, இதழ்களும் நாவல்களுக்கும் தொடர்கதைகளுக்கும் முக்கியத்துவமளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. வாசகர்களும் வளர்ந்து பெருகினார்கள்.

கல்கி விகடனிலிருந்து விலகித் தனியே கல்கியை ஆரம்பித்தபோது சரித்திரம், சமூகம், ஆகிய இரு துறைகளிலும் மகோந்நதமான நாவல்களை எழுதத் தொடங்கினார். அப்போது புதிய விழிப்பு ஏற்படவும் ஒரு வாய்ப்பு நேர்ந்தது. தாகூர், சரத்சந்திரர், பிரேம்சந்த், பங்கிம்சந்திரர், காண்டேகர் முதலிய மிகச் சிறந்த வடநாட்டு நாவலாசிரியர்களின் நாவல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று வெளி வரலாயின. அதன் பயனாக எழுதுகிறவர்களிடம் அம்மாதிரி எழுதவேண்டும் என்ற ஆசையும், படிக்கிறவர்களிடம் அத்தகைய தரமுள்ள நாவல்கள் படிக்கக் கிடைக்க வேண்டுமே என்ற ஆர்வமும் உண்டாயிற்று. இந்த ஆர்வம்தான் வளர்ச்சியின் முதல் தளிர்! கல்கி வெளியேறிய பின் 'தேவன்' - ஆனந்த விகடனில் நாவல் - தொடர்கதைகள் எழுதி வரலானார்.

தமிழ் நாவலின் முதல் தளிர், தளிர்த்த இந்த நல்ல நேரத்தில் கலைமகளில் 'நாராயணசாமி ஐயர் நாவல் போட்டி' ஏற்பட்டது. - நாவல் - தொடர்கதைத் துறைகளில், அந்நாளில் பெயர் பெற்றிருந்த சிறுகதை ஆசிரியர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. 'சிற்றன்னை' என்ற சிறிய நாவலை மட்டும் புதுமைப்பித்தன் எழுதினார். அது ஒரு பெரிய நாவல் ஆகவில்லையானாலும் அமைந்திருக்கும் அளவில் பார்த்தால் மிகச் சிறப்பாகவே இருக்கிறது.

## பெருகிய ஆர்வம்

கலைமகளில் நாவல் போட்டி ஏற்பட்ட பின்பு தமிழில் ஒருசில நல்ல நாவலாசிரியர்களாவது தோன்றியிருக்கிறார்கள். 1940இல் இருந்து 1961 வரையுள்ள இருபத்தொரு வருடங்களில்

தமிழில் ஓரளவு சமூகம், சரித்திரம், துப்பறிவு, ஆகிய மூன்று வகை நாவல்களும் பெருக்கமாக வெளிவந்துள்ளன.

நாவல் எழுதவேண்டும் என்ற ஆர்வம் பல்வேறு நிலையிலுள்ள, பல்வேறு கொள்கைகள் உள்ள, எல்லா எழுத்தாளர்களுக்கும் தோன்றியிருக்கிறது. பல்வேறு பத்திரிகைகளிலும் தொடர் கதையும், நாவலும், இன்றி யமையாத அம்சம் ஆகிவிட்டது. தொடர் கதைகளோ, நாவலோ, வெளியிடாமல் விற்பனையைக் 'கணிசமாக' உயர்த்த முடியாது என்ற நிலை பத்திரிகைகளுக்கு ஏற்பட்டு விட்டது. இது வரவேற்க வேண்டியதொரு நிலை தான்.

ஆனால் இன்னும் தமிழ்நாட்டு இலக்கியம் பிற நாட்டு - அல்லது நம் நாட்டு மற்ற மொழிகளில் தோன்றியுள்ள நாவல்களோடு - உயரிட இடத்தை அடையத்தக்க விதத்தில் வளர்ந்திருக்கிறதா? வளருமா? என்று ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறோம்.

இப்படிச் சொல்வதை யாரும் தவறாக எண்ணிக் கொள்ளக்கூடாது. ஆர்வம் பெருகி யிருக்கிற அளவிற்கு இலக்கிய மதிப்புப் பெருகவில்லை. எழுதத் துடிக்கிற மனநிலை பலருக்கு இருக்கிறது. எப்படி எழுதினால் உலகத்தின் மிகச் சிறந்த நாவலாசிரியர்களோடு சரியாசனம் பெறத்தக்க நாவல்களை நாம் படைக்கலாம் என்ற சிந்தனைக்குப் பிறகு புதிய உத்திகளைக் கைக்கொண்டு எழுதும் நிலையை வரவேற்க வேண்டும்.

ஆனாலும் இன்றுள்ள நிலையிலேயே தமிழில் நல்ல நாவல்கள் ஒரு சிலவாவது தேறும். பத்துப் பதினைந்து நல்ல நாவலாசிரியர்களாவது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க விதத்தில் எழுதியவர்கள் என்ற பெருமையை அடைய முடியும். அதையும் மறுப்பதற்கு இல்லை.

## இன்றைய நிலை

'இன்றைய நிலை என்ன?' - என்பதைக் குறிப்பிட்டுத் தெளிவாகச் சொல்லப்புகுந்து விட்டால் சிலருடைய பாராட்டுக்கும், பலருடைய தாக்குதலுக்கும், ஆளாக நேரிடும். ஆனாலும் உண்மையை மறைத்துக்கொண்டு எழுதுவதிலும் பயனில்லை. எழுத்தையோ எழுதியவர்களையோ, இன்னார் அல்லது இன்னதென்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லுவதோ பாராட்டுவதோ வேற்றுமையையும், பூசலையும் வளர்ப்பதற்குத் தான் பயன்படுகிறது. அநுபவரீதியாகக் கண்ட உண்மையாகும் இது.

அலை ஓயட்டும் என்று காத்திருந்து கடலில் நீராட முடியாது. ஆகவே பயமோ, விருப்பு, வெறுப்போ, இல்லாமல் எடை போட்டுச் சொல்லவேண்டிய அவசியத்தையும் தவிர்ப்பதற்கில்லை. அவசியம் ஏற்பட்டால் கூடப் பொய்யைச் சொல்வது தவறு என்ற நிலை மாறி, அவசியம் ஏற்பட்டால்கூட உண்மையைச் சொல்வது தவறு என்று எண்ணிவருகிறார்கள் இந்நாளைய விமர்சகர்களில் சிலர். அந்த நிலையை மாற்ற நாம்தான் துணியவேண்டும்..

வாசகர்கள் இதற்காக எந்த நிலையில் துணிய முடியும்? நல்ல நாவல்களைக் கூசாமல் நல்ல நாவல்களென்று பாராட்டுங்கள். அதை எழுதிய - எழுதுகிற ஆசிரியனுக்கு ஊக்கமளியுங்கள். ஒரு பயனையும் விளைவிக்க முடியாத ஒன்றுக்கும் உதவாத - நாவல்களை அது பெரிய பத்திரிகைகளில் வெளிவருகிறதென்பதற்காகவோ, அதை எழுதிய ஆசிரியரின் தயவு - பெருமை - முதலியவற்றுக்குப் பயந்தோ பாராட்டாதீர்கள். பத்திரிகைகளில் வெளிவராமலே டாக்டர் மு.வ.வின் இலக்கியத் தரமுள்ள நாவல்கள் விற்பனையாவதைப் பார்த்தாவது உண்மைக்கு உண்மை உழைப்புக்கு - நாட்டில் மதிப்பு உண்டென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

*பங்கிம்சந்திரர், பிரேம்சந்த், சரத்சந்திரர், தாகூர், காண்டேகர், சோபான், சியாராமசரன் குப்தா, தகழி, சுதர்சன் - போன்று மற்ற இந்திய மொழிகளில் தோன்றியுள்ளவர்களை ஒத்த நாவலாசிரியர்களைத் தமிழ் நாட்டில், உண்டாக்குவது படிப்பும் பண்பும், உள்ள வாசகர்களாகிய உங்கள் கையில்தான் இருக்கிறதென்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தரமுள்ள நாவல்களை உருவாக்கத் தரம்தெரிந்த ஒவ்வொரு தமிழ் வாசகர்களும் பாடுபடுங்கள். தமிழ்ப் பண்பாடும், மரபும் இழுக்குறுமாறு எழுதப்படுகிற மட்டரக நாவல்கள் எவற்றிற் காவது நாம் அல்லது நம்மில் சிலர் ஆதரவு தருவதால்தானே அவையும் விற்பனையாகின்றன? நாம் தயாராகிவிட்டால் நாடு தயாராகிவிடும். தரத்தை அறிய இன்றே தயாராகுங்கள். மறந்து விடாதீர்கள்.*

## வளர்ச்சியின் அடையாளம்

*கலைமகள் போட்டியாலும், பிற இலக்கிய முயற்சிகளி னாலும் இன்று தமிழ் நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்ல நாவலாசிரியர்களிடமிருந்து நாம் ஊக்கமும் உழைப்பும் உள்ள புது முயற்சிகளை எதிர்பார்க்கிறோம். நம்மையும், நமது மொழியையும் வளர்த்துக் கொள்வது நமக்குப் பெருமை தானே?*

## நல்வழி

*நீண்ட நாட்களாகச் சிறந்த சிறுகதைகளையே எழுதி வந்த சிறு கதை வித்தகர்களும் இப்போது சில நல்ல நாவல்களை எழுத முற்பட்டிருக்கின்றனர். கல்கிக்குப் பின் தேவன் தொடர் கதைகளை எழுதிப் பெரும் வாசக சமூகத்தை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார். சில எழுத்தாளர்கள் தமிழில் சில புதிய நாவல் உத்திகளை அழகாக ஆண்டிருக்கிறார்கள். நல்ல நடையில் நல்ல கருத்துள்ள இலட்சிய நாவல்களை எழுதுவதனால் தமிழுக்குப் பெரிய எதிர்காலத்தை உண்டாக்கித் தர வேண்டுமென்னும் எண்ணம் முற்போக்கு எழுத்தாளர்கள்*

எல்லாரிடமும் இருக்கிறது. விரைவில் இது செயலாக ஆக்கம் பெறவேண்டுமென்பதுதான் நம் ஆசை. சுவையான சம்பவங்களும் சிக்கல் இல்லாத அமைப்பும் சமூக நலனை வளர்க்கும் தன்மையும் கொண்ட நாவல்கள் தமிழ் மொழியிற் பெருக வேண்டும். காவியங்களையும், கவிதைச் செல்வங் களையும் படைத்தளித்த மகாகவிகளின் வழியிலே வந்தவர்கள் நாம். இன்றுள்ள தலைமுறையிலே கருத்துக்களைச் சொல்ல நாவல்களும் , சிறுகதைகளும் பயன்படுகின்றன. நம்முடைய தன்மதிப்பும் தமிழ் மரபின் பெருமையும் சிறிது கூடக் கெட்டு விடாதபடி அவற்றை நாம் எழுதி வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு நல்ல நாவலும் நல்லதோர் காவியம். சரத் சந்திரரின் நாவல்களைப் படிக்கும் போது அவற்றைக் காவிய மாகத்தானே எண்ணுகிறோம்? தாகூரின் 'கோரா' நாவலைப் படிக்கும்போது இந்த நாட்டின் இலட்சியக் கனவுகளே உருவாகி வந்தாற்போல் ஓர் இளைஞன் நம் கண்முன்னே தோன்றவில்லையா? தமிழ் நாவலாசிரியர்கள் உலக இலக்கியத்தில் இணை சொல்ல முடியாத இடத்தினைப் பெற வேண்டும். சிறு கதை, நாவல், ஆகிய மறுமலர்ச்சி இலக்கியத்தின் நிகராக இந்த இடம் நமக்கும் கிடைக்க முடியும். நாவல் இலக்கியத்துக்குப் பத்திரிகைகளும், வாசகர்களும் விழிப்புடன் ஆதரவு தரும் இந்தச் சமயத்தில் நாவலாசிரியர்களின் திறமை முழு அளவிற் பயன்பட்டுத் தமிழை வளப்படுத்தட்டுமே! 'மற்ற மொழிகளுக்குத் தமிழ் இளைத்ததில்லை' - என்ற பெருமை வந்தால் போதும் நமக்கு! இளைப்பில்லாததோடு வளப்பமும் அதிகமென்ற நிலை வந்தால் பூரிப்பும் அடைவோம்.

❑

# 16. பத்திரிகைகளும் மொழி நடையும்

இன்று தமிழ் நாட்டில் வெளியிடப்பெறும் நாளிதழ்களும், வார, மாத இதழ்களும், விற்பனை வளத்தாலும், படிப்போர் தொகை மிகுதியாலும் பிற இந்திய மொழிகள் யாவிற்கும் இல்லாத சிறப்பும் செம்மையும் பெற்றிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இக் கூற்று மெய்யாகவே இருக்கலாம். அவ்வாறு இருந்தால் அது நாம் பெருமைப் படுவதற்குரிய செய்தியும் ஆகும். ஆனால், எவ்வளவு மக்கள் படிக்கிறார்கள்? எவ்வளவு நிறைவாக விலை போகிறது? - என்று இவற்றால் மட்டும் பத்திரிகைகளின் தகுதியை முடிவு செய்வதற்கு இல்லை. மொழிப்பற்றும், மொழி நடையும், உண்மையான தொண்டும், எவ்வளவில் மிகுந்திருக்கின்றன? என்பதைப் பொறுத்தே தகுதி அமைகிறது.

பலர் வாங்குகிறார்கள், பலர் படிக்கிறார்கள், பலர் பாராட்டுகிறார்கள் என்பதற்காக மட்டும் நல்லதாகிவிட முடியுமா? சிலர் வாங்கிப் படிக்கிறார்கள், சிலரினும் சிலரே புகழ்கிறார்கள் என்பதற்காக மட்டும் கெட்டதாகி விட முடியுமா? பெருமை பன்மையைப் பொறுத்து அன்று; உண்மையைப் பொறுத்தே ஏற்படுகிறது.

மொழியின் பழமையையும் மரபையும் இலக்கண முறைகளையும் அறவே வெறுத்து ஒதுக்கி எதிர் நீச்சுப் போடுவதால்தான் தங்களுக்குப் பெருமை கிடைக்கிறதென்று இன்றுள்ள பத்திரிகையாளர்களிற் பெரும்பாலோர் எண்ணி வருகின்றனர். பூனை கண்ணை மூடிக் கொண்டு, தனக்கு மட்டும் தென்படுகின்ற இருளால் உலகெங்குமே இருண்டு விட்டதாக எண்ணிக்கொள்வது போல இருக்கிறது இவர்கள் நிலை.

அன்றாடங் காய்ச்சிகளான நாளிதழ்களிலிருந்து மாத இதழ்கள் வரை (ஒரு சிலவற்றைத் தவிர) பெரும்பாலான

பத்திரிகைகளின் 'மொழி நடையை' நினைக்கும்போதுதான் பூனை கண்மூடும் இந்த எடுத்துக்காட்டுத் தோன்றுகிறது. சுவரில் சித்திரமா? சித்திரத்தில் சுவரா? மொழியின் வளத்தைக் காப்பதற்காகப் பத்திரிகைகளா? அன்றி மொழியிலுள்ள வரன் முறைகளை அழித்து, நல்ல மரத்திற் புல்லுருவிபோலக் கெடுப்பதற்காகவா?

உதாரணமாகக் காந்தியடிகளை எடுத்துக் கொல்லுவோம் - என்று லகர ளகர பேதம் தெரியாமல் கட்டுரை எழுதும் பள்ளிக்கூடத்துச் சிறுவனுக்கும், சந்திகளையும், வேற்றுமை உருபுகளையும், வழுமலியப் பயன்படுத்தி மொழி நடையைக் கறைப்படுத்தும் பத்திரிகையாளர்களுக்கும் அதிக வேறுபாடு இருப்பதாகத் தோன்றவில்லை!

இவர்கள் சிவஞானமுனிவர், சேனாவரையர் போன்று இலக்கண மேதைகளாக விளங்க வேண்டாம். சாதாரணமாகப் பிழையின்றி வாக்கியம் எழுதுவது எங்ஙனம் என்றாவது சிந்திக்க வேண்டாமா? வேலி எதற்காக? பயிர் அழிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே? இலக்கணமும், மரபும் யாருக்காக? மொழி நடையைத் தூய்மையாக இருக்கச் செய்ய வேண்டுமென்று கருதி இடப்பெற்ற வேலிகளல்லவா அவை? அவை தீமைக்காக அல்லவே?

நாளிதழ்களை வெளியிடுவோரிடமோ, ஆசிரியரிடமோ மொழி நடையின் தூய்மைபற்றி வற்புறுத்தினால், 'எங்களுக்குப் பல தொல்லைகள். இரவும் பகலுமாக ஓய்வின்றி உழைத்து நான்கு பக்கத்துக்குச் செய்திகள் திரட்டி வெளியிடுவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது. இந்த இலக்கண மெல்லாம் பார்க்க எங்களுக்கு நேரம் ஏது ஐயா?' - என்று அலுத்துக்கொள்ளுகிறார்கள். இந்த அலுப்பைக் கையாலாகாத் தனம் என்றுதான் சொல்லவேண்டும். இலக்கண வழுவின்றிச் செய்திகளைத் தரும் நாளிதழ்களும் ஒன்றிரண்டு வெளி வருகின்றனவே? அவற்றில் உழைப்பவர்களும் மனிதர்கள் தாமே? முயன்றால், உண்மையான பற்றும் ஆர்வமும்

கொண்டு உழைத்தால், முடியாதது எதுவுமில்லை. வழு மலிந்த நடையில் செய்திகளும், மொழிபெயர்ப்பும் வெளி வருவதற்குக் காரணம் என்ன தெரியுமா? உண்மைப் பற்றும், ஆர்வமும் இல்லாமைதான். 'எப்படி எழுதினால் என்ன? இதையெல்லாம் யார் கவனிக்கப் போகிறார்கள்? அதிகம் விற்பனையானால் போதும்!' - என்ற இத்தகைய பாராமுகமான மனப்பான்மைகளே காரணம்.

ஒரு நாளிதழ் பிழையற்ற நடையில் செய்திகளைத் தர வேண்டுமானால் கீழ் வருவனவற்றைச் சரியானபடி நடை முறையிற் கொள்ள வேண்டும்.

தலையங்கம், துணைத் தலையங்கம், இவற்றை எழுதுகிற ஆசிரியர்கள், நேபன், ராய்ட்டர், பி.டி.ஐ. முதலிய செய்தி நிலையங்கள் பிற மொழியில் அனுப்பும் செய்திகளைப் பிழையின்றி மொழிபெயர்க்கத் தெரிந்த உதவியாசிரியர்கள், சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளுக்கு நேரிற் சென்று குறிப்பெடுத்து வருகிற நிருபர்கள், பிழை திருத்துவோர், அச்சுக் கோப்போர் - இத்தனை பேரும் ஆர்வம் குன்றாமல் உண்மையாக உழைத்தால் ஒரு நல்ல நாளிதழ் தூய்மையான மொழி நடையோடு உருவாகிவிட முடியும். ஆசிரியர்களாகவும், உதவியாசிரியர்களாகவும் வேலை பார்க்கின்ற யாவர்க்கும் சந்தி இலக்கணம், வாக்கிய அமைப்பின் பல்வேறு நிலைகள், மொழியின் பொது மரபு ஆகிய செய்திகள் உறுதியாகத் தெரிந்திருக்க வேண்டும்.

வாக்கியம் எழுதிப் பழக்கமில்லாத ஆசிரியன் சந்திப் பிழையும், மரபுப் பிழையும், பொருட் பிழையும் மலியப் பெரும்பாலான பிற மொழிச் சொற்களைக் கலந்து தலையங்கம் எழுதுவதும், மொழிபெயர்க்கத் தெரியாமல் 'மைனர் புராஜெக்ட்' - என்பதைச் 'சிறுநீர்ப் பாசனத் திட்டம்' ('சிறுநீர்' - என்பதைப் படித்ததும் பலருக்கு என்ன பொருள் தோன்றும்?) என்று மொழிபெயர்க்கும் உதவியாசிரியனும், 'பெண் கல்வி' என்பதைப் 'பெண் கலவி' என்றும், 'காந்தியடிகளின் நிர்மானத்

திட்டம்' - என்பதைக் 'காந்தியடிகளின் நிர்வாணத் திட்டம்' - என்றும் அச்சுக் கோக்கின்ற அச்சுக் கோப்பவரும் - சேர்ந்து நாளிதழ் நடத்தினால் மொழி நடை எங்ஙனம் உருப்பட முடியும்?

நாளிதழ்களாவது போகட்டும். நேரமிகுதியும், அதிகம் உழைக்கின்ற வாய்ப்பும் உள்ள வார, மாத இதழ்களிலாவது நல்ல மொழி நடையைக் காண முடியுமா என்றால் அங்கும் அது கானல் நீராகவே இருக்கிறது. வார, மாத இதழ்களில் அச்சுக் கோப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாகப் பிழையின்றி அச்சுக் கோக்கலாம். சரிபார்த்துப் பிழை திருத்துபவர்களும் இரண்டு மூன்று முறைகள் ஒப்பு நோக்கித் தவறுகளைக் குறைக்கலாம். அவ்வளவும் செய்ய நேரமிருக்கிறது. ஆனாலும், ஏனோ செய்வதில்லை; ஆர்வமும் அக்கறையும் இல்லாமைதான் காரணமோ?

''ஒருவள் (ஒருத்தி) பஸ் ஸ்டாப்பில் 'வெயிட்' பண்ணிக் கொண்டு அந்த வாலிபனைப் பார்த்து மந்த ஹாஸமாக மலர்ந்த முகத்தோடு சிரித்துக்கொண்டிருந்தாள். (மந்தஹாசம் என்றாலும் முகமலர்ச்சி என்றாலும் ஒன்றுதான்)'' - என்று கதை எழுதுகிறவனும்,

''தவறைத் (தவற்றை) திருத்திக் **கொல்ல** வேண்டுமென்று கேட்டுக் **கொல்லு**கிறோம்'' - என்று கட்டுரை எழுதுபவனும்,

''அந்தக் காலத்திலே நமது கவர்மென்ட் இந்த சட்டத்தைப் போட்டது பிஸகு. இப்போதாவது உணர்ந்து நீக்கக் கோ**று**கிறோம்.'' (கோ**று**கிறோம் என்பதில் வல்லின 'று' போட்டால் 'கொல்லுகிறோம்' என்பது பொருள்) - என்று தலையங்கம் எழுதும் ஆசிரியனும் சேர்ந்து ஒரு வாரப் பத்திரிகை நடத்தினால் மொழி நடை பிழைக்குமா?

இப்போது கதை கட்டுரைகள் எழுதி வார, மாத, இதழ்களை நிறைப்பவர்களில் பலருக்குச் சந்தியிலக்கணம், மரபிலக்கணம், தொடரிலக்கணம், ஒருமை பன்மை வேறுபாடு

இவைகளெல்லாம் மிகுதியாகத் தெரிந்தவைகள் அல்ல! 'தெரிந்து கொள்ள வேண்டும்' - என்று எடுத்துச் சொன்னால், 'நாங்கள் புதுமையாளர்கள். இஷ்டம்போல எழுதுவோம்! எங்களுக்கு உரிமை உண்டு. பழம் பண்டிதர்களின் அடக்கு முறை எங்களுக்குத் தேவையில்லை' - என்கிறார்கள். மொழியைத் தூய்மையாகவும் நன்றாகவும் பயன்படுத்தினால் மொழிக்கும் எழுதுகிறவனுக்கும்தான் பெருமை. பண்டிதர்களுக்கு மட்டும் அல்ல.

இப்போது கதை எழுதுகிறவர்கள் 'கொச்சை மொழிகளையும், பிறமொழிச் சொற்களையும் எவ்வளவிற்குக் கலக்கலாம்?' - என்று ஒரு வரம்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கதைகளிலும், நாடக வழக்கிலும் கொச்சையை அறவே இல்லாமற் செய்துவிட முடியாது. அளவுடன் பயன் படுத்தலாம். வாக்கிய அமைப்புக்கள், ஒருமை, பன்மை முடிபுகள், சந்திமிகுமிடம், இயல்பாகும் இடம் - இவை யெல்லாம் நிச்சயமாக இன்றைய எழுத்தாளர்களில் பலருக்குத் தெரியவே தெரியாது.

வாழைபழம், கீரைகறி, என்று சந்திமிக வேண்டிய இடங்களில் மிகச் செய்யாமல் 'பிரசித்திப்பெற்ற' 'பள்ளிச் சென்றான்' - என்று மிகத் தேவையில்லாத இடங்களில் காது கசக்கும்படி மிகச் செய்துவிடுகிறார்கள். 'அது அல்ல' - என்றும் 'அவை அன்று' 'அவர்தான்' என்றும் 'அவன்தாம்' என்றும் ஒருமை பன்மையைக் குழப்புமிடங்கள் கூறிமுடிய மாட்டா!

வேட்டையாடத் தெரியாதவன் புலிக்கு முன் போய்ப் பயன்படுத்தத் தெரியாமல் வில்லைப் பிடிப்பது போலப் பயங்கரமானது, மொழி நடை தெரியாதவன் எழுதத் தொடங்குவது. தூய்மையான மொழி நடையே எழுதுபவனுக்கு உயிர்நிலை. ஓட்டைக் கிண்ணத்தில் எண்ணெய் தங்குமா? ஒழுங்கும், மரபும், இலக்கணமும் இல்லாத மொழி நடையில் கருத்துக்கள் தங்குமா? தங்கத்தான் முடியுமா?

வரம்பு இன்றிப் பயிர் செய்து ஏமாறக்கூடாது. தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்கெனவே இருக்கும் பல்வகைச் சிறப்புக்களோடு, மொழி நடையைத் தூய்மையாகப் பயன்படுத்தல் - என்ற புதிய சிறப்பையும் பெற்றுப் போற்ற வேண்டும். இல்லையானால் மற்றைய சிறப்புக்களும் அழிய வெகுநாளாகாது.

மொழி நடையின் தூய்மைக்கென்றே உழைக்கும் பத்திரிகைகளும் சில இங்கேதான் இருக்கின்றன. எல்லா இதழ்களுமே இந்த நல்வழியைப் பின்பற்றினால் தமிழ் ஆட்சி மொழியானதன் பயனைவிடச் சிறந்த பயன் மக்களுக்குக் கிடைக்கும். படித்தவர்கள் பத்திரிகைகளை எடுத்துப் பார்க்க வெட்கப்படும் நிலையும் மாறும். தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாடு படுவது மெய்யானால் தூய மொழிநடையை மேற்கொள்ளும் நற்பணியை முதலில் தொடங்கட்டும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள். மொழியைப் பாது காக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. அது தானாகப் பாதுகாப்புப் பெற்றுவிடும். அதன் தூய்மையைக் கெடுத்துக் கறைப்படுத்தும் 'பணி'யை அல்லது பழியை நீங்கள் செய்ய வேண்டாம்.

> **''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
> **அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்**
> **எல்லாரும் உவப்பது...''**

என்று பாடியதைப் படித்தவர்கள் தமிழர்கள்; பாடிய வனும் தமிழன்; பாடிய மொழியும் தமிழ். இந்தப் பொன் மொழி பிறந்த தமிழ் நடையைப் புண்மொழிகளால் வழுப் படுத்தலாமா? வேண்டாம். தூய மொழி நடையே இனி முயல்வோம்!

❑

# 17. மொழியும் உரைநடையும்

பொருள் உணர்த்துவது சொல்லின் பயன். சொல் தனிமொழியாய் நின்றும் பயன்தரும்; தொடர் மொழியாய் நின்றும் பயன் தரும். தனிமொழி 'சமய ஆற்றலால்' பொருள் தரும். சமய ஆற்றலாவது, ''இச் சொல்லால் இப்பொருள் உணரப் பெறுதல் வேண்டும்'' என இறைவனாணை போல் தொன்றுதொட்டு வரும் வழக்கியல் முறைமை. தொடர் மொழி பொருள் உணர வரும்போது, அவாய் நிலை, தகுதி, அண்மைநிலை, என்ற மூன்று வகையாலும் பொருள் உணரச் செய்யும். அவாய் நிலையாவது, பொருளை உணர்த்துவதற்கு வேண்டிய ஒரு சொல்லை அவாவி எதிர்பார்த்து நிற்கும் நிலை. தகுதி என்பது இன்னசொல் இன்னசொல்லோடு தழுவி நின்றால்தான் பொருள்தரும் என்னும் பொருத்தம். 'அண்மை நிலை' என்பது வாக்கியவுணர்ச்சி தோன்றச் சொற்களை இடையீடின்றி நெருக்கமாகக் கூறுதல்.

சொற்கள் தம் ஆற்றல் ஒன்றினாலேயே முழு அளவில் பொருளை உணர்த்தி விடுவதில்லை. உணர்வோனிடத்திலுள்ள உணரும் ஆற்றலும் ஒரு காரணமே. 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' - என்றார் ஆசிரியர் தொல்காப்பியர். சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் இடையே சொற் பொருளுணர்ச்சி என்றோர் தொடர்பு இருக்கிறது. அத்தொடர்பை உணர்தற் காரணமே உணர்ச்சி வாயில். இன்ன சொல்லுக்கு இன்ன எல்லையில் இன்ன பொருள் என்னும் வரம்பு அகராதியினாலோ, ஆட்சியினாலோ ஏற்பட்டு நிலைத்துவிடுவதில்லை. வழிவழியாக மக்கள் இனத்தில் வழங்கி உலவிப் பதிந்து பழகிய பழக்கமே பொருளுணர்ச்சி. தலைமுறைதோறும் அந்தப் பொருளுணர்ச்சி ஆற்றுநீர் போல் இடையறாமல் வருகிறது. பொருள் வழக்கற்று, மக்கள் வாய்

மொழிப் பழக்கம் குன்றிப் போகிற சொற்கள் அகராதியிலும், புலனெறி வழக்கிலுமே தங்கி விடுகின்றன. அவ்வாறு தங்கத் தங்கச் சொல்லின் வழக்கும், வலிமையும் குன்றி நடையிழக்க நேரிடுகிறது.

சொற்களின் வகையும் பொருள்நிலையும் தெரிந்து பயன் படுத்தாமையினாலும் சில சொற்கள் வழக்கு இழப்பது உண்டு. அழகு, எழில், சாயல், ஏர், கவின், வனப்பு, - இவையனைத்தும் அழகென்னும் ஒரே பொருளைத் தருவனவாயினும் - இட மறிந்து, நிலையறிந்து, தரத்துக்கேற்ப ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்தலாம். அவ்வாறின்றி ஒருவர் 'எழில்' என்ற சொல்லின் மேல் தமக்குள்ள பித்துக் காரணமாகப் பேசும் போதும், எழுதும்போதும், உரையாடும்போதும், கனவினும், நினைவினும், எங்கும், எதற்கும் 'எழில்' ஒன்றையே பயன் படுத்துவாராயின் அவரை என்னவென்பது? சொல்லைப் பயன்படுத்துவதில் பொறுப்பு வேண்டும். வெறி கூடாது. தனக்கென்று அறிவுச் செருக்கும், ஆணவமும் இருப்பதாகக் கருதிக் கொண்டு ஒரேபொருளை உணர்த்தும் பல தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவற்றையெல்லாம் புறக்கணித்து விட்டுக் குறிப்பிட்ட ஒரு சொல்லையே நிலைநாட்ட முயலும் பேதைமை கூடாது. இந்தப் பேதைமையால் அந்தப் பொருளைத் தரும் மற்ற வார்த்தைகள் மறைய நேரிடும்.

ஆனால், சொற்களின் மேல் வெறிபிடித்தவர்களையே இன்று எங்கும் காண்கிறோம். சொற்களின்மேல் அன்பு செலுத்துகிறவர்களைக் காணமுடிவதில்லை. சுவையும், இடமும், தரமும், அறிந்து தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த அமைந்த மனநிலையும் தெளிந்த அறிவுமுள்ளவர்களால்தான் இயலும். சொற்களை வழிபாடு செய்யுங்கள், வீரவணக்கம் புரியவேண்டாம். சொற்களின்மேல் அன்பு செலுத்துங்கள், ஆட்சிபுரிய வேண்டாம். சொற்களைப் போற்றுங்கள், சிறைப்

படுத்த வேண்டாம். தமிழிலுள்ள எளிய அல்லது கடுமையான - அத்தனை சொற்களும் நம்முடைய செல்வம். நாம் அன்பு செலுத்தி ஆள்வதற்கு உரியவை. 'காற்று' என்ற நற்றமிழ்ச் சொல் பலர்க்கும் புரிகிறதென்ற ஒரே காரணத்தை அதன் தகுதியின்மையாகக் கொண்டு 'வளி' - என்னும் சொல்லைப் பயன்படுத்தித் தன் கடுஞ்சொற் புலமை கண்டு பாமரர் வியக்கும் வண்ணம் வெளிப்படுத்தும் புலமை ஆணவத்தை என்னவென்பதென்றே தெரியவில்லை. வழக்கு நடைக்குத் தெளிவு என்பதும் ஒரு கருவியாகும். மேலும் காற்று என்பதும் நமது தமிழ்ச் சொல்தானே?

தூய்மையிலும் எளிமை வேண்டும். சொற்களைக் காட்டிலும் அவை தரும் பொருளே சிறந்தவை. சொற்கள் பொருளுணர்த்தும் கருவிகளே. ஏரால் உழ முடிந்த அளவிற்குச் சிறிய நிலத்தை உழுவதற்கு 'டிராக்டர்' - தேவையில்லை. பலர்க்கும் புரிய ஏற்ற எளிய தூய தனித் தமிழ்ச் சொற்களை விட்டுச் செய்யுள் நடைத் திரிசொற்களை வழக்கிற்குத் தேடுவானேன்?

**'சமையலறைக்குச் சென்று விரைவில் சோறு கொண்டு வருக'** - என்ற தூய எளிய தனித் தமிழ்ச் சொற்றொடரை, **'அட்டிற்புக்கு அடிசிற்கடிதிற் கொடு வா'** - **எனச் செய்யுள் நடை போல** வலிந்து கூறுதல் உரை நடைப் பொருளுணர்ச்சிக்கு ஏற்றதன்று.

## சொற்றொடர் நிலை

சொல் தொடரும் நிலைக்குத்தான் 'வாக்கியம்' - என்று பெயர். சொற்கள் தொடர்ந்து வாக்கியமாகும் நிலையை இன்றைய வழக்கிற்கு ஏற்பப் பேசும் மொழி வாக்கியம், எழுதும் மொழி வாக்கியம், என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பேசும் மொழி வாக்கியங்களை இலக்கண

வரம்புச் சிறைகளில் கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தினாலும் மாந்தர் வழக்கு நிலையின் எளிமைக்கேற்ப அவை திரிந்தும், குறைந்துமே தன்னியல்பு பெற்று வழங்கும். எழுதும் மொழி வாக்கியத்துக்கு வரம்புகள் உண்டு. அவற்றைக் கடைப் பிடித்துப் போற்ற வேண்டியது அவசியமுமாகும். அவசியமாயினும் வாக்கியங்களுக்காக வரம்புகளேயன்றி வரம்புகளுக்காக வாக்கியங்களில்லை என்பதையும் உணர்தல் வேண்டும். அழகும், தெளிவும், எளிமையும், இயல்பும் முக்கியம். அவற்றோடு தானாகவே வந்து அமைந்துவிடுகிற ஒரு வகை ஒழுங்கு அல்லது முறைமைதான் வாக்கியத்துக்கு வரம்பு.

'கவிதை' திரட்டுப்பால்போல் பெருக்கத்தைத் திரட்டிய சுவைச் சுருக்கம் என்றால் உரைநடை கறந்த பால் போல் இயல்பு நிலையை உடையது. தன் இயல்பான நிலையில் உள்ள கறந்த பாலில் அது ஏற்றுக்கொள்ள முடியாத வேறு பொருள் கலந்துவிட்டால் திரிந்து கெட்டுப் போவது போல், இயற்கையான உரைநடையில் செய்யுள் நடைக்கேற்ற திரிசொற்கள் கலந்தால் இயல்புநிலை கெட்டுத் திரிந்து விடுகிறது.

குடியரசு முறையில் மக்களுக்குள்ள உரிமையின் மிகுதியைப் போல மொழியில் எளிமையை விரும்புகிறவர்களின் உரிமை உரைநடை. மில் துணி கட்டிக்கொண்டு கதர்த்துணி அணியுமாறு அறிவுறுத்த வரும் சொற்பொழிவாளர் போல உரைநடையை வளர்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டே தெளிவையும், எளிமையையும், புறக்கணிப்பது பொருத்தமற்றது. முடியாட்சியும், தனி மனித அதிகாரமும், அழிந்து உலகெங்கும் தலையெடுக்கும் குடியாட்சி முறை போல் கவிதை நடையின் வீறு குன்றி உரைநடை வீறு பெற்றெழுந்து வளரத் தொடங்கி யிருக்கும் காலம் இது.

உரை நடைக் காலத்தில் சொல்லைவிடக் கருத்துக்குத் தான் அதிக மதிப்பு. பொருளுணர்ச்சிக்கு மதிப்பே ஒழிய, பொருளுணர்த்தும் கருவிகளான சொற்களுக்கு மதிப்பில்லை.

காந்தியடிகளைப் போல், புத்தரைப் போல், வாழ்க்கையில் எளிமை கண்டவர்களை உலகம் போற்றவில்லையா? மொழியை எளிமையாகவும், தூய்மையாகவும், தெளிவாகவும், பயன்படுத்துகிறவர்களையும் போற்றத்தான் வேண்டும். அறிவின் நோக்கில் பார்த்தால் வாழ்க்கையில் ஆடம்பரம் ஒரு பிழை. அதுபோல் மொழியில் ஆடம்பரமும் ஓர் ஆணவம். எளிமையில் ஒரு தூய்மை உண்டு. அந்தத் தூய்மை போற்று வதற்கு உரியது. மேற்கொள்வதற்குமுரியது. தப்புத் தப்பாக யாப்பும் கோப்புமின்றி ஆயிரம் கவிதைகள் எழுத முயல்வதைக் காட்டிலும் எளிமையும், தூய்மையும், தனித் தன்மையும் இலங்க நான்கு வாக்கியங்கள் நன்றாகவும், அழகாகவும், எழுதி விடுவது எவ்வளவோ சிறந்தது. பிழை யில்லாமல் தெளிவாக எழுதுவதே ஓர் அறம்.

அந்த அறத்தை எத்தனை பேர் செய்கிறார்கள், என்பதைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட எத்தனை பேர் செய்ய வில்லை; என்று கேட்பதுதான் இன்றைய நிலைக்குப் பொருந்தும் கேள்வி. பல பேர்கள் சேர்ந்து ஒரு பிழையைச் செய்துவிட்டு அதையே மரபாக்கிவிடும் சுயநலத்தை இன்று எங்கும் காண்கிறோம். புலமை என்கிற செருக்குப் புலமையை உண்மையாகவே பெற்றிருப்பவர்களுக்குச் சொந்தம் என்ற நிலைமாறி ஆள் பலமும், கட்சி பலமும் உள்ளவர்கள்கூட அந்தச் செருக்கைக் கொண்டாடலாம் என்னும் துணிவு இப்போது வந்திருக்கிறது. கருத்தைச் சொல்வதற்கு எளிமையும், தூய்மையும், அவசியம். சொற்றொடர் நிலையாகிய உரை நடையின் உயிர்நிலை தெளிவு. அதை மறந்துவிடலாகாது. தெளிவை முக்கியமாகக் கொண்டு பின் தூய்மையையும், மரபையும், சரிபார்த்துக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

## வாக்கிய அழகும் முறையும்

சொற்கள் வரிசைப்பட்டு நிற்கும் முறையால்தான் வாக்கியத்துக்கு அழகு வருகிறது. சொற்கள் வரிசைப்படாது நின்றோ, இடம் மாறி நின்றோ, உணர்த்துகின்ற பொருள்கள் வேறுபாடோ, மாறுபாடோ, உடையனவாக இருக்கும். ஒரே பொருளுக்குப் பல தொனிகள் உண்டு. 'கோவலனைத் தன் முன் கண்டதும் கண்ணகி மெல்ல நகைத்தாள்' - இந்த வாக்கியத்தை இப்படி எழுதினால் கண்ணகியின் சிரிப்பு மட்டும்தான் உணர்த்தக் கருதிய முக்கியமான பொருள். 'கோவலனைக் கண்ட அளவில் கண்ணகி நகைத்தாள்' - என எழுதினால், 'சிரித்தது எப்போது' என நேரத்துக்கு முக்கியத்துவம். 'கோவலன் கண்ணகியின் முகத்தில் நகையைக் கண்டான்' - என எழுதினால் சிரிப்பைக் கோவலன் 'கண்டு கொண்டதற்கு' முக்கியத்துவம். 'கோவலனைத் தன்முன் கண்டதும் கண்ணகியால் நகைக்காமல் இருக்க முடிய வில்லை' - என்று வாக்கியம் அமையுமானால் கண்ணகியின் 'ஆற்றாமைக்கு' முக்கியத்துவம்.

தோட்டக்காரனுக்கு எந்த இடத்தில் எந்தச் செடியும், மரமும், கொடியும் இருக்குமென்று தெரிவது போல் எந்த இலை எந்தச் செடியினுடையதென்று பழக்கமிருப்பதுபோல், வாக்கியமெழுதுகிறவனுக்கும், படிக்கிறவனுக்கும் பொருளை ஆக்கவும், உணரவும் பழக்கமிருக்கும். அந்தப் பழக்கத்துக்குத் தடுமாற்றமோ, மயக்கமோ, இல்லாமல் உரைநடை அமைவது தான் தெளிவு. 'அரசனைக் கொலை செய்த அமைச்சன் மகன் வந்தான்' - என்பதுபோல் எழுதினால் அரசனைக் கொலை செய்தவன் அமைச்சனா அல்லது அமைச்சன் மகனா என்ற தடுமாற்றம் உண்டாகும். சொற்களின் வரிசை முறை, தடுமாறாத பொருள் அமைப்பு, இவற்றினால்தான் அழகு உண்டாவது இயலும்.

'என்னுடைய சிற்றப்பாவிற்கு மருமகனுக்கு மூத்த பிள்ளைக்கு இளைய மனைவி' - என்கிற வாக்கியத்தில் மூன்று 'கு' உருபுகள் நின்று பொருளையும் கெடுத்து வாக்கிய அழகையும் கெடுக்கின்றன. இதே வாக்கியத்தை 'என்னுடைய சிற்றப்பாவிற்கு மருமகனின் மூத்த பிள்ளைக்கு இளைய மனைவி' - என்றால் முன்னைவிடத் தெளிவு அதிகம். 'என் சிற்றப்பாவின் மருமகனுக்கு மூத்த பிள்ளையுடைய இளைய மனைவி' - என்றால் இன்னும் தெளிவு.

தெளிவுக்குச் சுருக்கம் அவசியம். சுருக்கத்தில் அழகு அதிகம். தெளிவும், சுருக்கமும், இருந்தால் முறையும் இருக்கும்.

'பொங்கிப் பாய்ந்து நுரைத்துப் பல்காலும் கரை நோக்கி உந்தப் பெற்று மீளும் அலைகள் பலவாக எழா நிற்க, அப்போழ்தத்துப் படுஞாயிற்றின் செவ்வொளி நீர்ப்பரப்பில் மின்ன; எங்கும் இன்பத்துட் குளித்து மூழ்கும் சூழலில் புட்குலம் கூடடையக், கன்று கறவைகள் வீடடைய, மாலை முடிந்து இருள் போர்த்தது' என்று நீட்டி எழுதிய தொடரைச் சிறிது சிறிதாய்ச் சுருக்கி, 'அலைகள் பொங்கிப் பாய்ந்து நுரைத்தன. பல்காலும் கரைநோக்கி உந்தப்பெற்று மீண்டன. அப்போது மறையும் கதிரவனின் செவ்வொளி நீர்ப்பரப்பில் மின்னியது. எங்கும் இன்பத்துட் குளித்து மூழ்குவது போன்ற சூழல். புட்குலம் கூடடைகின்றன. கன்று கறவைகள் வீடடைகின்றன. மாலை முடிந்து இருள் போர்த்தது' - என்று ஏழு சிறு வாக்கியங்களில் பிரித்து எழுதினால் தெளிவும், பொருளுணர்ச்சியும் அதிகம். பொருட்சுமை அதிகமாகி வாக்கியத்தை வளைத்து அழுத்தி இறுக்காமல் தடுப்பதற்குச் சுருக்கம்தான் சரியான வழி.

வினையெச்சங்களைப் பலவாக அடுக்கி எண்ணி நீட்டி முடிப்பதும் ஒருவகை கெட்டவாக்கியப் பழக்கம்.

"கொன்றும், குலைத்தும், குருதியுழக்கியும் குற்றுயிரும், குலையுயிருமாய்ப் பாழ்படுத்தியும் பகைவர் படையினைச் சூறையாடி, முறியடித்து, வீழ்த்தி வீறு கொண்டு மேலெழுந்து வெற்றி முழக்கி நின்று பூரிக்கும் எம் மன்னவன் 'வாழ்க! என்று வாழ்த்தப் புலவர் குழுமினர்.'' வினையெச்சங்கள் வாக்கியப் பொருள் வேகத்தைத் தடுத்து நிறுத்தி அழகைக் கெடுப்பதை இதில் காண்கின்றோம். நடந்து போய்க் கொண்டிருக்கிற மனிதன் ஒருவனைப் பத்தடிக்கொருமுறை காலை இடறிக் கீழே தள்ளுவதுபோல் ஒவ்வொரு வினையெச்சத்திலும் இடறிவிழுந்து தடுமாறுகிறது பொருளுணர்ச்சி. இருபதாம் நூற்றாண்டு வாழ்க்கையில் ஆடையணிகளிலிருந்து தலைமயிர் உள்பட எல்லாம் சுருக்கமாக இருப்பதுதான் அழகென்று கருதப்படுகிறது. வாக்கியம் மட்டும் நீண்டு நாகரிகத்தைப் புறக்கணிப்பானேன்? சிறுகதை, சிற்றுண்டி, சிறு சேமிப்பு, சிறு தொழில் வளர்ச்சி, சிறு பான்மையினர் - என்று சுருக்கத்தை ஒவ்வொரு துறையிலும் தேடுகிற நாம் உரைநடையிலும் அதைத் தேடுவதில் தவறில்லையே!

❑

# 18. மொழியும் சுவையும்

பொறிபுலன்களால் நுகர்ச்சி செய்வதற்குரிய யாவும் சுவைகளே. புலனுக்கும் சுவைக்கப்படுகிற பொருளுக்கும் இடையே உள்ள ஈடுபாடே சுவையுணர்ச்சி. மெய்ப்பாடு, பாவம், சத்துவம் என்னும் சொற்களும் சுவைப்பொருள் உடையன. சுவை இரண்டு பகுதியாகப் பிரியும். சுவைத்தோன், சுவைக்கப்பட்ட பொருள் என்பனவே அவ்விருபகுதி. சுவைத்ததற்குப் பின்னர் சுவைத்தோனிடத்தில் நிகழ்கின்ற கண்ணீர் விடுதல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் போன்ற வேறுபாடுகளைச் சத்துவம் என்று குறிப்பிடுவர். சுவைத்தோனுடைய உள்ளத்தில் அச்சுவையினால் நிகழும் குறிப்பைப் 'பாவம்' என்று குறிப்பிடுவர். ஆகச் சுவையானது, சுவைக்கப்படும் பொருள், சுவைக்கின்ற பொறியுணர்வு, சுவைப்போன் மனோபாவம், அவன்புறத்தில் நிகழும் சத்துவ வேறுபாடுகள் என நான்கு வகையாக விரிந்து நிகழ்கின்றது. இவை சுவையின் வகைகளைப் பற்றிய ஒரு சில செய்திகள். இனிச் சுவையின் தோற்றத்தைப் பற்றி ஆராய்வோம்.

சுவைகள் யாவும், ஆடல் பாடல் முதலிய நாடக விளையாடல்களில் இருந்து தோன்றின என்பர் ஆசிரியர் தொல்காப்பியர். குறுநிலமன்னரும் முடியுடை வேந்தரும் நாடகமகளிர் இயற்றும் நவரசங்களுக்கும் இலக்காகிய ஆடல் பாடல் முதலியவற்றுள் தோன்றுவனவாகிய முப்பத்திரண்டு சுவை விரிவும் பதினாறு ஆகி அடங்கும் என்பது தொல்காப்பியர் கருத்து.

***''பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்***
***கண்ணிய புறனே நால்நான்கு என்ப.''***

(மெய்ப்பாட்டியல் 1)

(பண்ணை - ஆடல் பாடல் முதலிய விளையாட்டுக்கள்; எண் நான்கு - முப்பத்திரண்டு; நால்நான்கு - பதினாறு; கண்ணிய - கருதப்பட்ட; புறன் - சுவைப்பொருளின் பகுதி.)

*ஆசிரியர் தொல்காப்பியர் எட்டுச் சுவைகளே கூறினார். சாந்தரசத்தை அவர் கூறவில்லை. சாந்தரசத்தைத் தமிழ் நூலார் 'சமனிலை' என்று கூறுவர். 'சாந்தரசம் சாதாரண உலக மக்களிடத்தில் இல்லாமல் உலகியலிலிருந்து விலகித் தாம் வகுத்துக்கொண்ட குறிக்கோள் நோக்கிச் செல்லும் உலகியல் நீங்கினவர்களுடைய இயல்பு ஆதலால் அதைத் தொல்காப்பியர் கூறவில்லை' என்பது உரைகாரராகிய பேராசிரியர் கருத்து. பேராசிரியர் கூறியவற்றைத் தவிர வேறு ஒரு சிறந்த முறையிலே ஆசிரியர் சமனிலைச்சுவை கூறாமைக்கு அமைதி கூற முடியும். பேராசிரியர் கூறுகின்ற படியே, 'உலகியல் நீங்கியசான்றோர் இயல்பாயின், சான்றாண்மை கல்வியால் வருவது. கல்வி, பெருமிதச் சுவையுள்ளே அடங்கும். அடங்கவே கல்வியாகிய பெருமிதம் உடையார் சமனிலை எனப்படும் சாந்தமாகிய நடுவுநிலை உடையவராகவே இருத்தல் வேண்டும். இல்லாதவரெனின் அவர்க்குப் பெருமிதம் ஒரு தலையாக இல்லை.' ஆகவே, பெருமித மென்னும் ஆறாவது சுவையில் சமனிலையும் ஓராற்றான் அடங்குதலினால் தொல்காப்பியர் அதனைத் தனியே கூறாராயினர் என்பது பொருந்திச் சிறக்கும். இனி,*

**"ஆங்கவை ஒருபாலாக ஒருபால்**
**உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்."**

(தொல். மெய் 12)

*என்னும் மெய்ப்பாட்டியலின் பிற்பகுதியிலுள்ள, பிற வகையால் வருகின்ற மெய்ப்பாடுகளைக் கூறும் சூத்திரத்தில் உலகியல் நீங்கினார் இயல்பாக, 'நடுவுநிலை' எனச் சமனிலைச் சுவையைக் கூறினார் எனினும் அமையும். இன்னும்*

பேராசிரியரே இச்சூத்திரவுரையில், 'நடுவுநிலை என்பது ஒன்பது சுவையில் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப் படுஞ் சமனிலை. அஃதாவது, செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்து ஓடா நிலைமை. அது காமம் வெகுளி மயக்கம் நீங்கினார் கண்ணே நிகழ்வது. சிறுவரவிற்றாகலான் அவற்றொடு கூறினான்' எனக் கூறி அமைக்கின்றார். உலகியல் நீங்கினார் இயல்பு என்று கூறிய பேராசிரியரே இங்கே 'ஒன்பது சுவையுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படுவது' என்றும் கூறியிருக்கின்றார். இஃது இவ்வாறு இருக்க,

***"நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளிஉவகை என்று***
***அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"***

(தொல். மெய் 3)

என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறும் எட்டுச்சுவையும், பதினாறும் முப்பத்திரண்டும் ஆவது எவ்வாறு என்று காண்போம். நகை எழுவாயாக உவகைகாறும் உள்ள எட்டுச் சுவையும் சுவைக்கப்படுபொருள், சுவைக்கின்ற பொறியுணர்வு, சுவைக்கும் மனோபாவம், சுவைப்பான் புறத்தே தோன்றும் சத்துவங்கள் என்னும் நான்கினோடும் உறழ முப்பத்திரண் டாகும். சுவைக்கப்படும் பொருளும் சுவையுணர்வும் என்னும் இரண்டனுள் ஏனையவற்றையும் அடக்கி எண்சுவைகளையும் உறழ்தரச் சுவை பதினாறு ஆகும். இறுதியாக ஆராய்ந்து முடித்தால் அவை எட்டும் எட்டுச் சுவைகளென்ற எல்லைக் குள்ளேயே அடங்கிவிடுகின்றன.

***"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே"***

(தொல். மெய் 2)

'நாலிரண்டாகும் பாலும் என்று சிறப்பித்ததனால் எட்டாதலே யன்றி ஒன்பதுமாகும் என்னும் பிறர் மதத்தையும் ஆசிரியர் இங்கே தொனிப்பிக்கிறார்.' பேராசிரியரும் இவ்வாறே கூறினர்.

இனிப் பழந்தமிழ் நாடக நூலாசிரியராகிய செயிற்றி யனார் என்பார், சுவையுணர்வையும் சுவைப்பொருளையும் ஒன்றாக்கிச் சுவை, குறிப்பு, சத்துவமென மூவகைப் பாகுபாடு செய்து எண்சுவையோடு பெருக்கி இருபத்து நான்கு பிரிவாகக் கொண்டார். கொண்டாரேனும் எட்டினுள் அடங்குமென இறுதியில் உடன்பட்டார். வேறு நாடக நூலாசிரியர் சிலர் சமனிலை என்னும் ஒன்பதாஞ் சுவையையும் கூறி, இம் மூன்று பிரிவுகளோடும் உறழ்ந்து இருபத்தேழு எனக் கூறுவர். இனி, இவ்வொன்பது சுவைகளின் அமைதியும் நாடக நூலிற்கு இன்றியமையாததாகலின் நாடக நூலாசிரியராகிய செயிற்றியனாரும் இருபத்தேழு சுவையே வேண்டினார் என்று கூறினாலும் தவறில்லை. இதுவரை சுவையின் முறை துறைகளை ஒருவாறு விளக்கி வரைந்தோம். இனிச் சுவையின் இயல்புகளையும் அவைகளை அம்முறையே வைத்தமைக்கு உரிய காரணங்களையும் ஆராய்ச்சிச் சான்றுகளோடு விளக்க முற்படுவோம்.

நகை எனப்படுவது சிரிப்பு. அது முறுவல், புன்னகை, பெருநகை என நிகழ்கின்ற முறைமையால் மூவகைப் படும். அழுகை எனப்படுவது அவலச்சுவை. அவலமெனச் சுவையின் பெயர் கூறாமல் அழுகை என் அச்சுவைக்குரிய மெய்ப்பாட்டாற் பெயர் கூறினார் ஆசிரியர். அவலச்சுவை பிறர் அவலங்கண்ட வழியும் தானேயவலமுற்ற வழியும் ஆகிய இரு நிலைமைக் கண்ணும் தோன்றும். இவற்றுள் பிறர் அவலங் கண்ட வழித் தோன்றும் சுவையைக் கருணை என வேறு ஒரு சுவையாக வழங்குவர் வடமொழிவாணர். தொல்காப்பியர் அவலச் சுவையினுள் அதனை அடக்கி

ஓதினார் எனல் சாலப் பொருந்தும். அல்லது கருணை அவலம் என இருகூறு செய்து பிறன்கோள் புலப்படுத்துவாராயினர் எனினும் அமையும். இளிவரல் என்பது இழிவுச் சுவை. இரக்கம் என்றாலும் ஒருவாறு இளிவரற்சுவையினைக் குறிக்கும். மருட்கை என்பது வியப்புச் சுவை. அற்புதம் என்று வழங்கப்படுவதும் இதுவே. அச்சம் என்பது பயச்சுவை. பெருமிதம் என்பதுதான் பிறத்தற்குரிய மிகுதி உண்டாய வழித் தோன்றுகின்ற வீரம். கல்வி வீரம், போர் வீரம், இசை வீரம், கொடை வீரம் என அது இந் நான்கும் நிலைக் களனாகப் பிறக்கும் இயல்பினது. இன்பம் பொருள் இவற்றின் பொருட்டுப் பழி வருவன செய்யாத புகழ் நிலையாம் இசையே எனப்படுவது. வெகுளி என்பது கோபச் சுவை. வடமொழியாளர் ரௌத்திரம் என்பதும் இதுவே. உவகை என்பது இன்பம் முதலியன காரண மாகப் பிறப்பதோர் மகிழ்ச்சி. முன்னதாகிய நகையோடு தொடர்புடையது உவகை. இவ்வெண்வகை மெய்ப்பாடுகளைச் சுவை, குறிப்பு என்ற பெயர்களாலும் கூறலாம் குறிப்பான் உணரப்படும் காரணமும் நெறிப்பாடும் உடைமையின். இனி நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என இவற்றை இவ்வாறு வரிசைப்படுத்திய ஆசிரியர் யாதானுமோரோர் காரணம் பற்றியன்றே வரிசைப் படுத்தியிருத்தல் வேண்டும். அக்காரணங்களை ஒருவாறு இப்போது உய்த்துணர முற்படுதல் வேண்டும்.

மெய்ப்பாடு எல்லாவற்றுள்ளும் புலப்படுதற்கண் விளக்க முடைமை பற்றியும், சிறந்தமை பற்றியும் விளையாடலின்கண் தோன்றிய முதன்மையோடு இயைபு உடைமை பற்றியும் நகைச் சுவையை முன்வைத்தார். இவ்வாறன்றி மேற்கிளந் தோதிய பொருளதிகாரத்து அகப்பொருட்கு நெருங்கிய தொடர்புடைமைபற்றியும் பொதுவாகப் புறப் பொருட்கும் ஒருவாறு சார்புடைமை பற்றியும் முதலில் வைத்தார் எனினும்

பொருந்தும். இனிச்சுவைகளினுள் இதுவே மங்கலம் மிக்க தாகலின் முற்கூறினார் என்றால் அக்கூற்றில் ஓர் சிறப் பின்மையின் பொருந்தாது. நகைச் சுவைக்கு மறுதலை யாகலின் அழுகை என்னும் அவலத்தை அதன்பின் வைத்தார். அல்லது இன்பியல், துன்பியல் இரு பாகுபாடும் சுவைகட்குத் தலைமை பூண்டு நிற்றலின் சிறப்பிற்றாகிய இன்பியல் கூறித் துன்பியல் கூறினார் என்று சொல்லுதலும் பொருந்தும்.

இவ்வாறு நாடக நிலையுள் வேண்டப்படும் சுவை தலைமைபற்றி இரண்டே என்று Tragedy, Comedy என வேண்டுவார் மேல்புல நூலாரும். யாங்ஙனமெனின் உவகை பெருமிதம் என்பன நகையினுள்ளும், இளிவரல் அச்சம் என்பன அழுகையின் கண்ணும், மருட்கை வெகுளி என்பன அவ்விரண்டன்கண்ணும்பட்டு எட்டுச் சுவையின் இயக்கமும் இன்பியல், துன்பியல் என்னும் நாடகநிலை முடிவான இரண்டு சுவைகளுள் அடங்கிவிடும். உவகையின் பிறப்பகம் நகையாகலானும், பெருமிதம் என்பது இறுமாப்போடு பீடுபட்டதொரு உவகையே ஆகலானும், அவ்விரண்டும் நகையினுள்ளே அடங்கும் என்பது.

இளிவரல், அழுகை புலப்படாது தோன்றும் ஒரு வகைக் குறிப்பொடு நெறிப்படும் அவலமே ஆதலானும், அச்சம் என்பது 'இனி என்ன அவலம் நிகழுமோ?' என அவலத்தை எதிர்நோக்கி நிற்கப் பிறக்குமோர் சுவையே ஆதலாலும் அவ்விரண்டும் அழுகையுள் அடங்கும் என்பது. மருட்கை என்னும் வியப்புச் சுவை உவகை, பெருமிதம், அச்சம் முதலிய யாவும் அடிப்பட நிகழ்வதாகலின் இன்பியல் துன்பியலாகிய நகை, அழுகை இரண்டனுள்ளும் அடங்கும் என்பது. வெகுளிச் சுவை தன்னை மாற்றான் நக்க வழியும், தன்மாற்றான் உவந்த வழியும், அவன் பெருத்த இறுமாப் பெய்தும் வழியும் தோன்றுவதேபோல, எஞ்ஞான்றும் தான்

வாழ்ந்த முற்செல்வ நிலை எண்ணி இளிவரற் காலத்துத் தமரொடு வெகுளலானும், அச்சக் காலத்துக் காரணமின்றி வெகுளலானும், அவலக் காலத்துத் தான் அவ்வவலமெய்தச் செய்தாரை வெகுளலானும் என இருமை நிலையினும் பிறப்பதால் இரண்டனுள்ளும் பட்டு அடங்கும் என்பது. ஆக இவ்விதமாய் ஏனைய ஆறும் தம்முள் அடங்குதல் என்னும் தலைமை கொண்டமையால் 'நகையே அழுகை' என இன்பியல், துன்பியலான அவ்விரண்டையும் முன் வைத்தார் என்பது. அழுகைக்குப் பின் இளிவரல் வைத்தது அழுகை வெளிப்படையாய் நிகழும் அவலமெய்ப்பாடு என்பதையும் இளிவரல் குறிப்பாற் புலப்படும் இரக்க மெய்ப்பாடு என்பதையும் அறிவித்தற்கே ஆகும். ஏனெனின் இரக்கம் என்பதும் அழமாட்டாததோர் அவலநிலையேயாகும். அவ்வியைபு நோக்கியே அழுகையின் பின் இளிவரற்சுவை வைக்கப் பட்டது. 'இவர்க்கும் இவ்வவலம் வந்ததோ?' 'விதி கொடி தன்றோ?' எனவும், 'பாலும் கொழுங்கனியும் உண்டவாய் புற்கையும் உண்ண வந்ததோ?' எனவும் அவலம் பற்றியும் இளிவரல் பற்றியும் வியப்புச் சுவை பிறப்பதாலும் அடுத்து நிற்கும் அச்சத்தின் காரணமாக இருப்பது பெரும்பாலும் வியப்புச் சுவையே ஆகலானும், அச்சத்திற்கும் இளி வரலுக்கும் இடையே வியப்புச் சுவை வைக்கப்பட்டது. முன்னர் உணர்த்தப்பட்ட அவலம், வியப்பு என்னும் இரு மெய்ப்பாடும் அடிப்பட நிகழ்தலானும், பின்னர் உணர்த்த இருக்கும் பெருமிதத்தோடு மாறுபட்டதாகலானும் அச்சச் சுவை வியப்பிற்கும் பெருமிதத்திற்கும் இடையே தந்துரைக் கப்பட்டது. மேற்கூறிய இளிவரல் அச்சம் என்னும் இரண்டு மெய்ப்பாடும் சிறிதுந் துணைப்படாவண்ணம் நிகழ்வதாலும் முன்னதாகிய அச்சத்தோடு மாறுகோடலானும், பிறர் கண்டு வியத்தற் காரணமாகிய வியப்புச் சுவைக்கு நிலைக்களனான கல்வி மிகுதி, கொடை மிகுதி முதலியன உள்ளதாகையாலும்

பெருமிதச் சுவை அச்சத்திற்கும் வெகுளிக்கும் இடையே வைக்கப்பட்டது. வீரம் முதலியன பெருமிதம் காரணமாக மாற்றார்க்கும் தோன்றலானும், பின் நிற்கும் உவகையோடு வேறுபடுதலானும் வெகுளிச்சுவை பெருமிதத்திற்கும் உவகைக்கும் இடையே உரைக்கப்பட்டது. இனிப் பெருமிதம் உடையார்க்குத் தோன்றாதென்பது தோன்றவும் உவகைக்கு மறுதலை என்பதும் உவகையின் வழிப் பிறப்பது என்பதும் விளங்கவும் இங்ஙனம் இடை வைத்தார் எனினும் அஃது ஒருவாறு அமையும். மெய்ப்பாடு எல்லாவற்றுள்ளும் நகையைப் போலப் புலப்படுதற்கண் விளக்கமுடைமை பற்றியும் நகையோடு பேரியைபுடைமைபற்றியும், முன்னின்ற வெகுளிக்குச் சிறிதும் இயைபின்மைபற்றியும், வெகுளியில் வழித் தோன்றுவதென்பதுபற்றியும், உவகையிற் பிறக்கும் நகையையும் தன்னுட்படுத்தும் சிறப்புடைமை பற்றியும் உவகை இறுதியில் வைத்துக் கூறப்பட்டது. இவை சுவை வைப்பு முறைக்கு விளக்கம்.

இனி ஒன்பதாவதாக ஏனையோர் வேண்டுவதும் நாடக நிலையுள் ஒன்றெனக் கொள்ளப்படுவதுமாகிய சமனிலைச் சுவைக்கு ஏனைச் சுவைகளுக்குள்ளதுபோல, மெய்யின் கண் நிகழும் சத்துவ வேறுபாடு இன்மையின் ஆசிரியர் தொல் காப்பியர் அதனைக் கூறாராயினர் என்னுங் கருத்துப் பேரா சிரியருக்கு இருந்ததாகத் தெரிகிறது. ''மற்றிவ் வெட்ட னொடுஞ் சமனிலை கூட்டிச் சுவை ஒன்பதென்னாமோ நாடக நூலுட் போலவெனின் அதற்கு ஓர் விகாரமின்மையான் ஈண்டுக் கூறியது இலன் என்பது'' என்றார் பேராசிரியர். ஏனைச் சுவைகளைப் போலன்றி அமைதியே சமனிலைச் சுவைக்கு மெய்ப்பாடாகலான் விகாரமின்மையாகிய அமைதியே அதற்குரிய விகாரமாகிய சத்துவ வேறு பாடெனப்படும். என்னை? ஏனையனபோல இயல்பால் நிகழுஞ் சத்துவங்களை நிகழாவண்ணங் காத்தொழுகும்

விகாரமின்மையும் அவையிற்றை நோக்க விகாரமே யாதலினென்க. ''அதற்கு விகாரமுண்டு எனின் முன்னை எட்டனுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப்படும்'' என்று இலேசான் உடம்பட்டார் பேராசிரியரும். அமைதிச் சுவைக்கு அமைதியே விகாரசத்துவமாதலின் அவையிற்றோடு சார்த்திக்கோடல் அத்துணைச் சிறப்பின்றாதலின் தனித்து நின்றியலும் ஆற்றலது எனலே சாலப் பொருந்தும். நாடக நிலையுள் இவ்வமைதிச் சுவை வேண்டப்படுவதும் அமைதியாகிய மெய்ப்பாடு குறித்தேயாம். மெய்ப்பாடின்று எனின் நாடக நிலையுள் வேண்டப்படுமெனல் பொருந்தாது ஆகலின் அமைதிச் சுவைக்கு விகாரமின்மையாகிய அதுவே சத்துவ விகாரமாய் மெய்ப்பாடு புலப்படுத்தும் என்பதாம். சமனிலையும் உலகியலோடு தொடர்புடைய ஒன்றாகலானும், உலகியலுள் நாடகநிலைக்கு வேண்டப்படுதலானும், பொருளதிகாரத்து அகத்திணையியல், புறத்திணையியல்களுள் உலகியல் நீங்கினார் பெற்றி ஆசிரியராற் கூறப்படுதலானும் அதனால் ஆசிரியர் கூறாராயினார் என்பது பொருந்துதலின்று. பெரு மிதத்துட் சிலவும் உலகியல் நீங்கினார் பெற்றியாகலிற் கூறாமை வேண்டும். இச்சொல்லிய காரணங்களான், பெருமிதத்துள் அடங்கும் என்னுங் கருத்தினாலாதல், ''உடைமை இன்புறல் நடுவுநிலை'' எனப் பிற்கூறி அமைக்கும் கருத்தினாலாதல் சமனிலைச் சுவை கூறாராயினர் என்பதே பொருத்தமாக அமைவதாம். ❑

# 19. மொழியும் புதிய விளைவுகளும்

ஆங்கிலம், இந்தி, வடமொழிகளின் தொடர்பால் சிதைந்து கெட்ட வாக்கியங்களும் தமிழில் களையாய் முளைத்து வழங்குகின்றன. தமிழ்ப் பெண்ணுக்கு வெள்ளைக் காரியின் 'கவுண்' அணிந்தமாதிரியும், வெள்ளைக்காரப் பெண்ணுக்குத் தமிழ்ப் புடைவையைக் கட்டினமாதிரியும், சில வாக்கியங்கள் உண்டாகி வழங்குகின்றன. பல மொழிப் பயிற்சி காரண மாகவும், பெரிய மனிதர்களின் வாய்களில் புகுந்து புறப் படுகிற பெருமையைக் கண்டும், பலர் இத்தகைய வாக்கி யங்களை அங்கீகரித்தாலும் இவை தமிழ் மொழி மரபுக்கு ஏலாதவை.

'நான் அதற்கு **முயற்சிக்கிறேன்.**'

'இரயிலில் உங்களுக்குப் பக்கத்தில் எனக்கும் கொஞ்சம் இடம் **போட்டு** வையுங்கள்.'

'அந்த விழாவில் அவசியம் நீங்கள் **பங்கெடுத்துக் கொள்ள** வேண்டும்.' '**ஒரு நூறு** ஆண்டுகளுக்கு முன்னால் இது நடந்தது.' 'நீங்கள் மிகவும் மோசமானவராக **இருக்கிறீர்கள்!**'

'**பரீட்சார்த்தமாக** இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டு மென்பது என்னுடைய **உத்தேச பூர்வமான** நோக்கமல்ல.' '**அருகாமையில்** உள்ள இடம்.'

'முயல்கிறேன்' - என்றெழுதினாலே தன் வினை ஒருமையில் அமையும். 'முயற்சிக்கிறேன்' என்பது பிழை. 'இடம் ஒழித்து வையுங்கள்' 'இடம் விட்டுவையுங்கள்' - என்பது மரபுக்கு ஏற்கும். 'இடம் போட்டு வையுங்கள்' எனப் போடுதல் என்ற சொல்லைப் பயன்படுத்துதல் தவறு. 'பங்கு எடுத்துக் கொள்ளுதல்' - என்பது 'டேக் பார்ட்' என்ற ஆங்கிலத்

தொடரின் தழுவல். 'ஒரு நூறு' என்னும் தொடர் தரும் பொருளை 'நூறு' என்ற எண்ணுப்பெயர் ஒன்றே தரும். ஒன்றுக்கு மேற்பட்டால் சொல்லுக்கு முன், இரண்டு, மூன்று, - என்று அடைமொழி அமைய வேண்டியதுதான், 'ஒரு நூறு' என்பதில் 'ஒரு' என்ற சொல் வீணான மிகைச் சொல். 'நீங்கள் மிகவும் மோசமானவர்' - என்றாலே எழுவாயும், பயநிலையும், முடித்துக்காட்டுஞ் சொல்லும் சரியாக அமைந்த முழு வாக்கியமாம். 'இருக்கிறீர்கள்' - என்பது அநாவசியமான சொல். அருகில் என்ற பதமே பக்கத்தில் எனப் பொருள் படும். அருகாமை என்றால் தொலைவு. பிற மொழியிலிருந்து தனிச் சொற்களை அமைத்தலும், பயன்படுத்தலும் ஏற்றதாக இருப்பினும் 'பரீட்சார்த்தம்,' 'உத்தேச பூர்வம்' - போன்று இருமொழியிணைந்து பிரியாது ஒரு தொடராய் நிற்கும் பிற மொழிச் சொற்றொடர்களைப் பயன்படுத்துவது நல்லதாகாது.

இன்னும் அழகுக்காவது சில சொற்களுக்குப் பக்கத்தில், சில சொற்கள் உடன் தொடராமல் தவிர்க்க வேண்டும். 'அப்பொருள் இப்பொருளைவிடச் சிறிது பெரிது.' இந்த வாக்கியத்தில் 'சிறிது பெரிது' என்ற முடிப்பில் இரண்டு சொற்களும் ஒன்றோடொன்று இணையத் தயங்கி இணங்காமல் விட்டிசைத்து நிற்பது தெரியவில்லையா? 'சற்றுப் பெரிது' என்றோ 'சற்றே பெரிது' என்றோ இருந்தால் அழகாகப் பொருந்தும்.

'அப்படிச் செய்யாமற் போயிருந்தால் நன்றாகவில்லா மலிருந்திருக்கும்.' - என்று ஒரு வாக்கியம். இதில் முன்னும் பின்னும் சொற்கள் அழகாகச் சேரவில்லை. 'செய்யாமற் போயிருந்தால்' - 'இல்லாமலிருந்திருக்கும்' - இரண்டு இடங்களிலுமே வார்த்தைகள் ஒட்டாமல் நலிந்து அழகு குன்றி முரண்பட்டு ஒலிக்கின்றன. இல்லாமலிருந்திருக்கும்; இருந்திராது' - என்ற தொடர்களில் உடன்பாடும், எதிர்

மறையும் அருகருகே நின்று தண்ணீரும், எண்ணெயும் போல ஒட்டாமலிருக்கின்றன.

'திருட்டுக்காகத்தான் திருடன் திருடுகிறான்' என்பது சரியல்ல. ஒரே சொல் திரும்ப வருவது செய்யுளில் அணி. வசன நடையில் பொருளின் மந்த கதிக்கு அதுவே காரணம். 'அவனவன் அவனவனுடைய காரியத்தை அவனவன் பாட்டுக்குக் கவனித்துக்கொண்டு போக வேண்டும்?' - என்று எழுதுவதில் சொல் அடுக்கிக் கொண்டு முடுக்கினாலும் பொருள் தயங்கித் தேங்கி மந்தப்படுகிறது.

உணர்ச்சி வாக்கியங்கள், வினா வாக்கியங்கள், வியப்பு வாக்கியங்கள், - என்று இத்தகைய வாக்கியங்களில் புதிய நடைகளையும், புதிய குறியீடுகளையும், மேற்கொள்வதாக எண்ணிப் பிறழ்ந்த முறைகளை மேற்கொள்கின்றனர் சிலர்.

'ஆம்; வாழ்ந்து கெட்டவள்தான் அந்த வனிதை! பஞ்சைப் பராரிகளை ஏய்க்கும் பணக்காரக் கூட்டத்தில் கஞ்சிக்கு உழன்று கட்டழிந்தவள்தான். ஆம்! கட்டழிந்து கெட்டலைந்து சீரழிந்தவள்தான்' -

காற்படி அரிசியில் காலே அரைக்கால்படி கல் கலந்து கிடக்கிறமாதிரி, ஒரே ஆச்சரியக் குறிகளையும் 'ஆம்'களையும், 'தான்'களையும் காணமுடிகிறதே ஒழிய நேர்மையான கொதிப்பின், நியாயமான வார்த்தைச் சாயலே இல்லை. ஆனால், இந்த நடைதான் இன்று பெருகி வருகிறது. 'புகழத் தக்கது; புகழுங்கள்' - என்று அதனை எழுதுகிறவர்களாலேயே வற்புறுத்தப்பட்டும் வருகிறது.

'நான் அவனுக்கு முன்னாலேயே சொன்னேன் நீ இந்தக் காரியத்தைச் செய்திருக்கக் கூடாதென்று.' - இந்த வாக்கியம் வேறு ஏதோ ஒரு மொழியில் நினைத்துக் கொண்டு தமிழில் சொன்னமாதிரி இருக்கிறது. வினை முற்றுக்கள் முடிக்கு

மிடத்தில் நின்று வாக்கியத்தை நிறைவேற்றிக் காட்டுவது தான் தமிழ் வாக்கியமுறை. 'என்று' - என வினையெச்சம் கடைசியில் நிற்கும்படி எழுதுவது புதுமையாக விளைந்து வருகிற களை.

''தண்ணீர்த் தடங்களிலே, தாமரைப் பொய்கைகளிலே, முந்நீர்க் கழிகளிலே, மூலைக் கரைகளிலே, சாலைத் துறை களிலே, கேணிகூவல்களிலே, கிணற்றுப் பள்ளங்களிலே - எங்கும் வெள்ளப்பெருக்கு; எங்கும் நீர்ப் பிரளயம்; எங்கும் ஊழிப்புனல்.'' - என்று ஈற்றசை ஏகார ஒலியை அடுக்கிக் கவிதை ஆவேசத்தைத் தேவையில்லாத இடத்திலே வர வேற்றுக்கொண்டு, 'இழுத்துப் பறித்து வர்ணித்தே தீருவேன்' என்று பிடிவாதம் பிடித்து எழுத்தாக்கும் வெற்றுச்சொல் வெடிகளும் இப்போது அதிகமாகி வருகின்றன.

''எண்ணத்தில் மண்ணைத்தூவுகிறாயா கண்ணே! உன் கன்னத்தை மின்னலென்றால் காதில் கன்னலென ஒலிக்குதே அச்சொல்! செந்நெற் கழனிகளிலே செந்தமிழர் கூட்டம் அன்னக் காவடிகளாய் உழைத்து என்னென்ன கொடுமைகளை அனுபவிக்கிறது பார். பார்த்து மனம் குமுறு!'' - என்று இந்த மாதிரி அர்த்தமில்லாமல் எதுகை மோனைகளைப் போட்டு எதையாவது எழுதினால் அதை அழகென்று சொல்லப் பாமரர்கள் இருக்கிறார்கள். செங்கற்களைத் தாறுமாறாக அடுக்கிப் போட்டுவிட்டால் வீடாகிவிடாது. ஒலி ஒற்றுமை யுள்ள சொற்களை மனம்போன போக்கில் அடுக்கி மருட்டுவது நடையழகு அன்று. இம்மாதிரி எழுதுகிற அசட்டுத் தனமான தொத்துநோய் இளைஞர்களிடமெல்லாம் வேகமாகப் பரவி வருகிறது. 'நடை' இயல்பாக வரவேண்டியது. திருடன் இராஜ பார்வை பார்க்க முயல்கிற மாதிரி மொழிப் பயிற்சி இல்லாதவன் செய்கிற அசட்டுத் தனங்களை எல்லாம் சிறந்த நடை என்று ஒப்புக்கொண்டு விட்டால் புலமையும் மரபும் என்ன ஆவது?

## மிகவும் பழைய நடை

தறிகெட்டு மனம் போன போக்கில் வளரும் புதிய நடையைக் கண்டிப்பது தவிர, புதர்மண்டிப் பாழடைந்து போன ஒருவகைப் பழைய நடைக்கும் புத்துயிர் அளிக்க வேண்டியிருக்கிறது. சுமார் கால் நூற்றாண்டுக் காலமாகப் பாடப் புத்தகங்கள் என்ற பேரில் மாற்றமோ, மறுமலர்ச்சியோ, இல்லாமல், உண்டுபண்ணிக்கொண்டு வருகிற தலைவலியைத் தான் சொல்லுகிறேன். 1925-வது ஆண்டிலிருந்து இன்று வரை வெளிவந்துள்ள பெரும்பாலான தமிழ்ப் பாடப்புத்தகங்களில் ஒரு மூவாயிரம் தமிழ் வார்த்தைகள் தாம் திரும்பத் திரும்ப இடம் மாற்றி உபயோகிக்கப்பட்டிருக்கின்றனவோ என்று நான் சந்தேகப்படுகிறேன். மொழியில் உள்ள அழகும் நளினமும் பொருந்திய எத்தனையோ நல்ல வார்த்தைகள் புறக்கணிக்கப்பட்டு விட்டன. ஒரே மாதிரியான ஆரம்பம், ஒரே மாதிரியான வளர்ப்பு, ஒரே மாதிரியான முடிப்பு, - ஆகிய பாடப்புத்தக சம்பிரதாயங்களை எந்தப் பாடப் புத்தக ஆசிரியரும் மாற்ற முயற்சி செய்யவில்லை. வாக்கிய அமைப்புக்களும் இந்தக் கால் நூற்றாண்டாக ஒரே மாதிரித் தான் இருந்து வருகின்றன. கால் நூற்றாண்டு என்ன? அறுபது நூற்றாண்டுகள் கழிந்தாலும் ஆமணக்கு விதைகளைப் பிழிந்தால் விளக்கெண்ணெய் தானே வெளிவர முடியும்? என்பது போலிருக்கிறது இந்த நிலை. இந்த நிலை மாறி அழகும், நளினமும், உள்ள வளமான பாடப் புத்தகங்கள் கிடைக்கவேண்டுமானால் வெளியே இருந்து கொண்டு அழகு கொழிக்கிற நல்ல எழுத்துக்களை உருவாக்கும் தமிழ் நன்கு அறிந்த எழுத்தாளர்கள் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் எழுதவேண்டும். தமிழ் நாட்டில் மாணவப் பருவத்திலேயே மொழித் துறையில் விழிப்பும் அறிவுக் கூர்மையும் அடைய முடியாமல் மந்தபுத்தியை உண்டாக்கிய திருப்பணியில் முக்கால்வாசிப் பங்கு தேய்ந்துபோன ஒரே பாதையில் ஒரே

விதமான கருத்துக்களைப் பாடப் புத்தகம் எழுதியவர்களைச் சாருமோ என்று கூடச் சிலர் நினைப்பதற்கு நியாயமிருக்கிறது. சொல்வதற்கு எடுத்துக்கொண்ட பொருள் எவ்வளவு இனிமை யானதாகவும், சுவையானதாகவும் இருந்தாலும் தாங்கள் அதைச் சொல்கிற விதத்தால் படிக்கிறவனுக்குக் கசப்பும் அலுப்பும், உண்டாகச் செய்துவிடுகிறார்கள் பாடப் புத்தகக் காரர்கள்.

'இன்றைக்குச் சற்றேறக்குறைய' - 'மிகையல்ல' - 'நாளொரு மேனி, பொழுதொரு வண்ணம்' - 'உணரற் பாற்று' - 'இளமை தொட்டே' 'சாலச்சிறந்தது' - என்று இம்மாதிரிப் பத்திருபது வார்த்தைகள் மேலோட்டமாக ஒரு அச்சுப் புத்தகத்தைத் திறக்கும்போது தெரியுமானால் அது நிச்சயமாக ஒரு தமிழ்ப் பாடப் புத்தகம் என்று தீர்மானம் செய்துவிடலாம். இந்த வார்த்தைகள் வரக்கூடாதென்பது இல்லை. திரும்பத் திரும்ப வர வேண்டாம். ஒரே புத்தகத்தின் அடுத்தடுத்த பக்கங்களில் அடுத்தடுத்த வாக்கியங்களில் வருவது வாக்கிய அழகைச் சிதைக்கிறது. செய்யுளிலே ஒரே சொல் திரும்பத் திரும்ப வந்தால் அது 'சொற் பின் வரு நிலை' என்னும் அணி ஆகிவிடுகிறது. செய்யுளுக்கு அணி ஆகிற அதுவே வசனத்தில் வந்தாலோ அழகைக் குறைத்துவிடுகிறது. சுவையும், அழகும், உணரமுடிந்த விதத்தில் அரும்பு உள்ளங்களை மலர்விக்கப் பயன்டாத எழுத்தைப் பாடப் புத்தகங்களில் காணும்போது தான் மனம் வருந்துகிறது. அநியாயமாக வரவழைத்துக் கொண்ட ஒரு வறட்டு முதுமையை அல்லது இயல்பாக முதிராத வலிந்த முதிர்ச்சியைப் பாடப் புத்தக ஆசிரியர்களின் எழுத்தில் காண்கிறோம். புதிய ஆர்வம் உள்ளத்து எழுச்சி, நளினமான நினைவுகள், இவற்றை வளர்ப்பதற்குப் பதிலாக முடக்கி ஒடுக்கி அழிப்பதற்குத்தான் பாடப் புத்தகங்கள் பயன் படுகின்றனவோ என்றும் பயப்படுகிறார்கள். இந்தக் கால் நூற்றாண்டாகத் தயாராக இருந்த ஏதோ ஒரு இயந்திரம்

மாறாமல், குன்றாமல், ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்ப அடித்துத் தள்ளியிருப்பதுபோல் தோன்றுகிறதே ஒழியப் புதிய ஆட்கள், புதிய புதிய பெயரில் புதுப்புதுப் பாடப் புத்தகங்களை எழுதியதாகத் தோன்றவில்லை என்று வேடிக்கையாகச் சொல்வதற்கும் இடமிருக்கிறது. ஆக இரண்டு வகையிலும் வளர முடியாமல் இரண்டுங் கெட்டானாக இருக்கிறோம். புதுமையை வளர்ப்பதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள் நியாயத்தையும், மரபையும் மீறிக்கொண்டு அநியாயப் புதுமையில் புகுந்து விடுகிறார்கள். பழமையைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள், அழகையும் சுவையையும் புறக் கணித்து வறட்டுத் தனமான அநியாயப் பழமையில் இறங்கி விடுகிறார்கள். நியாயமான பழமையும், நியாயமான புதுமையும், கலந்து வருகிற வளர்ச்சிக்கான சூழ்நிலை தமிழ் இலக்கியத்துக்கு இன்னும் சரியாகக் கிடைக்கவில்லையோ என்று தோன்றுகிறது. தகப்பன் மகன் சண்டை மாதிரி அல்லது அண்ணன் தம்பிச் சண்டை மாதிரிப் பண்டிதர்களுக்கும், மறு மலர்ச்சி எழுத்தாளர்களுக்கும் ஏதோ ஒரு புகைச்சல் வெளிப் படையாகவோ, மறைமுகமாகவோ, இருந்து வருகிறது.

தமிழ் புதிய வளர்ச்சியைப் பெறுவதற்குப் பழமையின் ஆசியும் அறிவுரையும் வேண்டும். புதுமையின் உழைப்பு வேண்டும். இரண்டும் அல்லது இரு சாராரும், பிணங்கிக் கொண்டே இருப்பதில் அர்த்தமே இல்லை. பழைய பிடிவாதங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் புதிதாக வளருகிற தலை முறைக்கு வழிகாட்டி ஊக்கமும், உற்சாகமும் அளித்து வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். புதியவர்கள் பழமைக்கு நியாயமாகச் சேரவேண்டிய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ❐

# 20. மொழியும் பொறுப்புணர்ச்சியும்

## புதிய விழிப்பு

பழைய இலக்கியங்களைப் பற்றியும், புதிய இலக்கியங்களைப் பற்றியும் ஒருங்கே புதிய விழிப்பொன்று ஏற்பட்டிருக்கும் காலம் இது. முன்பு புரிவதற்கும், புரிந்து கொள்ள முயல்வதற்கும், அருமையாயிருந்த நூல்களும், இலக்கிய இலக்கணச் செய்திகளும் இப்போது எளியனவாகி யிருக்கின்றன. அந்தத் துறையில் தேர்ந்த அறிவும் பயிற்சியும் உள்ளவர்கள் பேச்சினாலும் எழுத்தினாலும், இந்தப் புதிய விழிப்பை உண்டாக்கியுள்ளனர். பல நாட்களாகப் பலர் முயன்ற முயற்சியின் விளைவு இது. இந்த விளைவை நல்ல முறையில் பயன்படுத்திக் காக்க வேண்டும். அவ்வாறு காப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? யார் செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? இவ்வினாக்களுக்கு விடை காணும் முனைப்பே இச்சிறு கட்டுரை.

விழிப்பு ஏற்பட்ட பின்பும் சிறுபொழுது தடுமாற்ற மிருப்பது இயற்கை. ஒளிவந்த பின்னரும் கண்கள் கூசுவதுண்டு. கண்களை மலர்த்தி விழித்தெழுந்தவன் சோர்வினால் தடுமாறி உறக்கத் தளர்ச்சியோடு சுவரில் மோதிக் கொள்வதுபோல் அறிவுச் சோர்வால் பொறுப்பிழந்து விடக்கூடாது. நிலையின் இழிந்துவிடக் கூடாது. நிறையினை இழந்துவிடக் கூடாது.

> ***''தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்***
> ***நிலையி னிழிந்தக் கடை''***

என்ற குறள் ஒழுக்க நிலையை வற்புறுத்துவதற்கே அன்றி, இலக்கியத்துக்கும் பொருந்தும். பொது வாழ்வில் பொறுப்புணர்ச்சி குன்றியவன் தன் நிலையிலிருந்து இழிந்து விடுவது போல இலக்கியத்தில் படைப்போர், படிப்போர்

ஆகிய இரு பாலார்க்கும் பொறுப்புணர்ச்சி குன்றும்போது தம் நிலையிலிருந்து தாழ்கின்றனர். பொலிவு குன்றுகின்றனர். பண்பிழக்கின்றனர். அறியாமையே நிறைந்த மக்கள் அறியாமற் செய்கின்ற பிழைகள் தரைமேல் நடப்பவன் தடுக்கி விழுவது போல் இயல்பானது, குறைந்த விளைவு தருவது. ஆனால் அறிவுள்ளவன், அறிவிருந்தும், பொறுப்பின்றிச் செய்யும் பிழைகள் மலைமேல் ஏறிக்கொண்டிருப்பவன் தடுக்கி விழுவதுபோல அஞ்சத்தக்கது, அருந்துயர் தருவது, அநுதாபப் பட முடியாதது.

## வளர்ச்சியின் வழியில்

படிப்படியாக இயல்பாக வளராமல் தன்நிலை மீறிய விரைவில் வளரும் போது அந்த வளர்ச்சியே ஒருவகை நோயாகிவிடுகிறது. தலையளவிற் சுருங்கித் திரண்டு அழகிய தாகத் தோன்றினால் 'வெண்சங்குபோல் நல்ல கழுத்து' என்று கழுத்தைப் புகழ்கிறோம். கழுத்து தலைப் பருமனுக்கும், தலை கழுத்தின் பருமனுக்குமாக ஒரு விகாரப் பிறவியைக் காண்பதாகக் கொள்வோம். அப்போது, அந்தக் கழுத்து அளவு மீறிப் பருத்திருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அதை வளர்ச்சி என்று ஒப்புக்கொள்ள இயலுமோ? அந்த வளர்ச்சியே நோயல்லவா? உடலின் உறுப்புக்களில் எந்தெந்த உறுப்பு எவ்வெக்காலத்து எவ்வளவில் வளர்ந்தமைய வேண்டு மென்று ஓரியற்கைப் பொறுப்புத் தன் போக்கிலே செயற் பட்டு வருகிறது. அந்தப் பொறுப்பை விஞ்சிய மிகை வளர்ச்சி நோயாவதுபோலப் பொறுப்பின்றி வளரும் அல்லது வளர்க்கப்படும் இலக்கியமும் மொழிக்கு நோயாகும். தனித் தனி வளர்ச்சிகள் ஆரோக்கியமன்று. யாவுமே ஒரு சீராக வளர்ந்த நிலையே ஆரோக்கியம்.

யார் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டு மானாலும் எழுதலாம் என்று நினைத்தல் தவறு. உரை

யாடலாகப் பேசும் பேச்சிலும், சொற்பொழிவிலும் செய்யப் படும் தவறுகள் காற்றோடு போய்விடும். எழுத்தில் செய்யப் படும் பிழைகளோ செய்தவரின் பொறுப்பின்மைக்கு நிலைத்த சான்றாக என்றும் இருந்துவிடக்கூடியவை. தன் மனைவிக்கும், தனக்குமே போதிய உணவு உடை கிடைக்காத குறைந்த வருமானமுள்ள ஒருவன் கட்டுப்பாடாக, சிக்கன வாழ்வு வாழாமல் மேலும் மேலும் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு போவதைக்கூட மன்னித்துவிடலாம். பொறுப் பில்லாதவற்றைப் பொறுப்பில்லாத முறையில் எழுதிக் கொண்டு போவதை மன்னிக்கவே முடியாது. இலக்கியமும், இலக்கியத்தின் பல்வேறு துறைகளும், ஒரு சீராக வளர வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், அந்த வளர்ச்சி ஒரு பொறுப்புணர்ச்சியோடு நிகழவேண்டுமென்பதுதான் இங்கே வற்புறுத்தப்படுகின்றது.

## அறிவும் பொறுப்பும்

நிரம்பிய அறிவு இருக்குமிடத்தில் சான்றாண்மை இருக்கும். சான்றாண்மை யிருந்தால் பொறுப்புணர்ச்சி தானே உண்டாகும். இன்று நாட்டில் அறிவை, இலக்கியத்தை, கல்வியை, இவை போன்றவற்றை வளர்க்கும் கருவிகள் பெருகியுள்ளன. அவற்றை நெறியறிந்து பயன்படுத்தும் பொறுப்புள்ளவர்கள் தாம் இன்னும் பெருகவில்லை போலும். பொறுப்புள்ளவர்கள் பெருகுவதற்கு என்ன செய்யவேண்டும்? முறையான படிப்பும் பண்புமுள்ளவர்கள் புதுமை இலக்கியத் துறையில் புகவேண்டும்.

புதுமை இலக்கியம் என்று இங்கே குறிப்பிடுவது கால் நூற்றாண்டாகத் தமிழில் தோன்றி வளரும் புனைகதைகள், நெடுங்கதைகள், நாடகங்கள், நகைச்சுவைக் கட்டுரைகள் போன்றவற்றையே ஆகும். புது முறையில் எழுதப்படும் கவிதைகளையும் இதிற் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில்

அதிகமாக முன்பே வளர்ந்தும், இனி வளர்ந்துகொண்டு மிருப்பது கதை இலக்கியம். தமிழ் மொழியில் மட்டும் ஓராண்டுக்கு ஐயாயிரம் சிறுகதைகளுக்குக் குறையாமல் பல்வேறு இதழ்கள், தொகுதிகள், வெளியீடுகள் மூலமாக வெளியாகின்றன. ஆண்டுக்கு ஐம்பதுக்குக் குறையாமல் நாவல், நெடுங்கதை, தொடர்கதை போன்றவைகளும் வெளி யாகின்றன. இவற்றில் பொறுப்புணர்ச்சியோடு, அறிவின் கனிவை வெளிப்படுத்தும் முறையில் வெளிவருபவை எவ்வளவின என்று சிந்திக்க முற்படுவது பிழையன்று. ஆயினும் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கு முன்னால், அநுபவங்களைக் கருத்தாக வெளியிடும் எண்ண வளம் பெருகுவதற்கு முன்னால், ஆசை ஒன்றையே, புகழ் வேட்கை(டை)! ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எழுதப்பட்ட எழுத்துக்கள் காலவெள்ளத்தை எதிர்த்து நீந்த முடிவதில்லை. உலக அரங்கிலே அத்தகைய எழுத்துப் படைப்புக்கள் ஏறி நின்றால் தமிழ் மொழியின் பெருமைக்கும், பண்பாட்டுக்கும் பெருமை தேடித் தருபவை சிலவற்றினும் சிலவாகவே இருக்கமுடியும்.

வரதட்சணைக் கொடுமை, திருமணக் குழப்பங்கள், மாமியார் மருமகள் போர், இயற்கையோடு பொருந்தாத காதல் நிலைகள், இவற்றை வழூச் சொற்புணர்வு மிகுந்த நடையால், எழுதிக் காட்டுபவைகளே மிகுதி. மனப் பிடிப்பின்றி, வயிற்றில் ஒட்டாமற் போகும் சத்துக் குறைந்த உணவு போல்வனவே கதைக் கூட்டப் புதர்களாக மண்டியிருக் கின்றன. அந்தப் புதரில் சில மாணிக்கங்களும் உண்டு. அதை நாம் மறுப்பதற்கில்லை. மறைப்பதோ மறப்பதோ கூட விரும்பத் தக்கதன்று. பொறுப்பினையுணர்ந்து பணி புரிபவர்கள் சிலர் எங்கும் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால் பொறுப்பை யுணராதவர்கள் பலராக இருக்கிறார்களே என்றுதான் வருந்தவேண்டியிருக்கிறது. வங்கநாட்டுப் புதுமை

இலக்கியத்தில், மலையாள மொழியில், மராத்தியில் - இவை போல் இன்னும் சில இந்திய மொழிகளில், மனத்தின் ஆழத்தைத் தொட்டுப் பதியும் உயர்தரமான வாழ்க்கை உண்மைகள், கதைகளாக்கப்பட்டுள்ளன. கதைக்குத் தேர்ந் தெடுக்கப்படும் வாழ்க்கை அல்லது அதன் ஒரு பகுதி தன்னிகரில்லாத் தகுதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். தண்டியாசிரியர் பெருங்காப்பிய இலக்கணங் கூறி முடிக்கும் போது, ''நன்னடைத்தாகிக் கற்றோர் புனையும் பெற்றிய தென்ப'' என்று வரையறுக்கிறார் அல்லவா? அந்த வரையறை கதை இலக்கியம் போன்ற புதுத்துறைகளுக்கும் வேண்டும். பொழுது போகாத பொறுப்பிலிகள் சிலர் பொழுதை எப்படிப் போக்குவதென்று தெரியாத பொறுப்பிலிகள் பலர்க்கு எழுதுவதே கதை இலக்கியம் என்ற நிலையை மாற்ற வேண்டும். அறிவும், சிந்தனையும் வளர்ந்து வருகிற சமுதாயத்தில் அந்த வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் இலக்கியங்கள் தேவை. தேவையை நினைவுபடுத்திப் பொறுப்பை உண்டாக்குவது அறிஞர் கடமை. பயிரின் தரத்துக்கேற்ற நிலம் வேண்டும். அதை நாம் தேடுவோம்.

## எதிர்கால இலக்கியம்

வளர்ந்து கொண்டிருக்கிற தமிழ் இலக்கியம் எதிர் காலத்தில் இன்னும் சிறந்த வளர்ச்சியைப் பெறும். பெற வேண்டும் என்ற ஆர்வம் நமக்கு இருக்கிறது. ஆனால், அந்த வளர்ச்சி உண்மையிலேயே தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு வழிகோல வேண்டும்; வாய்ப்பளிக்க வேண்டும்.

கதைகள் மட்டுமே குறிக்கப் பெறுகின்றனவே என்று எண்ண வேண்டாம்; புதுமைக் கவிதை, புதுமைக் கட்டுரைகள், புதுமை நாடகங்கள், ஆகிய புதுமை இலக்கி யத்தின் ஒவ்வொரு துறையையும் ஆக்குவோர் படிப்பும் பண்பும் பொறுப்புணர்ச்சியும் பெறவேண்டும். ஏற்கெனவே

அவற்றைப் பெற்றிருப்பவர்களை வாழ்த்தவும் வணங்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மற்றையவை யாவற்றிலும், மேல் எழுந்து நின்று புதுமை இலக்கியப் பரப்பு முழுவதும் நிறைத்திருப்பவை கதைகளும், நெடுங் கதைகளுமே யாவன. எனவேதான் அவற்றைப் பற்றிச் சற்று விரிவாக இங்கே சொல்ல நேர்ந்தது. இற்றை நாட்களில் எந்தெந்தத் துறைகளுக்குக் கதைகள் தேவைப்படுகின்றன என்று பார்க்கலாம். ஒவ்வொரு திங்களும் வார இதழ்களுக்கு நூற்றுக்கணக்கான கதைகள் தேவைப் படுகின்றன. திங்கள் இதழ்களுக்கும் கதைகள் தேவை. மேடை நாடகங்களுக்கு நல்ல கதைகள் தேவை. திரைப்படங்களுக்கு நல்ல கதைகள் தேவை. பதிப்பகங்கள் ஆயிரக்கணக்கில் புத்தகங்களை அச்சிட்டு விற்பனை செய்து விரைவில் பணம் திரட்டக் கதைகள் தேவை. இழிந்த கொலை, கொள்ளை, காமச் செய்திகளைப் பேசும் கதை நூல்களே விரைவாகச் செலவழிகின்றன என்று புத்தகக் கடைக்காரர்கள் கூறுவதி லிருந்து இந்த நாட்டில் எழுதுபவர்களும், படிப்பவர்களும் எவ்வளவிற்கு 'பொறுப்புள்ளவர்களாக' இருக்கிறார்களென்று தெரியவில்லையா?

மற்ற நாடுகளிலும், மற்ற மொழிகளிலும், முறையாகச் சிறுகதை, நெடுங்கதைகளை, எழுதிப் பொறுப்பும், பயிற்சியும், கைவந்தவர்களே, திரைப் படத்துக்கு எழுதுகின்றனர். ஆனால், இங்கோ முற்றிலும் மாறான நிலை நிலவுகிறது.

முறைப்படி பொறுப்புடன், எழுதத் தெரியாமல் அறிவுலகில் தோற்றவர்களும் அத்தோல்வியையே கருவியாகக் கொண்டு திரையுலகை ஆள்கின்றனர். திரையுலகில் அறிவுடை மையாகத் தோன்றும் செய்திகள் பொதுவாழ்வில் சான்றோர் களால் விரும்பப்படாதவையாயிருக்கின்றன. பொது வாழ்வில் சான்றோர்களால் விரும்பப்படும் பண்புகள் திரையுலகில்

அறியாமையாக இகழப்படுகின்றன. அரசியல் வாழ்வில் படித்தோர், படியாதோர், எல்லோரும் ஓட்டுரிமை பெறலாம். அறிவுலகில் சீர்தூக்கும் உரிமை அறிவுடையவருக்கு மட்டுமே உரியது. திருக்குறளைப் படித்துணர்ந்து தேர்ந்தவர்தாம் அதுபற்றி விவாதிக்கத் தகுதியுடையவர். படித்தவரோ, படிக்காதவரோ, எல்லோருக்கும் உரிமை உண்டு என்னும் குடியரசு முறை அறிவுலகில் செல்லாது.

## எழுத்தாளர்களுக்கு

ஆகவே, எழுத்தாளர்களே! ஒவ்வொரு துறையிலும் நீங்கள் பொறுப்புள்ளவர்களாக - பொறுப்பைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக - இருக்கிறீர்கள் என்பது நினைவுறுத்தப் படுகின்றது. படித்தவர்கள், பண்பட்டவர்கள், நல்லவர்கள், கையிலெடுத்துப் பார்க்கவும் கூசும் இழிந்த இலக்கியங்களை உங்கள் கைகள் படைக்க வேண்டாம். கண்கள் நோக்க வேண்டாம்.

உங்களுக்கு முன்புள்ள பெரும் புலவர்களும், கதைகளை எழுதியிருக்கிறார்கள். சிறு காப்பியம், பெருங் காப்பியம் என்று பகுத்துக்கொண்டு உயரிய உறுதிப் பொருள்களை மையமாக வைத்துக் கவிதை நடையில் எழுதியிருக்கிறார்கள் அவர்கள். அதே செயலை அதனினும் சிறிய அளவில், எளிய முறையில் எளிய உண்மைகளை அமைத்து எல்லோருக்கும் பயன்படும் உரைநடையில் எழுதி வருகிறீர்கள் நீங்கள். இன்னும் விரிந்த அளவில் எதிர்காலத்தில் புதுமை இலக்கியத்தை வளர்க்கப் போகும் பொறுப்பும் உங்களைச் சார்ந்திருக்கிறது. பழைய இலக்கியங்களையும், இலக்கண வரம்புகளையும், மரபுகளையும் புறக்கணிக்காதீர்கள். ஒரு மனிதன் வயதான தன் தகப்பனிடத்தில் அதிகக் கொடுமையாக நடந்துகொண்டானாம். வேளா வேளைக்கு உடைந்த சட்டியில் அவருக்கு உணவு கொடுத்து மனத்தைப் புண்படுத்தினானாம்.

ஒரு நாள் அந்த உடைந்த சட்டியைக் காணவில்லை. அவன் தேடினான். தந்தையைக் கொடுமைப்படுத்திய அந்த மனித னுடைய மகன் ஓடிவந்து, ''அப்பா! அந்தச் சட்டியை நான் தான் ஒளித்து வைத்திருக்கிறேன். தாத்தா இறந்துபோனபின் உங்களுக்கு நான் சோறு போடுவதற்காக அதைப் பத்திரப் படுத்தினேன்'' என்றானாம். இந்தக் கதையில் வரும் கொடுமைக் காரனுக்குத் தந்தையை அவமதித்ததனால் நேர்ந்த மரியாதை தான் பழந்தமிழ் இலக்கியத்தை அவமதிக்கும் புதுமை எழுத்தாளர்க்கும் ஏற்படும். பழைய இலக்கியத்தை அவமானம் செய்தால்தான் புதுமை இலக்கியத்தை வளர்க்க முடியுமென்று நினைப்பது பிழையான அநுமானம்.

முந்தைத் தலைமுறையின் அறிவைப் போற்றவும், மதிக்கவும் தெரியாவிட்டால் பிந்தைத் தலைமுறையின் போற்றுதலும், மதிப்பும் உங்களுக்கு எய்தாது. தமிழ் எழுத்தாளர்கள் இவற்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். வளமும், காலத்தை எதிர்த்து நிற்கவல்ல உண்மை ஒளியும், பொறுப்புமுள்ள புதுமை இலக்கியத்தை உருவாக்குங்கள். பொறுப்பின்றிக் குழந்தைகளைப் பெறுவதை யாவது மனித இனத்தின் பொதுவான பலவீனம் என்ற பெயரில் மன்னிக்கலாம். பொறுப்பின்றிக் கருத்துக்களைப் பெறலாமா? பெறுவதை மன்னிக்கலாமா?

❐

# 21. மொழியும் அறநூல்களும்

## வித்துப் போன்றது

கோவில்களும், அவற்றின் விண்ணுயர் கோபுரங்களும் நம் இறைவுணர்வுக்கு அடையாளமாகலாம். சிற்பங்களும், சித்திரங்களும், இன்னும் எண்ணற்றிருக்கும் நளின நற் கலைகளும் நம் கலையுணர்வுக்கு எடுத்துக்காட்டாகலாம். என்றோ தோன்றி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் காவியங்களும், கவிதைகளும், இலக்கியங்களும் நமது அறிவுத் திறனுக்குச் சான்றாகலாம்.

ஆனால், இத்தனை நூற்றாண்டுகளாகப் பழுத்துப் பயன் பட்டு, முற்றி, முதிர்ந்து, நம் வாழ்க்கையோடு வாழ்க்கையாகக் கலந்து நல்லவற்றை விரும்பவும், தீயவற்றை வெறுக்கவும், கற்றுக்கொடுத்த பண்பை நமக்கு அளித்தது எது? வாழ்க்கையும், உணர்வுகளும் இன்றைய வேகத்தோடு போட்டியிடமுடியாது தவிக்கும் இந்த நாளிலும்கூட நமக்கு அறத்திலும், ஒழுக் கத்திலும் நம்பிக்கை போய்விடவில்லையே! இதற்குக் காரணம் நமது பழமையான அறநூல்களே என்பதில் ஐய மில்லை.

அந்தப் பழமையான அறநூல்களின் கண்டிப்பான கருத்துக்களிலிருந்தும், அழுத்தமான விதிவிலக்குக்களிலிருந்தும், நாம் நழுவியும், விலகியும், வெகு தொலைவிற்கு வழி தவறி வந்துவிட்ட போதிலும் அவற்றின் தோற்றம் நம் கண்களை விட்டு விலகிவிடவில்லை என்றே நான் நம்புகிறேன். அற நூல்கள் விதை நெல்லைப் போன்றவை. வாழ்வை ஒழுங்குப் படுத்தும் உண்மைகளை நாம் அவற்றிலிருந்துதான் பயிர் செய்து வளர்க்க வேண்டும். சமய நூல்கள், இலக்கியங்கள், கவிதைகள், காவியங்கள் என்ற மற்றைய துறைகள் எல்லாம் அறநூல்கள் என்ற விதை நெல்லிலிருந்து பயிர் செய்யப்

பட்டவைதாம். விதை நெல் அழிந்துபோனால் வளமான பயிர்களை உருவாக்க முடியாமற் போய்விடும். 'மின்சார வயரில்' ஒளியை உமிழும் ஆற்றல் வாய்ந்த செப்புக் கம்பிகளை ரப்பரும் பிற குழலும் மூடி மறைத்துக்கொண்டிருக்கிற மாதிரிச் சக்தி வாய்ந்த அறம்தான் உலகியல்களின் உள்ளே மூடுண்டு மறைக்கப் பெற்றுக் கிடக்கிறது.

## சமயமும் அறமும்

சமய நூல்களையும், இலக்கியங்களையும் விட அற நூல்கள் உயர்ந்தவை. பயிரைக் காட்டிலும் வித்துக்கள் உயர்ந்தவை அல்லவா? தனி அற நூல்கள் எல்லாச் சமயங் களுக்கும் பொதுவாக உண்மைகளை உரைக்கும். சமய நூல்கள் தத்தம் சமயங்களின் அளவிற்கும், எல்லைக்கும் ஏற்ப அறங்களின் பயனை அமைத்து உரைக்கும். இலக்கியங்கள் தீபத்தை எரிக்கப் பயன்படுவதற்காக எண்ணெய் ஊற்றிக் கொள்வதுபோல வேண்டிய இடங்களில் வேண்டிய அளவு அறத்தின் சாயலும், உண்மைகளின் சாயலும் படுமாறு கூறி அமைபவை.

'கோதுமை உணவு எல்லோருக்கும் நல்லது' - என்று பொதுப்படக் கூறுவது போன்றவை தனி அற நூல்கள். 'இன்னாருடைய கடையில் இன்ன வகையைச் சேர்ந்த கோதுமையை வாங்கிச் சாப்பிட்டால் நல்லது' - என்று உண்மை பயன் தரும் இடத்தை ஒருவரோடு சார்பு படுத்திக் கூறுபவை போன்றனவே சமய நூல்கள். அவ்வாறன்றி ஒரு படி காய்ச்சிய பாலில் சிறிது குங்குமப்பூத் தூவினாற்போலக் காவியம் முழுதினுள்ளும் கலந்து நிற்கும் அறம் குறை வாயினும் மணம் யாண்டும் மணக்குமாறு அமைபவை போல்வன இலக்கியங்கள்.

> **"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு."**

என்று இப்படிச் சொல்லி அறிவுறுத்துவது தனி அற நூல்.

**''அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமென்ப தியாவரும் அறிகிலார்.''**

என்று இப்படிச் சொல்லி அறத்தின் பயனைத் தன்னொடும் தன் சமயத்தொடும் மட்டுமே சார்பு படுத்தி உரைப்பது சமய நூல்.

..................................................

**நிறை குணத்தவன் நின்னினும் நல்லனால்**
**குறைவிலன் எனக் கூறினள் நால்வர்க்கும்**
**மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்.**

என்று கோசலையோடு சார்த்தி வேற்றுமையில்லா அன்பின் நலத்தைக் கம்பன் கூறும்போது ஒரு கதையில், ஒரு இடத்தில், ஒரு கதாபாத்திரத்தோடு, சார்பு படுத்தி அறம் உரைக்கப் படுகிறது. இது இலக்கியம்.

எனவே, 'அன்பு' என்னும் அறத்தைப் பற்றி அற நூல் சொல்லும்போது அன்பை ஒரு தூய அறமாக எல்லோருக்கும் பயன்படுகிற விதத்தில் சொல்லி முடிக்கிறது. 'அன்பு' என்னும் பொது அறத்தைப் பற்றிச் சமயநூல் கூறும்போது தன் சமயத்தோடும், தன் சமயக் கடவுளோடும் தொடர்புறுத்திக் கூறுகிறது. காவியமோ தன் கதையுடனும் கதாபாத்திரத்துடனும் தொடர்புபடுத்திக் கூறுகிறது.

பத்துப் பன்னிரண்டு பூக்கடைகள் இருக்கிற ஒரு வீதியின் வழியாக நடந்து செல்லும் பொதுவான மனிதனுக்கு எல்லாப் பூக்களிலிருந்தும், எல்லாப் பூக்கடைகளிலிருந்தும், மணம் வருவது போன்றது அறவுணர்ச்சி.

அந்தப் பத்துப் பன்னிரண்டு பூக்கடைக்காரர்களும், 'என் பூக்கள்தாம் நல்லவை', 'என் பூக்களுக்குத்தான் மணம் அதிகம்', 'என் பூக்களையே வாங்கிக்கொண்டு செல்லுங்கள்' - என்று தனித்தனியே கூவி அழைப்பது போன்றது சமயவுணர்ச்சி.

## தத்துவ உணர்வு

மேலே கூறிய அறவுணர்ச்சியும், சமயவுணர்ச்சியும் இணைந்து, இரண்டிலும் கலந்து நடுநிலைமையோடு

தெளிவு பெற்ற உணர்வு ஒன்றுண்டு. அதுவே தத்துவ உணர்வு. சால்போடு தொடர்பு பெற்று வருவது அந்த உணர்வு.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றே பிறர்தர வாரா"**

என்கிற மாதிரிப் பொதுவாகச் சொல்லுவது தத்துவ் உணர்வு. தமிழ் நாட்டில் மட்டுமல்ல, கீழ்த்திசை நாடுகளின் தத்துவ உணர்வே அறங்களும், சமயங்களும், இணைந்த இணைப்புத் தான் என்று எனக்குத் தோன்றுகிறது. பாலும் தேனும் கலந்தாற் போல அறவுணர்ச்சியும், சமயவுணர்ச்சியும் கலந்து உருவான அற்புத ஞானத்தினால்தான் கீழ்த்திசைத் தத்துவக் கலையில் இவ்வளவு அழகும், சுவையும், உருக்கமும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

'அன்பு' அறத்தைப்பற்றி இலக்கியம் கூறும்போது தன் கதையோடும், கதாபாத்திரத்தோடும் தொடர்புபடுத்தி உலகத்துக்குச் சொல்லுகிறது.

அறநூலைப்போல் அறத்துக்காகவே அறத்தைச் சொல்லும் சிறப்புச் சமய நூலுக்கும், இலக்கியத்துக்கும் கூடக் கிடையாது. தத்துவ உணர்வு எதிலும் பட்டுக் கொள்ளாமல் நடுவாகச் சிரித்துக்கொண்டே நடந்து போவதைப்போன்ற சால்புநிலை.

வாழ்க்கைக்கு அறவுணர்வும் வேண்டும். சமய உணர்வும் வேண்டும். தத்துவ உணர்வும் வேண்டும். ஆனால், அற வுணர்வு கலவாத தனிச் சமய உணர்வு நாளடைவில் வெறியாக முறுகிப் போய்விடுகிறது. எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்லனவற்றை எடுத்துக்கொண்டு, எல்லார்க்கும் பொதுவான அறங்களைக் கடைப்பிடித்து நன்றாக வாழலாம். நமது அற நூலாசிரியர்களில் திருவள்ளுவர் கடைப்பிடித்த அறம் இது தான்.

**'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'**

என்று எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான அறத்தை வள்ளுவர் எவ்வளவு அழகாகக் கூறியுள்ளார். 'எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு' - என்று மேற்படி குறளின் உரையிலே வள்ளுவருடைய பொது அற விருப்பத்தை விளக்கிப் பரிமேலழகரும் எழுதியிருக்கிறார்.

**"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"**

என்று சமய வேறுபாடுகள் இன்றி எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவான அறத்தைக் கூறுவதுதான் தனி அற நூலின் இயல்பு. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை இத்தகைய தனி அற நூல்களே. இந்த வகையைச் சேர்ந்த தனி அற நூல்களின் முழுமையான எழுச்சிக் காலம் ஒன்று தமிழில் இருந்தது.

## தனித் தனியாக

ஆனால் அந்தத் தனி அற நூல்களின் எழுச்சி சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என வகை வகையாகப் பிரிந்த சமய உணர்ச்சிகளிலே கரைந்து போயிற்று. எல்லாச் சமயங் களுக்கும் பொதுவான அறங்களையும் கடைப்பிடிக்காமல் அந்தந்தச் சமயங்களுக்கென அமைந்த சிறப்பான அறங் களையும் கடைப்பிடிக்க இயலாமல் தோன்றியபடி வாழ்கிற நிலையே இந்தக் காலத்தில் மிகுதியாகிவிட்டது.

வைணவர்கள் திருவாய் மொழிதான் தமக்கு உரிய தென்றும், சைவர்கள் திருவாசகம்தான் தமக்குரியதென்றும், சமணர்களும், பௌத்தர்களும் சிந்தாமணியும், மணிமேக லையுமே தமக்குரியவை என்றும் அறவுணர்வைத் தத்தம் சமய நூல்களோடு சார்பு படுத்திப் பார்க்கத் தொடங்கினால் எல்லோருக்கும் பொதுவான அற வுணர்வு என்ன ஆவது? ஒரு ஊரில் ஒரு தெருவில் அத்தனை வீட்டுக்காரர்களும், தங்கள்

தங்கள் வீட்டு வாசலை மட்டும் சுத்தமாக வைத்துக் கொள்வதென்று வந்தால் எல்லோருக்கும் பொதுவாகவும், நடுவாகவும் இருக்கிற வீதியை யார் சுத்தமாக வைத்துக்கொள்வது?

ஒவ்வொருவருடைய வீடும் சுத்தமாக இருப்பதுடன் எல்லா வீடுகளும் அடங்கிய வீதியும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் சமய அறங்களைப் போற்றிக் காப்பதுடன், எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான அறங்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

சைவத்தை ஆதரித்து அறங்களைச் சொல்லவில்லை என்பதற்காகச் சைவர்களும், வைணவத்தை ஆதரித்து அறங்களைச் சொல்லவில்லை என்பதற்காக வைணவர்களும் - கிறித்தவ சமயத்தைத் தழுவிப் பேசவில்லை என்பதற்காகக் கிறித்தவர்களும், அதே காரணத்துக்காக முகம்மதியர்களும், திருக்குறளையும், நீதிநெறி விளக்கத்தையும், ஆசாரக் கோவையையும் - புறக்கணித்தால் என் செய்வது? தத்தம் வீடுகளைத் தூய்மையாக வைத்துக் கொண்டு வீதியைக் கவனிக்காமல் விட்டுவிடுவதுபோல் நன்றியற்ற செயலாகும் இது.

## பொது அறம்

அறமும், ஒழுக்கமும் எல்லாச் சமயங்களுக்கும் பொது. அவற்றை விவரிக்கும் அற நூல்களும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானவை. சமய உணர்வு அளவற்றுப் பெருகியிருந்த காலத்தில் தமிழ் மக்கள் ஒரொருகால் இந்தப் பொது உண்மையை மறந்திருந்தனர். இல்லாவிட்டால் திருக்குறள் போன்ற பொது அற நூல்கள் இதற்குள் நாட்டில் எவ்வளவு நன்றாகப் பரவியிருக்க வேண்டுமோ, அவ்வளவு நன்றாகப் பரவாமற் போயிருக்குமா?

தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக இந்த ஒரு குறை இருந்து வந்திருப்பதை வரலாற்றை அடியொற்றியே கண்டு கொள்ள முடிகிறது.

சைவ சமயத்தையும், அந்தச் சமயத்தின் அறங்களையும் சைவர்கள் போற்றி வளர்த்தார்கள். வைணவ சமயத்தையும், அந்தச் சமயத்தின் அறங்களையும், வைணவர்கள் போற்றி வளர்த்தார்கள். எல்லாச் சமயத்துக்கும் பொதுவான அறங் களைக் கூறிய ஆசிரியர்கள் எவர்களோ, அவர்களை எல்லாச் சமயத்தார்களுமே ஒன்று போலக் கவனிக்காமல் இருந்து விட்டார்கள்.

கீதையும், திருமந்திரமும், திருவாசகமும், திருவாய் மொழியும் பரவிய அளவு திருக்குறளும், முதுமொழிக் காஞ்சியும், அறநெறிச்சாரமும் பரவாமற் போனதன் காரணம் இதுதான் என்று நினைக்கிறேன்.

மனித வாழ்க்கைக்குச் சமய உணர்வும், சமயச் சூழலும் இன்றியமையாதவைதாம். ஆனால், பொது அறங்களைக் கடைப்பிடித்து வாழ வேண்டியது சமயங்களைக் கடைப் பிடிப்பதைவிடச் சிறந்த காரியம். சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிக் குளிர்ந்த நிலப்பரப்பே 'பூமி' என்று கூறப்படுவது போல் பொது அறங்களிலிருந்து பிரிந்து கிளைத்து விரி வடைந்தவையே சமயங்கள்.

**'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு'**

என்று இவ்வாறு உலகுக்கு இறைவனின் இன்றியமையாமையை மட்டும் வற்புறுத்தி அவ்வளவில் அமைவது அற நூல்.

**''தீர்த்தம் என்பது சிவகங்கையே**
**ஏத்தருந்தலம் எழிற் புலியூரே**
**மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே''**

என்று சிவகங்கைத் தீர்த்தமும், புலியூரும், கூத்தப் பெருமானுமே இன்றியமையாதவை எனப் பொது அறத்தைக் குறுக்கிப் பிரித்துத் தன் எல்லைக்கு ஏற்ப ஆக்கிக் கூறுவது சமய நூல்.

## நமது பெருமை

சமயமும், இலக்கியமும் பயிர் செய்யும் நிலங்களைப் போன்றவை. பொதுவான அற நூல் என்ற விதை நெல்லை விதைத்த பின்புதான் இவற்றில் விளைவு ஏற்பட முடியும். தொடர்ந்து என்றென்றும் நல்ல விளைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்று நாம் விரும்புவோமானால் அற நூல்களாகிய விதை நெல்லைப் போற்ற வேண்டும், பேண வேண்டும். நல்வினை வயமாகத் தமிழர்களுக்கு இத்தகைய சமயச்சார்பற்ற பொது அற நூல்கள் நிறைய இருக்கின்றன. முகம்மதியத் தமிழர், கிறித்தவத் தமிழர் - எவரும் படித்துக் கடைப்பிடிக்க ஏற்ற அறங்களைப் பொதுவாக வகுத்துக் கூறும் அற நூல்கள் இவை. இவற்றுள் தலை சிறந்தது திருக்குறளாகும்.

இப்படிப்பட்ட அற நூல்களைப் பெற்றிருப்பதற்காக நாம் நிச்சயமாகப் பெருமைப் படலாம். சமயங்களின் சார்பில் லாமல் பொது அறங்களைக் (Common Ethics of Life) கூறும் நூல்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உண்டாக்கி வைத்துக்கொண்டிருப்பது தமிழ் மொழிக்கே சிறப்பு.

நாகரிகமும், அறிவியலும் வளர்ந்து தனித் தனிச் சமய உணர்வுகள் குன்றிப் பொதுவான அறவுணர்வுகளால் உலக மனிதர்கள் உறவுகொள்ள வேண்டுமென்று அறிஞர்கள் விரும்புகிற நூற்றாண்டு இது. இந்த உலகளாவிய பொது வாழ்வின் பொது அறங்களையும், பொது ஒழுக்கங்களையும் தொகுத்து, நமது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருக்குறளை ஒத்த நூல்களாகச் செய்திருக்கின்றார்கள் என்பதை நினைக்கும் போது எவ்வளவு இறும்பூது கொள்ள முடிகிறது. நாம் தமிழர் களாகப் பிறந்ததற்காகப் பெருமைப் படுவதைவிட அதிகமான பெருமையை அறத்தினின்றும், ஒழுக்கத்தினின்றும் வழுவிப் போகாமல் வாழ நமக்கு உதவ இத்தனை அற நூல்கள் உள்ளன என்பதற்காகவே அடையலாமே.

❐

## நா.பா.வின் கட்டுரைகள்

- மொழியின் வழியே
- சொல்லின் செல்வம்
- திறனாய்வுச் செல்வம்
- புதிய பார்வை
- கடற்கரை நினைவுகள்
- சிந்தனை மேடை
- பழந்தமிழர் கட்டிடக் கலையும் நகரமைப்பும்
- கலித்தொகை, பாரிபாடல் காட்சிகள்
- கவிதைக் கலை


தமிழ்ப் புத்தகாலயம்

ஃப்ளாட் எண் G 3/ 8, மாசிலாமணி தெரு

பாண்டி பஜார், தி. நகர், சென்னை–600 017

அஞ்சல் பை எண் : 8833 : ✆ 434 5904

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வெப் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com